கல்கி


KALKI 27-2-1977

75 காசு





ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணாப் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும்
'ஞ்ஞான சாதனையாம் ஃபேர்
ண்ட் லவ்லி இரு வழிகளில்
ணி செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு. சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி


தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-FALOV-6-140 TM [R]


பாரதப் பெருமை பேசும்
சுகபோக சோப்புகள்
மைசூர்
ஸாண்டல்
BANGALORE
கவர்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்

MCA-SS-60 Tam



நினைக்கும் நெஞ்சு
இனிக்குமே, மணக்
கோலத்தில் அன்று நீங்கள்
நின்ற நன்னாள்—மணியான மணப்பெண்.
என்று மலர்மாரி தூவினார்களே உங்கள் மீது.
இன்றோ, உங்கள் மகளுக்குத் தை பிறந்தாச்சு,
வருகிற வாரம் மேளம் முழங்குமே. நினைவுகள் எல்லாம்
நிலைத்திட வேண்டுமன்றோ? அதற்கொரு ஆல்பம் வேண்டும்
படமெடுக்க ஒரு க்ளிக்-III

விலை:
ரூ. 70.25.
எக்ஸைஸ் தீர்வை
உள்ளிட்டது.
தல வரிகள்
தனி.

Agfa®

க்ளிக் III

குறிவைத்துச் சடக்கெனச் சுடும் காமெரா.



AGI

விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
மார்ச்சண்ட் சேம்பர்ஸ், 41 நியூ மெரின் லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளைகள்: பம்பாய் ● நியூ டெல்லி ● கல்கத்தா ● சென்னை.
® புகைப்படச் சாதனத் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட்,
ஆண்ட்வெர்ப்பீவாகுடன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

தயாரிப்பாளர்கள்: **நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,** பரோடா ● பம்பாய்

SIMOES/AG/17C TM

கல்கி



1977 பிப்ரவரி 27

அநல ௵

மாசி 16

ராஜாஜி நினைவு

அழைத்தவரை உயர்த்தியவர்

கல்லூரி மாணவனாக நான் இருந்தபோது சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேர வையின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பங்கு பற்றினேன். ராஜாஜி, விழா நாளன்று சரியாக 4–30 மணிக்குக் கல்லூரியில் வந்து இறங்கினார். அவரை வரவேற்க நின்றிருந்த என்னை முந்திக்கொண்டு சென்ற கல்லூரியின் முதல்வர் திரு பாலகிருஷ்ண நாயர், என்னை ராஜாஜி அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். ராஜாஜி சிரித்துக் கொண்டே, "அவரை எனக்குத் தெரியும்", என்று சொன்னதோடு, "Ramamurthi you may introduce me to your Principal" என்றும் கூறினார். வாழ்க்கையில் மிக உயர்ந்த பதவியை அலங்கரித்த அவர் அந்தச் சந்தர்ப்பத்திலும் தன்னை அழைத்த வர்களை உயர்த்திய நிலையை என்றும் பெரு மிதத்தோடு எண்ணிப் பார்க்கிறேன்.


— **திண்டிவனம் ராமமூர்த்தி**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

(அரக்கோணம், ராஜாஜி சிலைத் திறப்பு விழா நினைவு மலரிலிருந்து.)

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




நகைச்சுவை எழுத்தாளர் கோமதி ஸ்வாமிநாதனின் குமாரன் செல்வி **ஆர். எஸ். ராஜு**வுக்கும் (என்ஃபீல்ட் இந்தியா நிறுவனம், சென்னை) தென் பிராந்திய ரயில்வேயைச் சேர்ந்த ஸ்ரீ தியாகராஜனின் குமாரி செள. **வேதா**வுக்கும் 3-2-77 அன்று சென்னையில் நடந்த திருமணத்துக்குப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நகரப் பிரமுகர்களும் நண்பர்களும் உறவினர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள். வாழ்க மணமக்கள்



மதராஸ் அட்வர்டைஸிங் கம்பெனி எக்ஸிக்யூடிவ் **திரு H. வித்யாசங்கருக்கும்** (Son of Sri K. S. Hariharaputran) சென்னை சித்ரா ஏஜன்ஸீஸ் ஸ்ரீ K. S. ஈஸ்வரன் அவர்களின் குமாரி செள. **பிரபாவுக்கும்** அண்மையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் அன்று மாலை நடந்த வரவேற்புக்கும் ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்கள்.

வாழ்க மணமக்கள்



மங்கையிடம் கொஞ்சும்
மனோலயங்கள் ஆயிரம்
மாறும் லயங்களின் மென்மை அனைத்தும் தெளிந்து, பெண்மை கொஞ்சும் ஆடைகள் அனேகம் அவளைத் தழுவிடப் படைக்கிறது ஜாஸ்மின்; நகம் முதல் சிகை வரை அவ-ளைத் தனித்திடும் பெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அணிவீர் ஜாஸ்மினின் அருமை லேஸ்-கள்; பூப் பின்னல் துணிவகைகள்; வண்ண பிரிண்ட்களில் ஜெர்ஸி, டஃபேட்டா, க்ரேப், ப்ரொகேட் என்றிவைகள். வீட்டுக்கு அழகு கூட்டிடச் செய்யும் அலங்காரத் துணி வகையுடன், ஜாஸ்மினின் உளங்கவர் லேஸ் திரைச் சீலைகள்.
Jasmine®
லேஸ்
பெண்மை அணியும்
பெண்மை
Professional Motivators/Jasmine

போட்டியிடும் தேர்தல் அறிக்கைகள்

க. சந்தானம்

எல்லா அரசியல் கட்சிகளுமே தங்கள் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன என்றாலும் நான் இந்தக் கட்டுரையில் காங்கிரஸ், ஜனதா கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை மட்டுமே ஆராய்கிறேன். இந்தக் கட்சிகள் தாம் தேசத்தின் எதிர்கால அரசியல், பொருளாதார சமூகக் கொள்கைகளை நிர்ணயிக்கப் போகின்றன.

ஜனதா கட்சிக்கு எந்தவிதமான செயல் திட்டமும் இருக்க முடியாது என்று அவசர முடிவுக்கு வந்த காங்கிரஸ் தலைவர்கள் ஜனதா கட்சியின் விரிவான தேர்தல் அறிக்கையைப் படித்து அதிசயப் பட்டிருப்பார்கள். அவர்கள், 'நமது கட்சியின் தேர்தல் அறிக்கையில் இந்தக் கொள்கைகள் சில இடம் பெற்றிருக்கக் கூடாதா?' என்று ஏங்கினாலும் வியப்பதற்கில்லை.

இருபது அம்ச, ஐந்து அம்சத் திட்டங்களை மீண்டும் வலியுறுத்தியது போக, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை பின்வரும் முக்கிய திட்டங்களை விவரிக்கிறது. (1) சிறுபான்மையினர் நலனைக் காப்பது. (2) வன்முறை, கட்டுப்பாடின்மைக்கு முடிவு கட்டுவது. (3) ஏழைமை, அறியாமை, வியாதி, ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை நீக்குவது (4) ஒருவரையொருவர் ஏய்த்துப் பிழைப்பதற்கும் ஒருவனுக்கு மற்றொருவனை விட அதிகச் சலுகை கிடைப்பதற்கும் முடிவு கட்டுவது. (5) விவசாயத்தை நவீனமாக்குவது. (6) சமூகத்தில் பலவீனர்களின் நலனைக் காப்பது. (7) அரசுத் துறையை விரிவு படுத்தித் தனியார் துறைக்கும் வாய்ப்பளிப்பது (8) உற்பத்திக்கு வழி வகுக்கும் வேலை வாய்ப்புக்களைப் பெருவாரியாக அதிகரிப்பது. (9) உழைப்பாளர் நலனைக் காப்பது. (10) நியாய விலையில் அத்தியாவசியப் பண்டங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வது. (11) எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்கச் செய்வது. (12) சமூகநலத் திட்டங்களை விஸ்தரித்து மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுத்து மருத்துவ வசதிகளைப் பெருக்குவது.

இவற்றுக்கு மறுபுறத்தில் ஜனதா கட்சி ஒரு பத்தொன்பது அம்ச அரசியல் திட்டம், பதின்மூன்று அம்ச பொருளாதாரத் திட்டம், பதினைந்து அம்ச சமூக நலத் திட்டம் ஆகியவற்றை மக்கள் முன் சமர்ப்பித்திருக்கிறது. இவை மேலே விவரித்த காங்கிரஸ் திட்டங்களை உள்ளடக்கி யிருப்பதோடு வேறு பல புதிய கருத்துக்களையும் வெளியிடுகின்றன.

பொருளாதாரத் திட்டங்களைப் பொறுத்த மட்டில் இரு கட்சிகளுக்குமிடையே பொதுவான அம்சங்கள் நிறையவே உள்ளன. பொருளாதார முன்னேற்றம், விவசாயத்தில் விசேஷ கவனம், நியாய விலையில் அத்தியாவசியப் பண்டங்களைக் கிடைக்கச் செய்வது ஆகியன இரு கட்சிகளுக்கும் பொதுவான அம்சங்கள். ஆனால் ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் சில விசேஷத் திட்டங்கள் உள்ளன. இவை, ஜனதா கட்சியைக் குறை கூறும் மிகத் தீவிர காங்கிரஸ்வாதி கூட வரவேற்க வேண்டியவையாக அமைந்துள்ளன. அவை, மக்களின் அடிப்படை உரிமைகளிலிருந்து சொத்துரிமையை நீக்குவது. வேலை செய்யும் உரிமையை வலியுறுத்துவது, அனைவருக்கும் வேலை வாய்ப்புத் தரத் திட்டம் வகுப்பது, நகர்ப்புற மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குவது., சமூகப் பாதுகாப்பை உருவாக்குவது ஆகியன.

சமூகத் துறையிலும் இரு கட்சிகளுக்கும் பொதுவான பல அம்சங்கள் உள்ளன. அறியாமையை நீக்குவது, வீட்டு வசதியும் சட்ட ஆலோசனையும் அளிப்பது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை விஸ்தரிப்பது முதலியன.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பொறுத்த மட்டில் இரு கட்சிகளுமே அது கட்டாயமாக அமலாக்கப்பட மாட்டாது, மக்களே விரும்பி ஏற்கும் திட்டமாக இருக்கும் என்று வலியுறுத்துகின்றன. ஜனதா கட்சி அறிக்கையில் கடந்த காலத்தில் பலவந்தமாகக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை பல இடங்களில் செய்யப்பட்டதாகவும்

கல்கி மலர் 36 இதழ் 31

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்றும்கூட ஒரு கருத்து காணப்படுகிறது.

என் அபிப்பிராயத்தில் பலவந்தப்படுத்த லுக்கு எதிர்ப்புத் தெரிவிப்ப தெல்லாம் அனுவசியம். ஆணும் பெண்ணும் கல்யாணம் செய்துகொள்ளவும் குழந்தைகள் பெறவும் தடை ஏதும் விதிக்காத வரையில் மூன்று குழந்தைகளுக்கு மேல் எந்தத் தம்பதியும் பெற்றுக் கொள்ளக் கூடாது' என்று சட்ட பூர்வமாகவே உச்ச வரம்பு விதித்து விடலாம். இதற்கு ஆட்சேபணை எழ அவசியமே இல்லை. நகர்ப்புற நிலத்துக்கும் விவசாய நிலத்துக்கும் உச்சவரம்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் பிறக்கும் குழந்தைகளுக்கு உச்ச வரம்பு விதிப்பதும். மூன்றாவது குழந்தை பிறந்ததும் கணவன் மனைவி இருவரும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுவிட வேண்டும் என்று எளிய சட்டம் ஒன்று இயற்றி அறுவைச் சிகிச்சைக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து விட்டால் போதுமானது. இப்படிச் செய்யாமல் போனால் ஒரு பக்கம் அறிவாளிகள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கட்டுப்படுத்த, அதே சமயம், அறியாமையில் உழல்வோரும் சுயநலமிகளும் கட்டுப்பாடின்றி மக்களைப் பெற்றுக் கொண்டே யிருப்பார்கள்.

இரு கட்சிகளில் எதுவுமே பூரண மது விலக்கைத் தன் சமூக நலத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளாதது எனக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. காங்கிரஸ் கட்சியில் மட்டுமின்றி ஜனதா கட்சியிலும் பெரும்பாலான தலைவர்கள் மது விலக்குக்கு ஆதரவானவர்கள்தாம் என்பது எனக்குத் தெரியும். இந்தத் திட்டம் தேர்தல் சாணக்கியம் கருதி அறிக்கைகளில் சேர்க்கப் படவில்லை எனக் கருதுகிறேன்.

அரசியல் துறையில்தான் இரு கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும் வெகுவாக மாறுபடுகின்றன. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை நெருக்கடி நிலைப் பிரகடனத்தை நியாயப் படுத்தப் பார்க்கிறது. பிரகடனத்தினால் பெருமளவு பயன் விளைந்திருப்பதாகக் கூறுகிறது. ஆனால் நெருக்கடி நிலைப் பிரகடனம் இன்னும் எத்தனை காலம் நீடிக்கும், எதிர்காலத்தில் இந்த ஆயுதம் அடிக்கடி பயன் படுத்தப் படுமா என்பதெல்லாம் பற்றி மௌனம் சாதிக்கிறது.

இந்த விஷயத்தில்தான் ஜனதா கட்சி தேர்தல் அறிக்கை நாட்டுக்கு நலன் பயக்கும் நல்ல கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்கிறது. பத்தொன்பது அம்சத் திட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. (1) நெருக்கடி நிலைப் பிரகடனத்தை ரத்து செய்தல் (2) அடிப்படை உரிமைகளைத் திரும்பவும் வழங்குதல் (3) மிசா சட்டத்தை ரத்து செய்தல் (4) நெருக்கடி நிலைப் பிரகடனம் அமுலிலிருந்த காலத்தில் காங்கிரஸ் அரசு நிறைவேற்றிய எல்லா அரசியல் சாசன மாறுதல்களையும் சட்டங்களையும் ரத்து செய்தல்.

பத்திரிகைகளைப் பற்றி ஜனதா தேர்தல் அறிக்கை சிறப்பாகக் குறிப்பிடுகிறது. பத்திரிகைத் தணிக்கையை ரத்து செய்தும் ''ஆட்சேபகரமான விஷயங்களைப் பிரசுரிப்பதைத் தடை செய்யும்'' சட்டத்தை ரத்து செய்தும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது ஜனதா கட்சியின் கொள்கை, பத்திரிகைகள் எவ்வித குறுக்கீடு அல்லது தொந்தரவுக்கும் ஆளாகாமல் கவனித்துக் கொள்வதாக உறுதி அளிக்கிறது ஜனதா தேர்தல் அறிக்கை.

அகில இந்திய ரேடியோ, டெலிவிஷன், அரசின் திரைப் படப் பிரிவு ஆகியவற்றை அரசுச் சார்பற்றதாக ஆக்கித் தனியான சுதந்திர நிறுவனங்களாக விளங்கச் செய்வதும் ஜனதா கட்சியின் கொள்கை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவை அரசாங்கத்தின் தலையீடு ஏதுமின்றி இயங்கும். கட்சிப் பற்றற்ற முறையில் சில அடிப்படைக் கொள்கைகளை மட்டும் அவற்றுக்கு ஜனதா அரசு — பதவிக்கு வருமேயானால் — வகுத்துத் தரும்.

ஜனதா, காங்கிரஸ் இரு கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கைகளை எல்லா மொழிகளிலும் அச்சடித்துப் பரவலாக மக்களுக்குக் கிடைக்கச் செய்யுமென்று நம்புகிறேன். வேட்பாளர்களும் அவர்களின் ஏஜெண்டுகளும் வாக்காளருக்கு ஆசை காட்டுவதையும் லஞ்சம் வழங்குவதையும் தவிர்த்துக் கொள்கை விளக்கங்களோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வேட்பாளரிடம் உள்ள கவர்ச்சியாலோ அல்லது அவரது ஜாதி போன்ற காரணங்களாலோ மக்கள் கவரப் படாமல் கொள்கைகளின் அடிப்படையில் வாக்களிப்பது சாத்தியமாகும்.

தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மை நியாயத்துடனும் நடந்தால் மட்டும் பாரத ஜனநாயகத்துக்குப் போதாது. வாக்காளர் தங்கள் மனச்சாட்சிக்கு விரோத மின்றித் திட்டங்கள், கொள்கைகள் அடிப்படையில் வோட்டளிப்பார்கள் என்ற ஒரு நல்ல பாரம்பரியமும் இங்கு உருவாக வேண்டும்.

வேட்பாளர்களிடம் உள்ள ஒழுக்கம், திறமை ஆகியவற்றையும் கவனத்தில் கொள்ள நேரும்தான். ஆனால் இவை ஏற்படுத்தும் பாதிப்பு இரண்டாம் பட்சமாகவே இருக்க வேண்டும்.


(சுயராஜ்யாவில் எழுதியது)




அடக் கடவுளே!

பம்பாய் மருத்துவமனை ஒன்றில் ஒரு நோயாளிக்குப் பாலுக்குப் பதிலாக பெட்ரோல் கலந்த தண்ணீரைக் கொடுத்து விட்டார் ஒரு நர்ஸ். 'கவனக் குறைவாகக் கொடுத்துவிட்டேன், சாரி' என்றார் அவர்.

© டைம்ஸ் ஆப் இண்டியா - ஆர். எம்.


ஜனதா தேர்தல் அறிக்கை
சோஷலிஸப் பொருளாதார திட்டங்கள்
இ.காங்கிரஸ்
அந்த நாற்காலி ஆட்டங் கண்டு விடும்! இதுலே வந்து உட்காருங்க!
ஜனதா
காங்கிரஸ்
சஞ்சய்
ஜனதா நிலையான அரசு அமைக்க முடியாது என்று சஞ்சய் சொல்கிறார்!
!
!
அ.இ.அ.தி.மு.க
தி.மு.க



ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்...
சுவைமிகு
சாக்கலேட் மணத்துடன்!



நீங்கள்
ஆரோக்கியமுடனும்
சக்தியுடனும் விளங்கத்
தேவையான
இந்த 23 அத்தியாவசிய
"ஊட்டச் சத்துக்கள்"
அனைத்தும் நிறைந்த ஒரே பானம்

காம்ப்ளான்®

மட்டுமே.

புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(cl வடிவில்)
பொட்டாஷியம்
இரும்புச் சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1

ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கோலின்
கால்ஷியம்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் சி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே

"ரவி சாப்பிட மிகவும் படுத்துவான். நல்ல வேளை, சாக்கலேட் சுவை நிறைந்த காம்ப்ளான் அவனுக்கு மிகவும் பிடிக்கிறது. அவனுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் அது தருகிறது" என்கிறார் ரவியின் அன்னை.

காம்ப்ளானில் உள்ள 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் தரும் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கிய பானமும் தருவதில்லை. எனவே அவனுக்கு எத்தகைய போஷாக்குப் பற்றுக்குறை யிருந்தாலும், காம்ப்ளான் அவனை ஆரோக்கியமுடன் வைத்திருக்கும்.

ஏலக்காய்-
கேசரி, மற்றும்
சாதாரண
காம்ப்ளான்
கூடக்
கிடைக்கிறது.



காம்ப்ளான்®

வேறு எந்த ஆரோக்கிய
பானமும் பரிபூரணமானதல்ல.

உலகெங்கும் உபயோகிக்கப்படுவது. **க்ளாக்ஸோ** ஆராய்ச்சியால் உருவானது.

CMGC 70-203 TM

“ஆறுகால் ஸ்தோத்திரம்”



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

(8)

ஜீவனம் நடத்துவதற்கு எதெது அத்தியாவசியமோ அதற்கு மேல் ஒரு துரும்பு கூட வைத்துக் கொள்ளாமலிருப்பதுதான் முறை. எதெது இல்லாவிட்டால் நம்மால் ஜீவிக்கவே முடியாதோ, அவற்றோடு நம் தேவைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற ‘அபரிக்ரஹம்’ என்ற உயர்ந்த கொள்கை. ஆகையால், வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான அர்த்தம் (பொருள்) இருந்தும் அதற்கு மேல் ஒருத்தன் (அர்த்தார்த்தி) பகவானிடம் பிரார்த்திக்கிறான் என்றால் அது பேராசைதான்; எனவே, அது தப்புத்தான். ஆனால் இவனையும் ஏன் கிருஷ்ண பரமாத்மா நாலு வித பக்தர்களில் ஒருத்தனாகச் சிலாகித்துச் சொல்கிறார் என்றால், அதற்கு ஒரு நிஜமான அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

அதாவது, லோகத்தில் பல விதமான தர்ம காரியங்கள், சமூகப் பணிகள் நடந்தாகவேண்டியிருக்கிறது. ஒரு கோயிலைப் புனருத்தாரணம் பண்ணிக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டியிருக்கிறது. வித்யாசாலை வைக்க வேண்டியிருக்கிறது. அநாதாசிரமங்கள் வைக்க வேண்டியிருக்கிறது. வேத வித்துக்களை ரக்ஷிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பல பெரிய காரியங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் நிறையப் பணம் தேவைப்படுகிறது. இந்தப் பணம் எங்கிருந்து வரும்? தங்கள் செலவுக்குப் போக தர்மம் செய்யக் கூடிய தனிகர்கள் இருந்தால்தானே அவர்களிடமிருந்து நல்ல காரியங்களுக்காக திரவியம் கிடைக்க முடியும்? இந்த மாதிரி, தனக்கென்று இல்லாமல், தன் தேவைக்கு மேற்பட்டதை லோகோபகாரமாக தர்மம் பண்ணுவதற்கே ஒரு அர்த்தார்த்தி பகவானிடம் பிரார்த்தனை பண்ணினால், அப்படிப்பட்ட பிரார்த்தனையை பகவான் ஒப்புக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

வர்ணாச்ரம தர்மங்கள் யதோக்தமாக நடைமுறையில் இருந்த காலத்திலேயே, பிராம்மணனுக்கு அபரிக்ரஹம், சமுத்திரத்தைத் தாண்டிப் போகக் கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகளைப் போட்ட சாஸ்திரம், வைசியர்களுக்கோ, ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்று உபதேசம் பண்ணிற்று. என்ன காரணம்? அப்படி அவர்கள் திரவியம் தேடினால்தான் அநேக தர்ம காரியங்கள் நடக்க முடியும். நடுவே அவர்கள் கொஞ்சம் அதிக சௌகரியம் (லக்ஷரி என்கிற போக்ய வாழ்க்கை) பெற்றாலும் பெற்று விட்டுப் போகட்டும்; அவர்கள் செய்கிற தானத்தினால் இந்த தோஷம் நிவிருத்தியாகிவிடும். கொடுக்கக் கொடுக்கத் தானாகவே ‘லக்ஷரி’ பிடிக்காமல் போய்விடும். தனக்கு வசதி பண்ணிக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே ஆவல் அதிகமாகும். அப்படியே இவன் தனக்காக ஒரு பங்களா வைத்துக் கொண்டாலும், அதிலே பத்து ஏழைகளுக்கு இடம் கொடுக்கத் தோன்றும்; ஒரு கார் வைத்துக் கொண்டால் பிறத்தியார் நாலு பேருக்கு உதவியாக அதைக் கொடுக்கத் தோன்றும்.

மொத்தத்தில் ஞானியாகவும், ஞானத்தைத் தேடும் ஜிக்ஞாஸுவாகவும்தான் இருக்க வேண்டுமென்பதில்லை — ஆர்த்தனாகவோ, அர்த்தார்த்தியாகவோ இருந்தால் கூடப் பரவாயில்லை; ஏதாவது ஒரு விதத்தில் பகவான் என்று ஒருத்தனை நம்பி அவனிடம் போய்விட்டால் போதும். கொஞ்சம் கொஞ்சமாக இதுவே இவனை மேலே அழைத்துக் கொண்டுபோகும். முதலில் நிறையச் செல்வம், செல்வாக்கு வேண்டும் என்று பிரார்த்தித்தால்கூட, காலக்கிரமத்தில் தானாக இந்த மாதிரி ஆசைகள் குறையும். அப்புறம் ஒரு கஷ்டம், சிரமம், வியாதி என்பதற்குக் கூடப் பிரார்த்திக்காமல், நல்ல ஞான வைராக்யாதிகளுக்காகவே பிரார்த்தனை பண்ணத் தோன்றும். அதற்கப்புறம் இந்தப் பிரார்த்தனை கூட நின்று போய், பக்தியில் உள்ள ஆனந்தத்துக்காகவே பக்தியாக இருக்கிற உயர்ந்த நிலைக்குப் போய்ச் சேரலாம்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



திருவாரூரைச் சிறப்பிக்கும் சிங்கப்பூர்

கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளுமே திருவாரூரில் பிறந்தது ஓர் அதிசயம்.

அதைவிட அதிசயம் ஒன்று உண்டென்றால் அது, மும்மூர்த்திகளின் நினைவைப் போற்ற நடக்கும் திருப்பணி சிங்கப்பூர் பிரமுகர் ஒருவரது கவனத்தைக் கவர்ந்து அவரது அமோகமான உதவியைப் பெற்றதுதான்!

தியாகராஜரின் மறைவு நாளில் திருவையாற்றில் ஆராதனை நடத்துவது போல், மும்மூர்த்திகளும் பிறந்த வீடுகளைத் திருவாரூரில் வாங்கி, திருத்தியமைத்து, அவர்களது பிறந்த தினங்களின்போது அங்கே விழா எடுத்து மகிழ வேண்டும் என்று சங்கீத உலகம் நினைத்தது. உள்ளூர் சபையோடு சென்னையிலும் டாக்டர் வே. ராகவன் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்டு முக்கியஸ்தர்கள் பலர் அடங்கிய குழு அமைந்தது. சங்கீத அன்பர்களான பல செல்வந்தர்களின் நன்கொடைகளுடன் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பல இன்னிசைக் கச்சேரிகளை நடத்திப் பெற்றுத் தந்த பெருந் தொகையும் சேர்ந்தது.

வீடுகளை வாங்கும் பணியிலேயே பல இடையூறுகள் எதிர்ப்பட்டாலும் அவற்றைச் சமாளித்து 'கமிட்டி' வெற்றி கண்டது. அவ் வீடுகளைச் செப்பனிடும் பணி முடிந்த கையோடு ஆண்டுதோறும் மும்மூர்த்திகளின் பிறந்த தினங்களின்போது ரசிகர்கள் கூடவும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்தவும் ஓர் அரங்கம் அமைக்க வேண்டும் என்ற ஆசை இயல்பாக எழுந்தது.

மறுபடியும் நிதி திரட்ட வேண்டுமே என்று யோசித்தபோது இறையருள், சிங்கப்பூர் பிரமுகர் திரு கோவிந்தசாமிப் பிள்ளை மூலம் இயங்கியது. லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய்க்கு மேல் வழங்கி மிக நேர்த்தியான மண்டபம் எழ வகை செய்தார் வள்ளல்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்வளவு பெரிய தொகை தரவேண்டியிருக்கும் என்று திரு கோவிந்தசாமி பிள்ளையே ஆரம்பத்தில் எதிர்பார்க்கவில்லை. வேலை நடக்க நடக்க முதலில் போட்ட 'எஸ்டிமேட்' மாதிரி உயர்ந்து கொண்டே போகும் என்பது வீட்டைக் கட்டிப் பார்த்த எவருக்கும் தெரியும். திரு கோவிந்தசாமிப் பிள்ளை சளைக்காமல் மண்டபம் கட்டி முடியும்வரை திட்டமிட்டதை விடக் கூடுதலான தொகைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தார்!

'சிங்கப்பூர் திரு கோவிந்தசாமிப் பிள்ளையின் உபயம் இது' என்று திருவாரூரில் பேசப்பட்ட போது உள்ளூர் மக்கள், ''ஓ! 'முன்பு நம் கமலாலயத் திருப்பணிக்குப் பணம் அனுப்பினாரே அவரேதானா?'' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

அப்புறம்தான் மும்மூர்த்திகள் நினைவாலயத் திருப்பணிக் கமிட்டியினருக்கே, திரு கோவிந்தசாமிப் பிள்ளை ஏற்கெனவே திருவாரூரில் திருக்குளத் திருப்பணி செய்திருக்கிறார் என்று தெரிய வந்தது!

அவ்வளவுக்கு அடக்கமும் கொடையுள்ளமும் கொண்டவரும் செல்வாக்குப் பெற்றவருமான சிங்கப்பூர் சீமான் பிறந்தது மாயூரத்திலேதான். அவர் கப்பலேறிச் சிங்கப்பூரை அடைந்தபோது கையில் காலணாக் கிடையாது. பட்டினி கிடந்து செத்தாலும் சரி, யாரிடமும் கைநீட்டுவதில்லை என்ற வைராக்கியத்துடன் இருந்தவருக்கு ஒரு கடையில் வேலை கிடைத்தது. மூன்றாண்டுகள் பணியாற்றியதில் தாமே தனியாக ஒரு சிறு கடை தொடங்கத் தேவையான தொகையைச் சேமித்து விட்டார். நாளாவட்டத்தில் வியாபாரம் பெருகி இன்று சிங்கப்பூர் செல்லும் யாரானாலும் எந்த நாட்டவரானாலும்

திரு கோவிந்தசாமிப் பிள்ளை தம்பதி





''புல் முளைக்கக்கூட இடமில்லாத சிறு தீவு. அங்கே எத்தனை சாதனைகள்!''

கோவிந்தசாமிப் பிள்ளை ஜவுளிக் கடைக்கு விஜயம் செய்தே ஆகவேண்டும் என்ற அளவுக்கு அது பிரபலமடைந்து விட்டது. அத்தனை ரகங்கள் வேறு எங்கு சென்றாலும் பார்க்க முடியாது என்பது உலகப் பிரசித்தி. மொத்தமாகவும் சில்லறையாகவும் ஜவுளி வியாபாரம் தவிர, மளிகை வியாபாரமும் உண்டு. இன்று மூன்று பிள்ளைகளுக்கும் நான்கு பெண்களுக்கும்திருமணமாகிப் பேரன் பேத்திகளைப் பார்த்து விட்ட போதிலும் தமது தொண்ணூறாவது வயதிலும் கோவிந்தசாமி பிள்ளை கடையில் போய் உட்கார்ந்து விடுகிறார். கணக்கு எழுதுகிறார்! ''ஏன் இந்தச் சிரமம்?'' என்று கேட்டால், ''உடம்பில் தெம்பு இருக்கிறது; சும்மா உட்கார்ந்திருந்தால் வீண் சண்டை பூசல்தான் விளையும். அதைவிட உழைப்பதே மேல்'' என்கிறார். தொடர்ந்து, ''எனது தனி நபர் வாழ்க்கைக்குப் பொருந்துவது ஒரு தேசத்துக்கும் பொருந்தும்'' என்று கூறித் தமது கருத்தை விளக்குகிறார்:

''இப்போது இந்தியாவில் தேர்தல் நடக்கப் போகிறது. எந்தக் கட்சி பதவிக்கு வந்தால் மக்களுக்கு அதிக நன்மை என்பதில் வாய்ச் சண்டை முற்றி யிருக்கிறது. நான் சொல்கிறேன், எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் அதனால் மட்டும் மக்களுக்கு நன்மை ஏற்பட்டு விடாது. மக்கள் உழைத்தால்தான் மக்களுக்கு நன்மை ஏற்படும். தேசத்துக்கு மேன்மை தரும்.''

உழைப்பும் நேர்மையும் இருந்தால் முன்னேற்றம் தானாகவே ஏற்படும் என்று கூறும் கோவிந்தசாமி பிள்ளை அதற்கு உதாரணமாகத் தம் வாழ்க்கையை மட்டுமின்றித் தமது நாட்டையுமே சுட்டிக் காட்டுகிறார்.

''புல் முளைக்கக்கூட இடமில்லாத சின்னஞ்சிறு தீவு. அங்கே எத்தனை அற்புதங்களைச் சாதித்திருக்கிறார்கள்! எவ்வளவு செல்வச் செழிப்பு! காரணம், உழைப்பார்வம்தான்! கடலைத் தூர்த்துக் கட்டிடங்களை வானளாவ எழுப்புகிறார்கள். எல்லா மக்களுக்கும் சதா வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது.''

பல ஆண்டுகளுக்கு முன் சேறும் சகதியுமாக இருந்த சிங்கப்பூரில் அடியெடுத்து வைத்த கோவிந்தசாமி பிள்ளை இன்று அது உலகம் வியக்கும் சிறு நாடாக உயர்ந்திருப்பதைப் பார்த்து நியாயமான பெருமை அடைகிறார்.

''எங்கள் நாட்டின் பிரதம மந்திரியுடைய பெற்றோரையே எடுத்துக் கொள்ளுங்கள். பிரதமரின் சம்பாத்தியத்தில் அவர்கள் சாப்பிட மாட்டார்கள். தாங்களே உழைத்துச் சம்பாதித்துத்தான் உண்பார்கள். இந்தப் பண்பு சாமானியரிடத்திலும் அங்கு உண்டு. சரீர உழைப்புக்கு அங்கே யாரும் அஞ்ச மாட்டார்கள். அதற்கு மதிப்பு அதிகம்.''

உழைப்பின் மேன்மையைத் திரும்பத் திரும்ப உணர்த்தும் கோவிந்தசாமி பிள்ளை கொடையின் சிறப்பையும் உணர்த்துவதே போல் காஞ்சியிலும் திருக்கண்ணபுரத்திலும் இரு கல்யாண மண்டபங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார். நமக்குத் தெரிய வராத வேறு பல நற்பணிகளும் நிச்சயம் இருக்கும்.

''இப்படித் தாராளமாகக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறீர்களே...'' என்று ஆரம்பித்தால் உடனே, ''நானா கொடுக்கிறேன்? அவன் கொடுக்கிறான்; என் மூலம் கொடுக்கிறான்'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறார்.

திரு கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் உபயத்தால் திருவாரூரில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் பிறந்த இல்லத்தில் உருவாகியுள்ள மண்டபத்தை அவரது பொற்கரமே திறந்து வைக்க வேண்டும் என்று மும்மூர்த்தி நிலைய திருப்பணிக் குழுவினர் பெரிதும் விரும்பி அதற்கு அவரை வற்புறுத்திச் சம்மதிக்கவும் வைத்தனர். திறப்பு விழா மார்ச் மாதம் மூன்றாம் தேதி நடக்கிறது. அன்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் உண்டு.

கானமுதத்தைப் பருகவும் திறப்பு விழாக் கோலாகலத்தைக் காணவும் திருவாரூர் தியாகராஜப் பெருமானும் கூடத் தமது யோக நிலையைத் தாற்காலிகமாகக் கலைத்துக் கொண்டு சங்கீத மும்மூர்த்திகளும் சூழ்ந்திருக்க நிகழ்ச்சிகளை ரசித்து மகிழ்வார் எனக் கருதலாம்.

— குட்டி கிருஷ்ணன்

அரசியல்வாதி: **எங்கள் கட்சிக்காகச் சில தொண்டர்கள் உயிர் இழந்திருக்கின்றனர்.**

கூட்டத்தில் ஒருவர்: **நீர் என்ன இழந்திருக்கிறீர்?**

அரசியல்வாதி: **ஏன்? நான் டெபாஸிட்டை இழந்திருக்கிறேன்!**

— எஸ். சந்திரசேகர்



பிரச்னைகள் தீர
ஸ்டேன்ஸ்டயர்



ஸ்டேன்ஸ் டயர் ரீட்ரெடுகள் மிகவும் நம்பகமானவை.

ஸ்டேன்ஸ் டயர், புகழ் வாய்ந்த டயர்ஸோல்ஸ் பிரத்தியேக அம்சங்களை வழங்குகிறது — தன்னிகரற்ற நீண்ட உழைப்பு.

ஸ்டேன்ஸ் டயர் சிக்கனமானதும் கூட — ஒரு டயரை பல்முறை ரீடிரெட் செய்ய, கூடுதல் வாய்ப்பு—மிகக்

குறைவான செலவில் பல்லாயிரம் மைல்கள்.

தாமதமின்றி, சேவை பெற உடனே அணுகவும்.

STANES TYRE

ஸ்டேன்ஸ்டயர்

அண்டு ரப்பர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயமுத்தூர்

__தொழிற்சாலைகள் :–__
சென்னை, வேலூர், திருச்சி, சேலம், மதுரை, தூத்துக்குடி, பெங்களூர், மங்களூர், விஜயவாடா, செகந்திராபாத், எர்ணாகுளம், கோட்டயம், கள்ளிக்கோட்டை, திருச்சூர்.

MAC (B) ST-1/75

அத்தியாயம் 7

சிதறிய இரத்தினங்கள்

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

விக்கிரமன் காட்டு வழிக்குள் புகுந்து மறைந்ததும், ஒற்றர் தலைவன் மீண்டும் அந்தச் சிற்ப வீட்டுக்குள் புகுந்தான். மார்பில் இரண்டு கைகளையும் கோத்துக் கட்டிய வண்ணமாகச் சற்றுநேரம் அங்கிருந்த தெய்விகச் சிலைகளைப் பார்த்துக் கொண்டு நின்றான். அப்போது அவனுடைய கண்களில் நீர் ததும்பிற்று. பிறகு, அங்கு வந்த கிழவியைப் பார்த்து, ''அம்மா! இந்தப் பிள்ளை மறுபடியும் ஒருவேளை இங்கு வந்தானானால், அவனுக்குத் தங்குவதற்கு இடங்கொடு; ஆனால் என்னுடைய இரகசியத்தை மட்டும் உடைத்து விடாதே! மறுபடியும் ஐந்தாறு நாளில் நான் வருகிறேன்'' என்றான். ''அப்படியே, சுவாமி!'' என்றாள் கிழவி. பிறகு ஒற்றர் தலைவன் அந்தச் சிற்ப மடத்தின் பின்புறம் சென்றான். அங்கே விக்கிரமன் ஏறிச் சென்றது போலவே தத்ரூபமாய் இன்னொரு குதிரை இருந்தது. அதன்மேல் வெகு லாகவமாக ஏறி உட்கார்ந்து அவ்வீரன் கிளம்பினான். விக்கிரமன் போன வழியாக அவன் போகாமல் முதல்நாள் இரவு வந்த காட்டுக் கொடி வழியில் புகுந்து சென்றான். சற்று நேரத்துக்கெல்லாம் விக்கிரமன் வழிப்பறிக்கு ஆளான இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

ஒற்றர் தலைவன் அவ்விடத்தை நெருங்கி, அங்குமிங்கும் உற்றுப் பார்த்தான். அவனுடைய முகத்தில் ஆச்சரியக்குறி தென்பட்டது. உற்றுப் பார்க்கப் பார்க்க அவனுடைய அதிசயம் அதிகமாயிற்று. ஆச்சரியத்துக்குக் காரணம் என்னவென்றால், முதல் நாள் இரவு இரத்தின வியாபாரியின் வாளுக்கும், தன்னுடைய வாளுக்கும் இரையாகி விழுந்தவர்களின் உடல்கள் அங்கே காணப்படவில்லை!

அவ்விடத்தில் மிகவும் அருவருப்பான கோரக்காட்சி ஒன்றை ஒற்றர் தலைவன் எதிர்பார்த்தான். இரவில் காட்டு மிருகங்கள் இரைதேடி அங்கு வந்திருக்குமென்றும், அவை இரை உண்ட பிறகு மிகுந்த எலும்புக் கூடுகள் சகிக்க முடியாத காட்சியாக இருக்குமென்றும் அவன் எண்ணினான்.

ஆனால் அங்கே அப்படியொன்றும் காணப்படவில்லை. காட்டு மிருகங்கள், எலும்பைக் கூட விழுங்கியிருக்குமோ! அல்லது உடல்களை அப்படியே இழுத்துக் கொண்டு போயிருக்குமோ? அப்படிப் போயிருந்தாலும், அந்த ஆட்களின் துணிமணிகள், வாட்கள் எல்லாம் எங்கே? — ''நாம் போன பிறகு இங்கு யாரோ வந்திருக்கிறார்கள்; என்னமோ நடந்திருக்கிறது!'' என்று ஒற்றர் தலைவன் எண்ணினான்.

உடனே அவன் குதிரையிலிருந்து குதித்து இன்னும் கவனமாக அங்குமிங்கும் உற்றுப் பார்க்கத் தொடங்கினான். சட்டென்று ஒரு பொருள் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவனுடைய முகத்தில் அப்போது வியப்பு மட்டுமல்லாமல், கேள்விக்குறியும் தோன்றியது. அந்தப் பொருள் என்னவெனில், ஒரு மண்டை ஓடுதான்.

நேற்று அங்கு இறந்து விழுந்தவர்களின் மண்டை ஓடாக அது இருக்க முடியாது. அது மிகப் பழைமையான மண்டை ஓடு. ''நேற்று நாம் போன பிறகு இங்கு வந்தவன் கபாலிகனாயிருக்க வேண்டும். அவன் கழுத்தில் போட்டிருந்த மண்டை ஓட்டு மாலையிலிருந்துதான் இது விழுந்திருக்க வேண்டும்! அவனோ, அவர்களோதான், இங்கே செத்து விழுந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தியிருக்க வேண்டும்!'' என்று ஒற்றர் தலைவன் எண்ணமிட்டான்.

இன்னும் அவ்விடத்தில் அவன் சுற்று முற்றும் பார்த்த போது, ஓரிடத்தில் இரத்தினங்கள் கொஞ்சம் சிதறிக் கீழே

கிடப்பதைக் கண்டான். குள்ளன் இரத்தின மூட்டைகளைக் கீழே போட்ட போது, ஒரு மூட்டை அவிழ்ந்துபோய்ச் சிதறி இருக்க வேண்டும். அந்த இரத்தினங்களைத் திரட்டி எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணி ஒற்றர் தலைவன் குனிந்தான்.

அந்தச் சமயத்தில் கொஞ்ச தூரத்தில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது! சத்தத்திலிருந்து நாலைந்து குதிரைகளாவது வருகின்றன என்று தோன்றியது. ஒற்றர் தலைவன் உடனே விரைந்து குதிரை மேல் ஏறி அதைச் செலுத்திக் கொண்டு பக்கத்திலிருந்த காட்டுக்குள் புகுந்தான். குதிரையைக் கொஞ்ச தூரத்தில் விட்டு விட்டுத் தான் மட்டும் இறங்கி வந்து சற்றுத் தூரத்தில் ஒரு மரத்தடியில் நன்கு மறைந்து கொண்டான். அவன் மறைவிலிருந்த போதிலும், பாதை அங்கிருந்து நன்ருகத் தெரிந்தது.

அந்த இடத்துக்கு வந்ததும் குதிரைகள் சடேரென்று நிறுத்தப்பட்டன. ஆறு குதிரைகள் மேல் ஆறு வீரர்கள் வந்தார்கள். அவர்களுக்குத் தலைவனாக தோன்றியவன் மீது ஒற்றர் தலைவனின் பார்வை விழுந்ததும், அவனுடைய புருவங்கள் நெரிந்து ரொம்பவும் மேலே போயின. அவன் முகத்தில் அப்போது வியப்பு, அருவருப்பு, கோபம் எல்லாம் கலந்து காணப்பட்டன. அந்தத் தலைவன் வேறு யாருமில்லை; மாரப்ப பூபதிதான்.

வேகமாக வந்து கொண்டிருந்த குதிரையைச் சடேரென்று முதலில் நிறுத்தியவனும் மாரப்ப பூபதிதான். அவன் நிறுத்தியதைப் பார்த்துத்தான் மற்றவர்கள் சடேர், சடேரென்று தத்தம் குதிரைகளை நிறுத்தினர்கள். மாரப்ப பூபதி கீழே இறங்கினன். சற்று முன்னுல் ஒற்றர் தலைவன் உற்றுப் பார்த்ததைப் போலவே அவனும் அங்குமிங்கும் பார்த்தான். முதலில் மண்டை ஓடுதான் அவனுடைய கவனத்தையும் கவர்ந்தது. பிறகு, அங்கே முதல்நாள் இரவு நடந்த வாட்போரின் அறிகுறிகளைக் கவனித்தான். ஆங்காங்கு இரத்தக் கறை இருந்ததையும் பார்த்தான். உடல்கள் அங்கிருந்து இழுத்துச் செல்லப்பட்டிருக்கும் அடையாளங்களும் தெரிந்தன. இரத்தினங்கள் அவனுடைய கண்களில் பட்டதும் அவற்றை ஆவலுடன் கைகளில் திரட்டி எடுத்துக் கொண்டான். அந்த இரத்தினங்களைப் பார்த்தபடியே கலகலவென்று சிரித்தான்.

தன்னுடன் வந்த மற்றவர்களைப் பார்த்து, ''பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போலாயிற்று!'' என்ருன். இன்னும் சிறிது நேரம் அவனும் மற்றவர்களும் ஏதோ பேசிக் கொண்டு நின்ருர்கள். பிறகு, மாரப்ப பூபதி குதிரை மேல் ஏறினன். எல்லாக் குதிரைகளும் நாலுகால் பாய்ச்சலில் புறப்பட்டன.



மாரப்பனும் அவனுடைய ஆட்களும் போன பிறகு ஒற்றர் தலைவன் தன் குதிரை இருந்த இடம் சென்று அதன்

மேல் ஏறிக்கொண்டு, நேற்றிரவு தான் வந்த வழியிலே திரும்பிச் செல்லத் தொடங்கினான். குதிரை அக் காட்டுப் பாதையின் வளைவு ஒன்றைத் தாண்டியதும் உடம்பைச் சிலிர்த்தது. ஒற்றர் தலைவன் குதிரையை நிறுத்திச் சுற்று முற்றும் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் காணப்பட்ட ஒரு சிறு பாறைக்குப் பின் புறத்தில் கழுகுகள் வட்டமிடுவதைக் கண்டான். காட்டுப் பாதையில் கிடந்த உடல்கள் என்னவாயின என்னும் மர்மம் வெளியாயிற்று. இரத்தின வியாபாரி போன பிறகு அங்கு வந்தவர்கள் அவ்வுடல்களை அப்புறப்படுத்தி இந்தப் பாறை மறைவில் கொண்டு




வந்து போட்டிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் யாராக இருக்கும்?

அவ்விடத்தில் அதிக நேரம் நிற்காமல் ஒற்றர் தலைவன் மேலே குதிரையை விட்டுக் கொண்டு சென்றான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மாமல்லபுரத்திலிருந்து காஞ்சிக்குப் போகும் இராஜபாட்டையை அவன் அணுகினான். அவ்விடத்தில் அதே சமயத்தில் மாமல்லபுரத்திலிருந்து இராஜ பரிவாரங்கள் வந்து கொண்டிருந்தன. பரிவாரங்களுக்கு மத்தியில் குந்தவி தேவியின் பல்லக்கும் வந்தது. பல்லக்குக்குப் பக்கத்தில் ஒரு கம்பீரமான வெண் புரவி மீது நரசிம்ம சக்கரவர்த்தியின் புதல்வன் மகேந்திரன் வீற்றிருந்தான்.

இதையெல்லாம் தூரத்திலேயே கவனித்துக் கொண்ட ஒற்றர் தலைவன், அவ்விடத்தில் குதிரையைச் சற்று வேகமாகவே தட்டி விட்டான். இராஜ பரிவாரங்களையோ, பரிவாரங்களுக்கு மத்தியில் வந்தவர்களையோ சற்றும் பொருட்படுத்தாதவனாய் அவர்களுக்குச் சற்று முன்னதாகவே, இராஜ பாட்டையின் சந்திப்பைக் கடந்து காஞ்சியை நோக்கிச் சென்றான். (தொடரும்)

படித்தோம்;



ஏன்?

ரகுவுக்கு அவன் அப்பாவை ரொம்பப் பிடிக்கும். அம்மாவை, ரொம்ப ரொம்ப, ரொம்பப்...ப் பிடிக்கும்! எதிர்பாராத விபத்



ஸ்ரீமதி சிவசங்கரி
திரு ம. பொ. சி.
அலங்காரக் கந்தன்
செட்டியார்

தில் தகப்பனை இழந்த அவனை ஆளாக்க அவன் தாய் பட்ட கஷ்டங்கள்தான் எத்தனை?

தான் பெரியவனாகி, பெரிய உத்தியோகம் பார்த்துக் கை நிறையச் சம்பாதித்துத் தன் தாயாரை எப்படி யெல்லாமோ தாங்க வேண்டும் என்று கற்பனை கண்டு வந்த பன்னிரண்டு வயதுப் பாலகனை ரகுவைப் பரிதவிக்க விட்டு, அநாதையாக்கிவிட்டுப் போய் விடுகிறாள் அந்த அன்னை.

அநாதையான ரகு கஷ்டப்பட்டு உழைத்து, படித்து உன்னத நிலைக்கு வருகிறான். அந்த நிலையில் அவனுக்குத் துணைவியாக வருகிறாள் சாந்தி. இவன் வளர்ந்து உருவான சூழ் நிலைக்கு நேர் எதிர்மாறான சூழலில் வளர்ந்தவள் அவள். பெரிய பணக்காரரின் ஒரே செல்வ மகள் அழகு மலர் சாந்தி. சமூக சேவை செய்வதில் ஆர்வமுள்ளவள். அவள் அழகில், பெண்மையில் ரகு தன்னையே அர்ப் பணிக்கிறான். ஆனால் அவளோ அவன் உள்ளத்தை, ஆசைகளை — அவனுடையவளாகவே அவள் எப்போதும் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புவதைப் புரிந்து கொள்ளாமல் சேவை மனப்பான்மையோடு செயல்படுகிறாள். தாம்பத்திய வாழ்வில் விரிசல் விழுகிறது. உன்னதமான கொள்கைகளையுடைய பண்பாளனான ரகு பாழாகிறான். அந்த நிலையிலும் கணவனின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளவில்லை மனைவி. இவர்களிடையே ப்ரியா என்ற மலர் பூக்கிறது. பெற்றோரின் விநோதமான, முரண்பாடான வாழ்க்கையினிடையே வளர நேரும் குழந்தை ப்ரியாவிடம் வீம்பு, பிடிவாதம், அலட்சியம் ஆகிய குணங்கள் தலைதூக்குகின்றன. முடிவில் ரகுவும் சாந்தியும் தங்களையே உணர்ந்து கொள்வதற்குக் காரணமாகிறாள் ப்ரியா.

ஏழ்மையை அதன் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டிப் படிப்பவரின் நெஞ்சங்களைப் பிழிய வைக்கும் ஆசிரியை அதே சமயத்தில் வாழ்வின் மிக உயர்ந்த மட்டத்தில் சகல வசதிகளுடன் வாழ்வோரின் உல்லாச வாழ்க்கையையும் அணு அணுவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஆசிரியையின் கதை சொல்லும் பாணியில் உள்ள எளிமையையும் வலிமையையும் பாராட்ட வேண்டும்.

அத்தியாயங்களுக்கு ரகு — சாந்தி—ப்ரியா ஆகிய பெயர்களையே மாற்றி மாற்றியும், ஜோடி சேர்த்தும் கொடுத்திருப்பது புதுமையாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது.

ஆசிரியை: சிவசங்கரி. வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை—17 விலை ரூ. 8.00.

—கௌசிகன்

இலக்கியங்களில் இனவுணர்ச்சி

"இலக்கியங்களில் இனவுணர்ச்சி" என்பது அவசியமில்லாத ஆராய்ச்சியாகவே பலருக்குத் தோன்றலாம். இலக்கியங்களை இலக்கிய ரசனையுடன் அனுபவித்துவிட்டுப் போகலாமே யொழிய அதில் இனவுணர்ச்சி இருக்கிறதா, எந்த அளவுக்கு இருக்கிறது, அது சூடாக இருக்கிறதா, அல்லது குளிர்ந்து போய்க் கிடக்கிறதா என்று தெர்மா மீட்டர்

வைத்துப் பார்ப்பது போன்ற ஆராய்ச்சி வேண்டாத விஷயம் என்று இலக்கிய அன்பர்கள் பலர் கருதக் கூடும்.

ஆனால் ம. பொ. சி. அவர்களுக்கு இப்படி ஓர் ஆட்சேபணை எழும் என்று தெரியாதா, என்ன? முன்னுரையில் இதற்குப் பதில் சொல்கிறார். இந்தப் பதில் பலருக்குத் திருப்தி அளிக்கலாம், சிலருக்குத் திருப்தி அளிக்காமல் போகலாம். புதிய விவாதக் கருத்துக்கள் முளைக்கலாம்.

இதுவும்தான் என்ன, ம. பொ. சி.க்குத் தெரியாதா? இதற்கும் பதில் சொல்லி விடுகிறார். 'கருத்து வேற்றுமைகள் இருப்பது இயல்புதான்' என்று. 'ஆராய்ச்சி அவசியமா?' என்பதில் மட்டுமின்றி, ஆராய்ச்சியில் தாம் கண்ட முடிவுகள் குறித்தும் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம் என்று கூறிவிடுகிறார்.

ஆக மொத்தம், இந்த நூலைப் படிக்கும் போது மாற்றுக் கருத்துக்களும் இருக்க முடி மாணிக்கனூர் தெரிவித்துள்ள கருத்து மறுத்தற்கியலாததாகும் என்கிறார் ம. பொ. சி.

இதற்கு ''தமிழ் வேந்தர்களாகிய சோழ மன்னர்கள், கல் வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் சம்ஸ்கிருதத்தை உபயோகித்திருக்கிறார்கள் அல்லவா? தெலுங்கு மன்னர்களாகிய விஜயநகரப் பேரரசர்கள் தமிழ் மொழியில் ஏராளமான கல்வெட்டுக்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள் அல்லவா? இவை அனைத்தும் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமைந்தவையே. எனவே பல்லவர்கள் தங்களது கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் வடமொழியை உபயோகித்திருக்கின்றனர் என்ற காரணத்தால் அவர்கள் தமிழ் மக்கள் அல்லவென்று கூறுவது பொருத்தமல்ல'' என்று தமிழகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் இரா. நாகசாமி தமது மாமல்லை என்ற புத்தகத்தில் எழுதியுள்ளதை நினைவுபடுத்திக் கொள்ளலாம். இப்படி நூல் நெடுகப் பல இடங்களில்

சொல்கிறோம்!







யார் என்று எண்ணத்தோடேயே படிக்க ஆரம்பிக்கிறோம்; முடிக்கவும் செய்கிறோம்.

திரு ம. பொ. சி., தமிழுணர்ச்சி என்ற கண்ணாடி அணிந்து ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மக்களையும், அவர்கள் இலக்கியங்களையும் பார்க்கும்போது கடுகெல்லாம் மலையாகவும் மலையெல்லாம் கடுகாகவும் அவருக்குத் தோன்றுகின்றன.

தமிழ் நாட்டில் சுமார் ஐந்நூறு ஆண்டு காலம் மிகச் சிறப்பாகச் சிற்பம், சித்திரம், கலை, இலக்கியம் எல்லாவற்றுக்கும் ஏற்றம் அளிக்கும் வகையில் ஆண்ட பல்லவர்களை 'வந்தேறிகள்' 'அந்நியர்கள்' என்றெல்லாம் குறிப்பிடுகிறார். பல்லவர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள் என்று இன்னும் முடிந்த முடிவாகக் கொள்ளப்படவில்லை.

''பல்லவர் சோழர் மரபினராயின், இளந்திரையன் வழி வந்தவர் ஆயின், தமிழில் எழுதாது தமிழ் மக்கட்கே புரியாத வடநாட்டு மொழிகளில் எழுதத் துணிந்திருப்பரோ?'' என்று டாக்டர் மா. இராச மாற்றுக் கருத்துக்கு இடமிருப்பதாகத் தோன்றினாலும் சில விஷயங்களில் மாற்றுக் கருத்துக்கே இடமிருக்க முடியாது. அவை: (1) ம. பொ. சி. அவர்களின் ஆழ்ந்த தமிழினப் பற்று (2) அவருடைய அசைக்க முடியாத தேசப் பற்று (3) அவரது தமிழிலக்கியப் புலமை (4) பிற மொழி இலக்கியங்களிலும் அவருக்குள்ள ஞானம் (5) எடுத்த பின் வைக்க முடியாத அளவில் படிக்கத் தூண்டும் அவரது எழுத்தாற்றல்.

மொத்தத்தில் சில நல்ல கருத்துக்களையும் சில வேதனை தரும் விளக்கங்களையும் சில வேடிக்கை நிலைகளையும் இந்தப் புத்தகத்தில் பார்க்கலாம்.

எஸ். வி. எஸ்.

பிரசுரம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-600004; விலை: ரூ. 15.

கந்தர் அலங்காரம்

அருணகிரிநாதரின் கந்தர் அலங்காரம் முருகப் பெருமானின் பாதாதிகேச வர்ணனையாக அப்பெருமானது சிறப்பையும் அவரது

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் டாக்டர் அரங்கசாமி, சௌந்தரா கைலாசம், அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர் முன்னிலையில் வானம்பாடிக் கவிஞர்களின் "கவி ராத்திரி" என்னும் புதுமையான நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. நிகழ்ச்சியின் இடையில் ஒரு கவிஞர் திடீரென எழுந்து ஒரு கேள்வி: "கண்ணுக்கு இமை எதற்காக?" என்று கேட்டார். ஒவ்வொரு கவிஞரும் சொன்ன பதில்:



இந்த முட்டையிலிருந்து பெட்டைக்கோழி வெளி வருமா? சேவலா?

"கண்ணுக்கு இமை எதற்காக!
"பெண்ணுக்கு ஆடை எதற்காக!" -புவியரசு
"சாத்திரமாமல் புழுங்கும் கண்ணுக்குக் கடமை விலைதந்தாக!" -சக்திக்கனல்
"வீதி நாடகங்களின் ஆபாசக் காட்சியை செல்லாது செய்வதற்காக!" -சிற்பி
"கண்ணீர்க் குட்டைகள் கசிந்து போகாமல் காப்பதற்காக!" -தேனரசன்
"கருப்பு மனிதனை (Black Money) பதுக்கி வைப்பதற்காக!" -தமிழ்நாடன்
"பாவைத் திருடர்களைக் கைது செய்வதற்காக!"



அங்கங்களையும், வேல், மயில், சேவல் ஆகியவற்றின் சிறப்பையும் புகழ்ந்து, அலங்காரமாக அறிவிக்கும்' அருமையான நூல். நூறு தீந்தமிழ்ப் பாடல்கள் கொண்டது. வித்துவான் ச. ரா. தச்சபேசுவரன் இந்நூலுக்கு அரியதொரு விளக்கவுரை எழுதியிருக்கிறார். பாராட்டுக்குரிய முயற்சி; தமிழ் அன்பர்களுக்கு விருந்தாக விளங்குகிறது.

பிரசுரம்: முருகன் அருள் பதிப்பகம், 9, சீனிவாச ராகவன் ரோடு, சென்னை—63. விலை ரூ. 3.00.

ஒரு குடும்பத்தின் கதை

இளம் பிராயத்திலிருந்தே நிலப் பிரபுக்களின் இழி குணத்தையும், அற்பத் தனத்தையும் நேருக்கு நேர் கண்டுகொள்ளும் வாய்ப்பு ருஷிய எழுத்தாளர் ஷெட்ரினுக்கு இருந்தது. ஒரு நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்தவர் அவர்; பண்ணை அடிமைகளின் பராமரிப்பில் வளர்ந்தவர். நில உடைமையைச் சுவீகரிக்கும் நோக்கத்தோடு மனித உறவுகளையே ஏலம் போடும் நிலச்சுவான்தார்களின் இழி தகைமையை அவர் எள்ளி நகையாடினார். அந்தப் 'பெரிய' மனிதர்களைக் கருப்பொருளாக வைத்து நையாண்டி செய்து ருஷ்ய இலக்கியத்தில் புதிய பாணியை உருவாக்கினார் ஷெட்ரின். இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஷெட்ரினுடைய உதவி இல்லாமல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் ருஷ்ய வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியாது" என்று எழுதினார், கார்க்கி.

செல்வமும் செல்வாக்கும் மிக்க கொலோவா குடும்பத்தைப் பற்றிய இந்த நாவலின் முடிவில் யாருமே உயிருடன் இருக்கவில்லை. சாவில் தொடங்கும் கதை, அந்தக் குடும்பமே மடிந்து மண் மேடிட்டுப் போன பிறகுதான் முடிகிறது.

இந்தச் சாவுகளுக்கிடையில், நாவலின் தனித்தன்மையான பாத்திரப் படைப்பு உயிர் பெற்று நிற்கிறது. மனித இனத்தின் இழி தகை குணங்களான பேராசை, சுயநலம், பொறாமை, பிறருக்குக் கேடு நினைக்கும் கொடுமையான எண்ணம் — ஆகியவை இயல்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

கணவனைப் பற்றியோ, பிள்ளைகளைப் பற்றியோ அரினா கவலைப்படவில்லை. எஸ்டேட்டைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்தினாள். அது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் இடைவெளியையும் பெரிதாக்கி வந்தது என்பதை அவள் சிந்திக்கத் தவறினாள். அன்பைத் தேடிய இளம் உள்ளங்களை அவள் ஆதரவோடு தழுவாமல் இருந்துவிட்டாள். கடைசியில் அவர்கள் சீரழிவதைத் தன் கண்ணால் கண்டு கலங்கினாள். அரினாவின் கதை நிலப்பிரபுத்துவக் குடும்பத்தின் சீரழிந்த சித்திரம்.

தமிழாக்கம்: நா. தர்மராஜன், எம்.ஏ., அகரம், சிவன்கோவில் தெற்குத் தெரு, சிவகங்கை-623560. விலை: ரூ. 6-00.

— சோமாஸ்

பிறந்த 3ம் மாதம் தொடங்கும் முதல் திட உணவு குழந்தையின் வருங்கால வாழ்வையே தீர்மானிக்கத் தக்கது.

பால் மட்டும் கொடுத்தால் போதாது என்கிறார்கள் டாக்டர்கள்



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

விரைவான முழு வளர்ச்சிக்கான சரிவிகிதச் சத்து நிரவிய திட உணவு



பச்சிளம் தேகமும் மூளையும் வேகமாக வளர்ந்
துவப்பவை. அதற்கு ஈடுகொடுக்கப் பால் மட்டும்
போதுமானதாகாது. தாய்ப்பாலிலிருந்து திட
உணவுக்கு மாறவேண்டும்—மூன்றாம் மாதமே
மென்றுதின்னப் பழக்குங்கள்... மேன்மையான
வளர்ச்சிக்குத் திறவுகோலாக உதவும் திட உணவு
ஃபாரெக்ஸ் ஒன்றுதான்—பச்சிளம் தீரண
உறுப்புகளுக்கு உகந்தது.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்; காரணம்,
தாய்ப் பால் விடுக்கும் தருணமான மாதங்களில்
பாப்பாவின் பத்துவித வளர்ச்சிகளுக்கும்
நிறைவுதரும் **ஒப்பற்ற சரிவிகிதச் சத்துணவு இதுவே.**
இரத்தச் செழிப்புக்கும் தெம்புக்கும் கல்லுசிதமான
அளவுக்கு (இதுபோன்ற வேறெந்தத் திட
உணவிலும் அமையாத அளவுக்கு) இரும்புச்
சத்து; எலும்புக்கு உறுதியும், பல்லுக்குப் பலமும்
தரும் கால்ஷியம், வைட்டமின் D2; மூளையும்
உடலும் விரைந்து வளர உகந்த புரதச் சத்துக்கள்;
வளரும் உடம்புக்குத் தேவையான சக்தி—
இவ்வளவும் அடங்கியது ஃபாரெக்ஸ்; எனவே...
பாலூட்டும் பழக்கத்தை மாற்றுவதற்கான
வேறு எந்த திட உணவையும் விட அதிகமாக
அதிகத் தாய்மார்கள் ஆதரிப்பது ஃபாரெக்ஸ்.
பழங்கள், காய்கறிகள், பருப்பு, இறைச்சி, முட்டை
போன்ற எந்த முக்கிய உணவுடனும் கலந்து
கொடுக்க இனிமையானது ஃபாரெக்ஸ்.
மென்றுதின்னப் பழக்க...கூடிய விரைவிலே குடும்ப
உணவுகளிடம் குழந்தையை இனிதே வரவேற்க...
அதி உன்னதமான முதல் திட உணவு ஃபாரெக்ஸ்.

இலவசமான எமது ஃபாரெக்ஸ் கைப் புத்தகம், 2-ரூபா தள்ளுபடித் திட்டம்— இரண்டையும் பற்றி அறிய, எழுதுங்கள்.
(புத்தகம் எந்த மொழியில் எனக்குக் குறிப்பிட்டு)
உங்கள் பெயர், விலாசத்தை எழுதி, 25 பைசா
தபால் வில்லையோடு அனுப்புக இம் முகவரிக்கு:
தபால் பை நம்பர் 19119, பம்பாய் 400 025.



க்ளாக்ஸோ

LIL.GF. 53-140 TM

Bayer Chemistry

promotes human progress in many spheres



Our multipurpose factory at Thana (Maharashtra) manufactures a wide range of

- **Agricultural pesticides** for increasing food production
- **Household pesticides** to rid houses of vermin
- **Rubber chemicals** to meet the increasing demands of the Rubber industry
- **Pharmaceuticals** for the improvement of public health

Bayer thinks of tomorrow–today

Bayer (India) Limited
Express Towers, Nariman Point,
Bombay 400 021

Bayer

தீபம்

நடிகர் திலகத்தின் நடிப்புத் திறமைக்கு உரைகல்லாக நல்லதொரு கதை கிடைத்து விட்டால் ரசிகப் பெருமக்களுக்குக் கொண்டாட்டம் தான். ''தீபம்'' அத்தகைய மகிழ்ச்சியைத் தருகிறது.

ராஜா நடத்தை சரியில்லாதவன்தான் என்றாலும் நல்லிதயம் படைத்தவன். ஏழை ஆபீஸ் பியூன் மகள் ராதாவின் எளிமையும் வசீகரமும் நிறைந்த அழகு அவனைக் கவர்ந்து விட்டது. மற்ற பெண்களைச் சுவைத்துவிட்டு ஒதுக்குகிறது போல் அவளை அவன் ஒதுக்க நினைக்கவில்லை. முறைப்படி அவளை மணம் புரிந்து கொள்ளத்தான் விரும்பினான். ஆனால் ராதா....? செல்வந்தர்களுக்கே உரிய, திருவிளையாடல்களில் ராஜா மூழ்கியிருப்பவன் என்பதை இழித்துக் கூறித் திருமணத்துக்கு இசையவில்லை. — தன் தந்தை பியூன் வேலை பார்க்கும் கம்பெனியின் முதலாளி ராஜா என்பதை அறிந்தும் அவள் சிறிதும் அஞ்சவில்லை. இதை அறிந்த ராஜா முதலில் வெகுண்டு சீறினாலும், ராதாவின் ஏழைக் காதலனைக் கண்டு பொறாமைப்பட்டாலும், படிப்படியாக அடங்கிப் பண்பும், பரிவும் கொண்ட அபூர்வ மனிதனாகிவிடுகிறான்.

சந்தர்ப்பத்துக்கேற்ற முகபாவங்கள் நடிகர் திலகத்துக்குக் கைவந்த கலை. ராதாவை முதன் முதலில் சந்தித்தபோது அவளது எளிய தோற்றம் கண்டு வியந்தது, அவளோடு பேசத் துடித்தது, அவள் எட்டாக் கனி என்பதை அறிந்ததும் ஏற்பட்ட விரக்தி உணர்ச்சி— எல்லாவற்றையும் சிவாஜி தமக்கே உரிய பாணியில் ஜமாய்த்திருக்கிறார். தன் கணவனைக் குடிகாரனாக்கி, நடத்தை கெட்டவனாகவும் மாற்றியமைத்தது ராஜாவின் நிறைவேறாத காதற் பொறாமைதான் என்று அவனிடம் ராதா நேருக்கு நேர் பெண் புலியாய்ச் சீறியபோது, கண்களில் நீர் மல்க, துக்கம் தொண்டையை அடைக்க, தணிந்த குரலில் ராஜா அவளுக்கு உண்மையில் நடந்ததை எடுத்துச் சொல்லுகிற கட்டத்தில் சிவாஜி நடிப்பின் சிகரத்துக்கே போய்விடுகிறார்.

சுஜாதா ராதாவாக வந்து மிக அருமையாக நடித்திருக்கிறார். சிவாஜியை எதிர்த்துக் காட்டிய சீற்றமும், அப்புறம் உண்மை நிலை புரிந்ததும் அடுத்துக் காட்டிய நெகிழ்வும் ரசிகர்களின் கைதொலியைப் பெற்றுத் தந்துவிட்டன.

சிவாஜி, சுஜாதா, இருவரின் நடிப்போடு பாராட்டுப் பெறுவது ராஜாவின் கார் டிரைவராக வரும் நாகேஷின் நடிப்புத்தான். தமாஷாக மட்டும் அல்லாமல், சீரியஸாகவும் தமக்கு நடிக்கத் தெரியும் என்பதை ஒருசில விநாடிகளில் புரிய வைக்கிறார்.

அநாதைக் கண்ணனாக வந்து ராதாவின் வீட்டில் குடிபுகுந்து அவளது உள்ளத்திலும் இடம் பிடித்துக் கொண்டு விட்ட விஜயகுமார் நல்லதொரு பாத்திரத்தை ஏற்று மிகவும் நன்றாக நடித்திருக்கிறார்.

காட்சி ஜோடனைகளுக்காக நிறையச் செலவிட்டிருக்கிறார்கள். இது சுஜாதா சினி ஆர்ட்ஸின் அற்புதமான வண்ணப் படம்.

கே. விஜயனின் டைரக்ஷன் பாராட்டுப் பெறுகிறது. படத்தின் முடிவில், ராஜா இறந்துவிடுகிறான். 'டிராஜெடி'தான் என்றாலும் வேதனையோடு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட முடிகிறது. ராஜாவுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையில் அவன் இறந்து போவதைத் தவிர வேறு வழியில்லை யென்ற சூழ்நிலை உருவானதால்.

இந்த நல்ல படத்தில் ஒரு திருஷ்டி பரிகாரம் வேண்டாமா? அதற்குத்தான் ஒன்றுக்கு இரண்டாக மனோரமா தோன்றும் நகைச்சுவைக் காட்சியும் வேற்று மொழிப் படத்தின் தழுவல்தான் தமிழில் வெற்றி பெற முடியும் என்பதும் இருக்கின்றனவே!

ஏ. எல். நாராயணனின் வசனம் அளவாகவும், அழகாகவும் அமைந்திருக்கிறது.

குன்றின் மேல் ஏற்றிய தீபம். —காந்தன்



இந்துவின் வாழ்விலே ஓர் விடிவெள்ளி!

சில்வர் நைட்ரேட் ஒளியை எளிதில் கிரஹித்துக்
கொள்ளக் கூடியதால் பிலிம் தயாரிப்பிற்கு மிகவும்
இன்றியமையாதது. இந்துவின் சில்வர் நைட்ரேட்
99.99% தூய்மையானது! அதுவே இந்து பிலிமின்
தலை சிறந்த தரத்திற்கு உத்திரவாதம்.

இந்த சில்வர் நைட்ரேட் இயந்திர அமைப்பு தலை
சிறந்த இது மாதிரி வகைகளில் ஒன்றாகும். இந்துவின்
தொழில் வல்லுனர்களால் இந்தியாவிலேயே
தயாரிக்கப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு
வடிவமைத்து தயாரிக்கப்பட்டது இது.

இந்துவின் சொந்த முயற்சியினால்தான் இந்த 99.99% தூய்மையினைப் பெற முடிந்தது.

நடைமுறையில் மற்ற எல்லாக் கம்பெனிகளும் சில்வர் நைட்ரேட்டை இறக்குமதி செய்தோ அல்லது வெளியில் வாங்கியோ பெறுகின்றன. மிகச் சில போட்டோக் கம்பெனிகள்தான் சில்வர் நைட்ரேட் உற்பத்திக்கான இயந்திரத்தை அமைத்து உள்ளன. உள்நாட்டிலேயே தயாரிக்க வேண்டுமென்ற இந்துவின் விடாமுயற்சி நல்ல பலனை அளித்துள்ளது. இதனால், இறக்குமதி மற்றும் அந்நியச் செலாவணி இவைகள் மூலம் அதிகப்படியாக மிச்சம் பிடித்து உள்ளது.

இந்து அளிப்பவை—உங்கள் தரத்திற்குச் சான்று


இந்துவின் சிறந்த தரத்திற்கு உறுதியான சான்று—தலை சிறந்த தொழில்முறை போட்டோகிராபர்கள், படத்தயாரிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், ரேடியாலஜிஸ்டுகள்—இவர்கள் எல்லோரும் இந்துவையே விரும்பித் தேர்ந்தெடுப்பதேயாகும். அவர்களுக்குத் தெரியும், இன்று எங்கெல்லாம் தரம் எனப் பேசப்படுகின்றதோ அங்கெல்லாம் இந்துவின் பெயரும் இணைந்திருக்குமென்பது.

முன்னேற்றமடைந்த முறைகள், நவீன தொழில் நுணுக்கம், சீரான உற்பத்தி—இவற்றுடன் இந்து முன்னேற்றப்பாதையில் வீறுநடை போடுகின்றது.

ஏற்றுமதிக்கேற்ற இந்துவின் தரம்.

இந்துவின் தரத்திற்கு மற்றுமோர் சான்று நாங்கள் உங்களுக்குக் கூறப்போகும் ரகசியம்: மேலை நாடுகளுக்கு இந்து விரைவில் சில்வர் நைட்ரேட்டை ஏற்றுமதி செய்யப்போகின்றது; அவர்களது பிலிம் தயாரிப்பிற்கு பயன்படுத்திக் கொள்வதற்காக!

ஆம். இந்து இன்று தன்னிறைவு பெற்று விட்டது—சிறந்த தரத்துடன் கூடவேதான். அதுதான் எங்களை "இந்து என்றால் பிலிம்" என நம்பிக்கையுடன் கூறத் தூண்டியது.



INDU®

இந்து என்றால் பிலிம்·
போட்டோ·சினி·எக்ஸ்ரே.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்
(இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர் உதகமண்டலம் 643 005

SAA/HPF/2235

புகழ்பெற்ற வங்காள

நாவலாசிரியர் **விமல் மித்ரா**வின் நவீனம்



சாட்சி நம்பர் 3

தமிழாக்கம்: ரா.வீழிநாதன்

அடுத்த இதழில் ஆரம்பம்

இரகசியப் போலீஸ் துறையில் பணியாற்றியவர்
ஸ்ரீ விமல் மித்ரா
அவர் கடமையாற்றிய காலத்தில்
குறுக்கிட்டவள் — **சரயு.**
அவள் வாழ்க்கையைச் சுற்றிக் கற்பனைச் செறிவுடன் பின்னப்பட்ட நவீனம்
சாட்சி நம்பர் - 3.

தலைமைச் சங்கத்தின் தலைவர்



ஒன்பது புள்ளிகளை வைத்துக் கோலம் போடுவது பெண்மணிகளுக்கு அந்தத் துறையில் ஆரம்பப் பாடம்.

அவர்களிடமே, ''இந்த ஒன்பது புள்ளிகளையும் நாலே கோடுகள் வரைந்து இணைத்து விடுங்கள், பார்க்கலாம்'' என்று சொல்லுங்கள். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் முயன்று பார்த்து ''முடியவில்லையே'' என்பார்கள். ''குறைந்த பட்சம் ஐந்து கோடுகள் தேவை'' என்பார்கள்.

''கோடுகள், புள்ளிகளை இணைக்க வேண்டும் என்றுதான் சொன்னேனே யொழிய, எல்லைகளைத் தாண்டக் கூடாது என்று நிபந்தனை ஏதும் விதிக்கவில்லையே நான்'' என்று சொல்லிப் பாருங்கள். புத்திசாலிப் பெண்ணானால் ஒரு முக்கோணத்தையும் மேலும் ஒரு கோட்டையும் இழுத்து ஒன்பது புள்ளிகளையும் இணைத்து விடுவாள்.

வியாபார நுணுக்கங்களை உயர் கல்வியாக வழங்கும் ஹார்வர்டு பிஸினெஸ் ஸ்கூலில் திரு எம். வி. அருணாசலம் முதலில் கற்ற பாடம் மேற்படி புதிர்தான்! அதில் உள்ளடங்கிய தத்துவம் பின்வருமாறு:


எதையும் சாதிக்க முடியாது என்று எண்ணிக் குமையாதே. ஒரு குறுகிய எல்லைக்குள் நீ அகப்பட்டுக் கொண்டிருப்பதுதான் சாதனைக்குத் தடையாக இருக்கிறது. அந்த எல்லைக்கு அப்பால் சென்று யோசித்துப் பார். வெற்றி பெறலாம்.

இந்தப் பாடம் திரு அருணாசலத்தின் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் கை கொடுத்து உதவியிருக்கிறது.


டி. ஐ. சைக்கிள் நிறுவனம் தயாரிக்கும் சைக்கிள்களுக்கும் இதர பல தொழில்களுக்கும் தேவைப்படும் செயின்கள் தயாரிக்கத் தீர்மானித்த போது அமெரிக்காவில் டயமண்ட் செயின் நிறுவன டைரக்டர் ஒருவரைப் போய்ப் பார்க்க எண்ணினார் அருணாசலம். அந்த டைரக்டரோ முதலில் இவரைச் சந்திக்கவே தயாராக இல்லை. காரணம் இந்தியாவிலேயே வேறு ஒரு நிறுவனத்துடன் டயமண்ட் செயின் ஸ்தாபனம் ஒப்பந்தம் செய்துகொள்ளவிருந்தது. பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகியிருந்தன. ஃபோனில் இப்படி தகவல் கிடைத்ததும் அருணாசலம் சோர்வடையவில்லை. ''எனக்குப் பத்தே நிமிஷம் அவகாசம் தாருங்கள். உங்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையானால் நான் பேசாமல் திரும்பி விடுகிறேன்'' என்றார்.



வேண்டா வெறுப்புடன் சம்மதித்தார் அந்த அமெரிக்கர். அருணாசலம் அவரிடம் போகும் போது அவர் கேட்கக்கூடிய பத்து கேள்விகளையும் அதற்குரிய பதில்களையும் தாமே தயாரித்துக் கொண்டு போய்ச் சேர்ந்தார். ''நீங்கள் பேச்சு வார்த்தை



தொடங்கியுள்ள நிறுவனம் எதுவோ எனக்குத் தெரியாது; ஆனல் அந்த நிறுவனத்தை விட்டு விட்டு எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமானல், 'ஏன், எதற்காக, அதிலென்ன விசேஷ லாபம், வசதி' என்பது போல் பல கேள்விகளை நீங்கள் கேட்க விரும்பலாம். அப்படி நீங்கள் கேட்கக்கூடிய கேள்விகளையும் அதற்குரிய பதில்களையும் நானே தயாரித்து வந்திருக்கிறேன், பாருங்கள்'' என்று கூறிக் கொடுத்தார்.




டைரக்டர் அதை ஒரு நோட்டம் விட்டதுமே திருப்தி அடைந்தவராகக் காணப்பட்டார். அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. உற்பத்தியாகும் செயின்களில் பெரும் பகுதியை ஏற்கனவே நிறுவப்பட்டு வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் டி. ஐ. சைக்கிள் கம்பெனியே தன் சைக்கிள்களுக்குப் பொருத்த ஏற்றுக் கொள்ளும். புதிதாக மார்க்கெட் தேட வேண்டிய வேலை எடுத்த எடுப்பிலேயே இராது. இது தவிர வேறு பல நல்ல காரணங்களும் அருணாசலத்தின் கேள்வி பதில்களில் காணப்பட்டன.

இருப்பினும் அந்த டைரக்டர், ''எனது சகாக்களையும் கேட்டுத்தான் சொல்ல முடியும்'' என்றார். மதிய உணவுக்கு அருணாசலத்தை அவர்களது தொழிலகத்தின் காண்டீனுக்கு அழைத்துப் போனார். அங்கே உணவு பெறுவதற்காகச் சில தொழிலாளர்கள் கையில் தட்டு ஏந்தி நின்று கொண்டிருந்தனர். டைரக்டரும் அவருடன் ஓர் அயல்நாட்டு விருந்தினரும் வந்திருப்பதைப் பார்த்ததும் அவர்களைக் க்யூவில் நிறுத்தாமல் பண்புடன் முன்னே செல்ல அனுமதித்தனர். மேஜை முன் அமர்ந்ததும் அருணாசலம் சொன்னார்: ''அவசியம் நேரும்போது க்யூவில் முந்திக் கொள்வதைப் பெருந் தவருக நீங்கள் கருதவில்லை என்று புரிகிறது: என்னையும் க்யூவில் சற்று முந்திக்கொள்ள அனுமதியுங்கள்!''

இந்தச் சாதுரியமான உரையாடல் காரணமாக ஏற்கெனவே பேச்சு வார்த்தை தொடங்கி விருந்த நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்துக்கு வந்துவிட்டார் அருணாசலம்.

என்றாலும் அந்த டைரக்டர் அப்போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ''இரண்டு நாட்களில் சொல்கிறேன்'' என்றவர் அன்றிரவு உணவுக்குத் தம் வீட்டுக்கு வருமாறு அருணாசலத்தை அழைத்தார். மாலை தொழிலகம் விடும்போது வந்து விட்டால் இருவரும் சேர்ந்து காரில் போகலாமென்றார். அதன்படி அருணாசலம் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சரியாக சங்கு ஊதும் நேரத்துக்கு வந்து சேர்ந்தார். இருவரும் புறநகரில் இருந்த டைரக்டரின் வீட்டுக்கு அவரது காரில் பயணப்பட்டார்கள். போகும் போது, ''நீங்கள் வெஜிடேரியனா?'' என்றார் அந்த டைரக்டர். ''இல்லை. ஆனல் மாட்டிறைச்சி மட்டும் சாப்பிட மாட்டேன்'' என்றார் அருணாசலம். பிறகு வேறு ஏதேதோ பேசிக் கொண்டு சென்றனர். வழியில் ஒரு பெட்ரோல் பங்கில் காரை நிறுத்திய அமெ



கி. ராஜேந்திரன்

ரிக்கர் பெட்ரோல் நிரப்புமாறு சிப்பந்தியிடம் கூறிவிட்டு பங்கிலிருந்து ஃபோன் செய்தார். காரில் அமர்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார் அருணாசலம். அவர் திரும்பி வந்து காரில் ஏறி அதைக் கிளப்பி ஓட்டிச் சென்ற







இடது பக்கம்: 1. எம்.வி. அருணாசலம். 2, 3. டி-ஐ. சைக்கிள் தொழிலகம் உட்புற, வெளிப்புறத் தோற்றங்கள்.
இந்தப் பக்கம்: 1. ஒன்பது புள்ளிப் புதிர். 2. மில்லர் டைனமோ லேட் தொழிலகம். 3,4,5. ஏ.எம்.எம் முருகப்பா, ஏ.ஆர். முதலியார், ஏ.எம்.எம். அருணாசலம்.

போது அருணாசலம் சொன்னார்: ''உங்கள் மனைவிக்கு ஃபோன் செய்து மாட்டிறைச்சியை இன்றிரவு உணவில் தவிர்க்குமாறு கூறியதற்கு மிகவும் நன்றி!''

''அடேடே! அதை எப்படி ஊகித்தீர்கள்?'' என்றார் அந்த டைரக்டர்.

''காரில் ஏற்கெனவே முக்கால் டாங்குக்கு மேல் பெட்ரோல் இருந்தது. ஆகவே நீங்கள் பங்கில் நிறுத்தியது உண்மையில் பெட்ரோல் போடுவதற்கே அல்ல. அதைச் சாக்கிட்டுக் கொண்டு வீட்டுக்கு ஃபோன் செய்யத்தான் என்று புரிந்து கொண்டேன்.''

அந்த டைரக்டருக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகமும் போய்விட்டது. தமது டயமண்ட் செயின் நிறுவனம் இந்தியாவில் செயின் தயாரிப்புக்கு ஒத்துழைத்து உதவுவது என்றால் இந்த மனிதருடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும்; வேறு யாரையும் பற்றி நினைப்பதற்குக் கூட இல்லை என்று முடிவு செய்து விட்டார்.

திரு எம். வி. அருணாசலத்துக்கு இவ்வாறு பலரையும் கவர்ந்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திறமை பிறவிக் குணம் மட்டுமல்ல; அனுபவ ரீதியாகவும் அவர் பெற்ற ஒன்று.

செட்டிமார்கள் பெரும்பாலும் அந்த நாட்களில் பாங்குத் தொழில்தான் நடத்தி வந்தார்கள். அதில் ரொம்பச் செல்வம் மட்டுமல்ல; செல்வாக்கும் பெற்றிருந்தனர். இன்றைக்கு ரிசர்வ் பாங்க் ரேட் என்று கூறுவது போல் அந்நாளில் ரங்கூன் நகர வட்டி என்பது வங்கித் தொழிலுக்கு ஓர் ஆதார விகிதமாகவே இருந்தது. பர்மாவிலும் மலேயாவிலும் வங்கித் தொழிலில் ஆரம்பித்துப் பிறகு நிலப் பிரபுக்களாகவும் ரப்பர் தோட்ட முதலாளிகளாகவும் மாறுவார்கள்.

பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதில் செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 'கையாள' அனுப்பப்படுவார்கள் — அதாவது எடுபிடி வேலைகள் எதுவானாலும் செய்ய. இதன் பிறகு 'அடுத்த ஆள்' என்ற பதவி உயர்வு கிடைக்கும். இதனைக் காரியதரிசி வேலை எனலாம். இதன் பிறகு அவன் 'கூட்டாளி'யாவான். கூட்டாளி, பணம் முதலீடு செய்வதில்லை. ஆனால் லாபத்தில் அவனுக்குப் பங்குண்டு. கொஞ்சம் பணம் சேர்ந்த பிறகு கூட்டாளி தனியே பிரிந்து 'முதலாளி'யாகலாம்.

இந்தப் பரம்பரைப் பழக்கத்துக்குச் சற்றும் பழுதில்லாமல், ஆனால் நவீன முறைப்படி திரு எம். வி. அருணாசலம் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு குடும்ப நிறுவனங்கள் பலவற்றிலும் பல்வேறு இலாகாக்களிலும் பணியாற்றி அனுபவ அறிவு குறைவறப் பெற்றார்.

இந்த அனுபவ அறிவோடு சான்றோர்களை அணுகியிருந்து பெறும் ஞானமும் சேர்ந்து கொண்டது. கல்லூரியில் இவர் படித்துக் கொண்டிருந்த நாட்களில், ராஜாஜி, ஆர். கே. ஷண்முகம் செட்டியார், ஏ. எல். முதலியார், ஏ. ஆர். முதலியார் போன்றவர்கள் வீட்டுக்கு வந்து பெரியவர்களுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பேச்சுக்களை அருகிலிருந்து கவனிப்பதே எதிர்காலத்தில் பயன் தரத்தக்க அரிய அனுபவமாக விளங்கியது.

உதாரணமாக சர் ஏ. ராமசாமி முதலியார் விவரித்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்கிறார் திரு அருணாசலம்.

ஜெனிவா மகாநாடு ஒன்றில் ஐ. நா. சபையின் ஓர் அங்கமான புதிய நிறுவனத்துக்கு என்ன பெயர் வைப்பது என்று பெரிய சர்ச்சை நடந்தது. அமெரிக்காவும் பிரிட்டனும் யுனைடெட் நேஷன்ஸ் ஸோஷியல் எகனாமிக் கௌன்சில் என்று பெயர் வைக்க வேண்டும் என்றன. ருஷ்யாவோ யுனைடெட் நேஷன்ஸ் எகனாமிக் ஸோஷியல் கவுன்ஸில் என்று நாமகரணம் செய்வதில் தீவிரமாக இருந்தது. எந்த வார்த்தை முதலில் வர வேண்டும் எகனாமிக்கா அல்லது ஸோஷியலா என்பதில் தர்க்கம், வாக்குவாதம்!

இந்தச் சர்ச்சையை எப்படித் தீர்ப்பது என்று யோசித்த ஏ. ஆர். முதலியார் ஒரு முடிவுக்கு வந்து கூறினார்: ''பிரான்ஸ் தேசத்தின் லட்சிய வாசகம் 'லிபர்ட்டி, ஈக்குவாலிடி, ஃபிரடர்னிடி' என்பதுதான். சமத்துவத்தை இரண்டாவதாகத்தான் சொல்லியிருக்கிறது. எனவே 'ஸோஷியல்' என்ற பதத்தை இரண்டாவதாகவே வைப்போம்!''

அமெரிக்காவும் பிரிட்டனும் நேச நாடான பிரான்ஸை விட்டுக் கொடுக்க முடியாமல் சம்மதித்து விட்டன!

இவ்விதம் ஓர் இக்கட்டான நிலையில் சாதுரியமாகப் பிறர் ஒப்புக்கொள்ளக் கூடிய வாதங்களைக் கூறிக் காரியங்களைச் சாதித்துக் கொண்டு போவது ஓர் அரிய கலை. அந்த ஆற்றல் திரு அருணாசலம் அவர்களிடமும் நிரம்பவே உள்ளது.


ரோட்டரி டிஸ்ட்ரிக்ட் கவர்னராக இவர் இருந்தபோது ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்ற இவர் மேட்டுப்பாளையம் சென்றிருந்தார். அங்கே, ''உள்ளூரில் சிறு தொழில்கள் புதிதாகத் தோன்றி வளர உதவ வேண்டும்'' என்றார். ''இங்கு என்ன புதுத் தொழில் தொடங்க, பக்கத்தில் பெரிய தொழில் நகரமாகக் கோவை இருக்கும்போது?'' என்று சிலர் அலுத்துக்கொண்டனர். ''நீங்கள் உங்கள் நிறுவனங்களின் கணக்கு வழக்குகளை ஆடிட் செய்ய எங்கே கொண்டு போகிறீர்கள்?'' என்றார் எம். வி. ஏ.

''கோவைக்குத்தான்.''

''இங்கேயே ஓர் ஆடிட் நிறுவனம் தோன்ற வழி செய்தால் என்ன?''

''இங்கு யார் வருவார்கள்?''

''நீங்கள் ஐந்தாறு பேர் சேர்ந்து உங்கள் நிறுவனங்களின் ஆடிட்டை ஒப்படைப்பதாக



''தேர்தல் கூட்டத்திலே போய்ப் பேசறதுக்கு இவர் ஏன் இப்படிப் பயப்படறாரு?''

'' ஆளே இல்லாத இடத்தில் போய்ப் பேசறதுக்குப் பயமாயிருக்காதுங்களா!''

-ராம்ஜி


உங்கள் குடும்பத்திற்கு உற்சாகம் பொங்கும் ஆரோக்கியமும், அதிகப்படி சக்தியும் இதோ!



வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக், இன்றியமையாத 12 சேர்க்கைப் பொருள்கள் சமசீராக அடங்கப் பெற்ற டானிக்காகும். வளர்ச்சிக்கும், சக்திக்கும் விட்டமின்கள். இரத்த ஆரோக்கியத்திற்கு இரும்புச் சத்து பசியைத் தூண்டுவதற்கான ஊக்கப் பொருள்கள். தவிர, அது அருமையான சுவையுமுடையது.

உங்கள் குடும்பத்திற்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் வாங்குங்கள். இப்பொழுதே.

மஞ்சள் லேபிளை நாடுங்கள்



வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்

குடும்பம் முழுவதற்கும் பரிபூரணமான டானிக்

கிளர்ச்சியூட்டும் காட்டன்ஸ் அளிப்பதோ சென்ச்சுரி

சூட்டிங்குகள்—கற்பனை வளம் நிறைந்த டிசைன்களும் சென்ச்சுரி பருத்தியின் குளுமையான சுகமும் பரிபூரணமாக இணைந்தவை

ஷர்ட்டிங்குகள்-திகைக்க வைக்கும் கோடுகள் மனதை மயக்கும் கட்டங்கள். எண்ணற்ற தினுசுகள்-இவை எல்லாமே சேர்ந்து, சென்ச்சுரி பருத்தி எண்ணிலா வண்ணங்களில் குன்றாத ஒளி பெற்றுத் திகழ்கின்றது.

புடவைகள் பருத்தியின் சுகபோக இதம்-ஆம் உங்களுக்கு சென்ச்சுரி மட்டுமே இந்த சுகத்தை அளிக்க முடியும். சென்ச்சுரி புடவை உங்கள் எழில் உடலை ஒட்டித் தழுவ, கிளுகிளுப்பூட்டும் மகிழ்ச்சியிலே திளைக்கிறீர்கள். நெருப்பை எதிர்த்து உழைக்கும் அக்னியவிரோதக் புடவைகளும் உண்டு.

ஆடை அணி வகைகள் ஜீவன் ததும்பும் டிசைன்கள். களிநடம் புரியும் வண்ணங்கள். சென்ச்சுரி பருத்தியின் மென்மையும் உணர்ச்சியைத் தொடும் சிறப்பும் உங்களை என்றும் மகிழ்விக்கும்.

தி சென்ச்சுரி ஸ்பின்னிங் &
மான்யுபாக்சரிங் கோ. லிட்.,
பம்பாய் 400 025



சென்ச்சுரி
நூற்றுக்குநூறு
பருத்தித்
துணிமணிகள்.

national-913-Tamil

உறுதி கூறினால் நிச்சயமாக ஓர் இளம் ஆடிட்டர் கோவையிலிருந்து இங்கேயே தொழில் நடத்த வந்து சேருவார். புதிதாக ஐந்நூறு பேருக்கு அந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும். நாளாவட்டத்தில் விரிவடையும்.''

அருணாசலத்தின் யோசனை ஏற்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேறியது.

இவ்வாறு தமது உரையாடல் திறனாலேயே பல சிறிய ஊர்களில் சிறு தொழில்கள் தொடங்க வழி ஏற்படுத்தி யிருக்கிறார் அருணாசலம்.

சிறு தொழில்களுக்கு இவர் முக்கியத்துவம் தருவதற்குக் காரணம், பொருளாதார ரீதியில் அது செம்மையான கோட்பாடு என்பது மட்டுமல்ல; இவரது குடும்பமே தொழில் துறையில் சிறுக ஆரம்பித்துப் பெரிதாய் வளர்ந்த ஒன்றுதான்.

பாங்குத் தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பம் தொழில்துறையில் இறங்கியதே ஒரு வேடிக்கைக் கதை! பர்மாவில் ஒரு ரைஸ் மில்லை ஏலத்துக்கு எடுத்தார்கள். அதனைப் பிரித்துக் கர்டர்களையும் தகர ஷீட்டுகளையும் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்துவிட்டார்கள். இங்கு பெரிதாக ஒரு ஷெட்டும் போட்டுவிட்டார்கள். அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய? ஏதேனும் தொழில் தொடங்க வேண்டும். என்ன தொழிலைத் தொடங்குவது என்ற கேள்வி எழுந்தது.

அந்நாளில் எல்லோரும் ''காட்ரெஜ், காட்ரெஜ்'' என்று இரும்புப் பீரோக்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்களும் ''அஜாக்ஸ்'' என்ற பெயரில் இரும்புப் பீரோக்களும் பின்னர் அதே பெயரில் உப்புத்தாளும் தயாரிக்கத் தொடங்கினார்கள். யுத்தம் வந்தது. இறக்குமதிகள் நிறுத்தப்பட்டன. இவர்கள் தயாரிப்புக்களுக்குத் தேவை அதிகரித்தது. நல்ல லாபம் கண்டு உயர்ந்தார்கள்.

யுத்த முடிவில் இந்தியாவுக்குச் சுதந்திரம் நிச்சயம் என்று உணர்ந்தது இந்தக் குடும்பம். சுதந்திர பாரதத்துக்குத் தொழில் துறையில் துரித முன்னேற்றம் இன்றியமையாதது எனக் கண்டது. மக்களில் மிகப் பெரும்பாலோருக்குப் பயன்படக்கூடிய பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர். அதன்படி சைக்கிள் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார்கள். திரு ஏ. எம். எம். முருகப்பா இதன் ஸ்தாபகராக விளங்கி ஏற்கெனவே மிகவும் பிரபலமான பெயர்களை யுடைய சைக்கிள்களைத் தயாரிக்க முடிவு செய்தார். பிரிட்டிஷ் நிறுவனத்தின் ஒத்துழைப்பைப் பெற்றார். அம்பத்தூரில் டி. ஐ. சைக்கிள்ஸ் நிறுவனம் தோன்றி ஹெர்குலஸ், பிலிப்ஸ், பி.எஸ்.ஏ. சைக்கிள்களைத் தயாரிக்கத் தொடங்கியது.

திரு முருகப்பாவைப் போலவே அவரது சகோதரர் திரு ஏ. எம். எம். அருணாசலமும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார். மூன்றாவது சகோதரர் திரு ஏ. எம். எம். வெள்ளையன் அகால மரணமடைந்தாலும் வாழ்ந்த சிறிது காலத்திலேயே அவர் பர்மாவில் இந்திய வர்த்தக சமூகத்தின் தலைவராகவும் பர்மிய நாடாளு

நூற்றுக்கு ஒன்றேகால்



இந்தியாவில் உள்ள எல்லா நூலகங்களிலிருந்தும் புத்தகங்களை எடுத்து எல்லா இந்தியர்களுக்கும் கொடுத்தால் நூறு பேருக்கு ஒன்றேகால் புத்தகம் விகிதம்தான் வரும். -சண்டே ஸ்டாண்டர்டு - கே.ஆர்.

மன்றப் பிரதிநிதியாகவும் உயர்ந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் அபாரமாகச் சொற்பொழிவாற்றும் ஆற்றல் மிக்கவர். அவரது புதல்வர் திரு எம். வி. அருணாசலம் டி.ஐ. சைக்கிள் நிறுவனம் மேலும் மேலும் வளரவும் புதிய துறைகளில் புகவும் காரணமாயிருந்து தமிழகத்துக்கு, அல்ல பாரதத்துக்கே பெருமை தேடித் தந்திருக்கிறார்.

இன்று டி. ஐ. ஸ்தாபனம் சைக்கிள்கள் தவிர மில்லர் டைனமோ ஸெட்டுகள், பல்வேறு தொழில் துறைகளுக்குத் தேவைப்படும் எஃகுக் குழாய்கள், எஃகுப் பட்டைகள், டயமண்ட் செயின்கள் முதலியவற்றைத் தயாரிக்கிறது. கார்பரண்டம் யூனிவர்ஸல் என்ற மற்றொரு நிறுவனம் வெல்டிங் நடக்கும் இடங்களிலெல்லாம் இன்றியமையாத் தேவையான சாணைக் கற்களைத் தயாரிக்கிறது. வேறு ஒரு நிறுவனம் பூமியைக் குடைந்து அஸ்திவாரத் தூண்களை அமைக்கிறது. அஜாக்ஸ் என்ற பெயரில் குடும்பத் தொழிலாக ஆரம்பித்து அதில் அனுபவம் பெற்ற பின்னரே பொதுமக்களையும் பங்குதாரர்களாக்கிக் கொண்டு இன்று பெரும் தொழில்களை நடத்துகிறது அக்குடும்பம்.

சைக்கிள்கள், டயமண்ட் செயின்கள் முதலியன ஏராளமாக ஏற்றுமதியாகி நமக்கு அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருவது மட்டுமல்ல; அயல் நாடுகளில் புதிய தொழில்கள் தொடங்க ஒத்துழைக்கும் அளவுக்கு இன்று டி. ஐ. நிறுவனம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றுள்ளது! மலேசியாவில் இவர்கள் ஒத்துழைப்புடன் டயமண்ட் செயின் தயாரிப்புத் தொழிலகம் உருவாகி வருகிறது.

இத்தகைய வளர்ச்சியினால் வேதனைகளும் மிகுமே, அன்றாடம் எழும் பல்வேறு பிரச்னைகளைச் சமாளிப்பது பெரிய தலைவலியாய் இருக்குமே என்றால் அருணாசலம் சிரித்துக் கொண்டே, ''அதெல்லாம் ஒன்றுமில்லை; அதிகாலையில் முக்கால் மணி நேரம் ஆசனம் போட்டுவிடுவேன். அதன் பிறகு எத்தனை பிரச்னைகள் வந்தாலும் மன அமைதி இழக்காமல் அவற்றைச் சந்திக்கத் தயார்'' என்கிறார். இளம் வயதில் பெட்ரோல் ரேஷன் காரணமாகக் காரை ஒதுக்கி சைக்கிள் பிரியராக மாறிய இவர், டென்னிஸ் விளையாட்டிலும் பெரும் ஆர்வம் காட்டினார். ஆனால்

இப்போதெல்லாம் அதற்கு நேரம் இருப்ப தில்லை. மாலை நேரங்களில் தவிர்க்க முடியாத பொது நிகழ்ச்சி அல்லது அழைப்பு ஏதேனும் வந்து விடுகிறது. ஆனால் அதிகாலையில் ஒருவர் குறுக்கீடும் இன்றி யோகாசனம் பயின்று விடுகிறார்.

அதுதான் காரணமோ என்னவோ இவ் விதழ் மேலட்டையில் காட்சி தரும் திரு எம். வி. அருணாசலத்தைப் பார்க்கும் எவரும் அவருக்கு வயது ஐம்பது என்றால் நம்பவே மாட்டார்கள். அதிகபட்சம் முப்பத்தைந்து என்றுதான் மதிப்பிடுவார்கள். (கல்கி வாச கர்கள் மேலட்டையை ஒருமுறை திருப்பிப் பார்த்துத் திருஷ்டி கழிப்பதை உணர முடி கிறது!)

தோற்றத்தால் இளமையும் அறிவால் முதிர்ச்சியும் அனுபவத்தால் திறமையும் பெற்ற திரு எம். வி. அருணாசலம் அவர்களைப் பாரதத் தொழில் வர்த்தகத் துறையின் மிகப் பெரிய கௌரவம் தேடி வந்ததில் வியப்பில்லை. பல்வேறு மாநில தொழில் வர்த்தகச் சங்கங் களின் இணைப்பான தலைமைச் சங்கத்துக்கு நடப்பு ஆண்டுக்குத் தலைவராக்கப்பட்டார் அவர். (*President, Federation of the Indian chambers of Commerce and Industry.*) குடும் பத்தினர் தோற்றுவித்த தொழில்கள் தவிர வேறு பல தொழில் வர்த்தக நிறுவனங்களும் திரு அருணாசலத்தின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பி அவரை டைரக்டராக்கிக் கொண்டன.

முருகப்பா அண்டு ஸன்ஸ் நிறுவனத்தின் அதிபர்களுடைய உதார குணத்தால் விளைந் துள்ள நற்பணிகள் ஏராளம். காலஞ்சென்ற ஏ. எம். எம். முருகப்பா அவர்கள் பெயரால் ஓர் அறக்கட்டளை நிறுவி பாலிடெக்னிக், ஆஸ் பத்திரி முதலியவற்றை ஏற்படுத்தியுள் ளார்கள். விரிவான இந்த அறப் பணிகளைப் பற்றி வியந்து பேசினால், ''அது ஒன்றும் பிரமாதமில்லை, எங்கள் பரம்பரைப் பண்பை அப்படியே பின்பற்றுகிறோம், அவ்வளவுதான். நடைமுறைகளில்தான் மாறுதல்கள்'' என் கிறார் எம்.வி.ஏ. 'குடும்ப ஒற்றுமை–பிறருக்கு ஒத்தாசை' என்பது இவர்கள் கண்ணெனப் போற்றும் கொள்கையாக அமைந்துள்ளது.

எம். வி. அருணாசலம் அவர்களிடம் அன் மையில் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெறும்போது கடைசிக் கேள்வியாக, 'தேசத்தின் எதிர் காலப் பொருளாதார – தொழில் துறை முன்னேற்றம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன். அவர் பதில்:

''நான் உலகம் முழுவதும் சுற்றி வந்து விட்டேன்; எத்தனையோ அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். நமது நாட்டு மக்களின் புத்திசாலித்தனத்துக்குக் குறைவே யில்லை. நமது தேசத்தில் இயற்கை வளத்துக்கும் பஞ்சமே இல்லை. ஒன்றை மற்றொன்றோடு இணைக்க நாம் இன்னும் கொஞ்சம் கற்றுக் கொள்ள வேண்டும்; பிரயாசைப்பட வேண் டும். இதைச் செய்துவிட்டால் அப்புறம் நம்மைக் கட்டிப் பிடிக்க யாருண்டு?''

இனம், மொழியால் வேறுபட்டாலும் இந் தியா ஒன்றே என்பதை நிரூபிக்கத் தலம், தீர்த் தம், மூர்த்தி என்ற அருமையானதோர் ஏற் பாட்டினால் காசி, ராமேசுவரம் என்று நாலு திசைகளையும் இணைத்த பெருமை இந்து மதத் தைச் சாரும். ஆதி சங்கரர் காலம் தொட்டு ஆசாரியார்கள் விஜய யாத்திரை செய்து வரும் சம்பிரதாயம் நிலவி வருகிறது. அம் மரபினை ஒட்டி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர ஸ்வாமிகள் 6-2-77 அன்று காசி யாத்திரையை ராமேசுவரத்தில் பூர்த்தி செய்தார்கள். அக்னி தீர்த்தத்தில் எழுந்தருளியுள்ள ஆதி சங்கரரையும், ஸ்நா னத்துக்குச் செல்லும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளையும் படத்தில் காணலாம்.





நாளைய டூத்பேஸ்ட் இன்றைக்கே!

புதிய

க்ளோஸப்



டூத்பேஸ்ட், மவுத்வாஷ்

இரண்டும் ஒன்றாய் இணைந்தது



ஜெல்லிபோல சிகப்பொளி வீசும் க்ளோஸப்--பற்பசைகளிலே ஒரு புத்தம் புதுமை.
இதில் அடங்கியுள்ளவை: க்ளோஸப் புது நயத்தை மூச்சிலே இழைய வைக்கும் ஒரு மவுத்வாஷ்,
அதோடு க்ளோஸப் வெண்மையினைப் பற்களிலே குலவச் செய்யும் சிறப்புச் சாதனங்கள் இரண்டு.

மூச்சுக்கு நேசம் க்ளோஸப் புதுமை,
பற்களின் உறவு க்ளோஸப் வெண்மை...

மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத், கோவா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம்
ஆகிய மாநிலங்களில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-CX. 11-203 TM



புள்ளியில் பிறந்த வட்டம்

மங்கை சோமசுந்தரம்

டெலிபோன் கணகணவென்று ஒலித்தது. மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த ராம் விரைந்து வந்து ரிசீவரை எடுத்தான். ''—ஹலோ! ராம் ஹியர்! எஸ், சப் இன்ஸ்பெக்டர் ராம் தான்! என்ன விஷயம்? என்ன? அகிலாவா? கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறுளா? கடவுளே!'' என்று அலறிய ராமின் கையிலிருந்த ரிசீவர் கீழே விழுந்து ஓசை எழுப்பியது. ராம் அருகில் இருந்த சோபாவில் பொத்தென மயங்கி விழுந்தான்.

போலீஸ் அலுவலகம் ஒன்றில் சப்-இன்ஸ்பெக்டர் செல்வமும், கமிஷனரும் பேசிக் கொண்டிருந்தனர். ''சார்! சப் இன்ஸ்பெக்டர் ராம் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளார். அவருக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று எனக்குப் புரியவில்லை. திருமணமாகி ஒரு மாதம் தான் இருக்கும். காதல் மணம் செய்து கொண்டவர். தம் மனைவிமேல் உயிராக இருந்தார். எப்படி சார் தம் மனைவி கொலை செய்யப்பட்டதைத் தாங்கிக் கொள்வார்?'' என்று கண் கலங்கக் கூறினுர் சப் இன்ஸ்பெக்டர் செல்வம்.

''மிஸ்டர் செல்வம்! ராமின் விடுமுறை முடிந்து விட்டதா? எத்தனை நாட்கள் விடுமுறையில் இருந்தார்?'' என்று வினவினுர் கமிஷனர்.

''இரண்டு மாத விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தார். திருமணம் முடிந்த கையோடு காஷ்மீர் போய்த் தேனிலவை அநுபவித்துக் கொண்டிருந்தார். அப்போது அகிலாவின் தாயாருக்கு பிளட் பிரஷர் அதிகமாகி, நிலைமை சற்றுக் கவலையாக இருப்பதாய்த் தந்தி கிடைக்கவே, நேரே பம்பாய்க்குத் தம் மனைவியுடன் போயிருக்கிறுர். அகிலாவின் தாயார் சற்றுக் குணமடைந்தாலும், தன்னுேடு அகிலா சில தினங்களாவது தங்கியிருக்க வேண்டும் என்று விரும்பியதால், ராம் மட்டும் சென்னை திரும்பி யிருக்கிறுர்.

அகிலா பம்பாயிலிருந்து டிரங்கால் செய்து, தன் வருகையை ராமுக்குத் தெரிவித்து விட்டுப் புறப்பட்டிருக்கிறுள். பம்பாய்-சென்னை எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பில் ரிசர்வேஷன் செய்து அகிலாவின் தந்தை அவளை வழி அனுப்பி யிருக்கிறுர். ரயில் சென்னை, சென்ட்ரலை அடையும் முன்பே அகிலா இறந்த செய்தி வந்து விட்டது.

''பாவம்! தேனிலவால் ஆனந்தப் பட வேண்டியவர், மனைவியின் முடிவை எண்ணித் துயரமடையும்படி அல்லவா ஆகி விட்டது!'' என்ற கமிஷனர் காலிங் பெல்லை அழுத்தினுர்.

கான்ஸ்டேபிள் ஒருவர் வந்து சல்யூட் செய்து நின்ருர். ''அகிலாவின் 'போஸ்ட் மார்டம்' ரிப்போர்ட் வந்திருந்தால் கொண்டு வா'' என்றவர், சப்இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி, ''கைரேகை நிபுணர் ரிப்போர்ட் என்ன சொல்கிறது?'' என்று கேட்டார்.

''எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. ஆனுல் அகிலா அணிந்திருந்த புடவையின் தலைப்புப் பகுதி மட்டும் சற்றுக் கிழிந்தும் மிகக் கசங்கியுமுள்ளதாம். பல்லால் கடிபட்டிருப்பதினுல் சிறு சிறு ஓட்டை காணப் படுவதாகவும் ரயில்வே போலீஸின் புலன் விசாரணை ரிப்போர்ட் கூறுகிறது. அகிலா கொலையாளியைக் கண்டு பயந்து சத்தம் செய்ய முயன்ற போது, சத்தமிடாதபடி தன் கைகளால் அவளது வாயைப் பொத்தியவனுக்கு அருகில் ஒரு துணியும் கிடைக்காமற் போகவே, அகிலாவின் சேலைத் தலைப்பையே பற்றி வாயில் அடைத்திருக்கிறுன். இதைத் தவிர எந்த விவரமும் போலீஸ் ரிப்போர்ட்டில் இல்லை. கைரேகை ஏதும் பதியவில்லை'' என்ருர் சப்இன்ஸ்பெக்டர் செல்வம்.

அப்போது போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டைக் கொண்டு வந்த கான்ஸ்டபிள், அதைக் கமிஷனரிடம் கொடுத்து விட்டு வெளியேறினுர். ரிப்போர்ட்டைப் படித்து முடித்த கமிஷனர், ''என்ன பயங்கரம்! மிஸஸ் அகிலா பலவந்தமாகக் கெடுக்கப்பட்டுள்ளார், வாயில் துணியை வைத்து அடைத்ததினுலும், அதிர்ச்சியிலும் அவர் உயிர் பிரிந்திருக்கிறது'' என்று சப்இன்ஸ்பெக்டரிடம் கூறினுர்.

''சார்! நான் ராமைப் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்று கமிஷனரிடம் விடை பெற்று வெளியேறினுர் செல்வம். அவர் மனம் ராம் பற்றியே எண்ணியது.

சப் இன்ஸ்பெக்டர் செல்வமும், ராமும் பயிற்சிக் காலத்திலிருந்தே மிக நெருங்கிய நண்பர்கள். சப்-இன்ஸ்பெக்டர் ராம் அடிக்கடி, 'எதிலும் 'த்ரில்' வேண்டும் . அப்போது தான் வாழ்க்கை ரொம்ப இன்ப மயமாக இருக்கும்' என்பான்.

''ஹூம்... இப்போது அவர் வாழ்வே 'த்ரில்'லாகி விட்டது'' என்று மனத்துள் நினைத்தவாறு ராமின் பங்களாவில் நுழைந்தார். தாம் வந்ததே தெரியாது வெறித்தவாறு படுத்திருந்த ராமின் அருகே சென்று



மர்மச் சிறுகதை

6

அமர்ந்த சப்-இன்ஸ்பெக்டர், ''வெரி சாரி, ராம்! மனத்தைத் தேற்றிக் கொள்! நடந்தது நடந்துவிட்டது. கொலையாளியைக் கண்டு பிடிக்க வேண்டிய முயற்சி நடக்கிறது. போஸ்ட் மார்ட்டம் முடிந்து விட்டது. உடலை இன்று மாலை பெற்றுக் கொள்ளலாம். கமிஷனர் எல்லா உதவியும் செய்து கொலையாளியைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்துள்ளார். தைரியமாய் இரு'' என்று கூறி மேலே ஆகவேண்டிய காரியங்களையும் கூட இருந்து கவனித்தார்.

ஒரு வாரம் கழிந்தது. கமிஷனர் முன் கிடந்த சில குறிப்புக்களை எடுத்துப் படித்த சப்-இன்ஸ்பெக்டர் செல்வம், ''சார்! வேறு ஒரு தடயமும் கிடைக்கவில்லையே. ரயில்வே போலீஸில் இருந்து ஏதாவது விவரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்'' என்றார்.

''முதல் வகுப்பில் போர்ட்டர் உட்படப் பல பேர் ஏறி இறங்கியிருக்கிறார்கள். கௌரவமான பெரிய இடத்து மனிதர்கள் சிலரும் முதல் வகுப்பில் வந்திருக்கின்றனர். ஆந்திர மாகாண எல்லைக்கு மேல் அகிலா மட்டும் முதல் வகுப்பில் தொடர்ச்சியாய்ப் பயணம் செய்திருக்கிறாள். இதுவரை எல்லாரையும் விசாரித்ததில் பயனுள்ள தகவல் ஏதும் கிடைக்கவில்லை'' என்றார் கமிஷனர்.

அப்போது உள்ளே வந்த கான்ஸ்டேபிள் ''சார்! சப் இன்ஸ்பெக்டர் ராம் வந்திருக்கிறார்'' என்றார்.

அவர் அனுமதி பெற்று உள்ளே நுழைந்த ராம், ''சார்! நான் எத்தனையோ வழக்குகளை நடத்திக் கொலையாளியைக் கண்டுபிடித்த தற்காகச் சந்தோஷப் பட்டிருக்கிறேன். ஆனால் இன்று என் வழக்கை வேறு ஒருவர் எடுத்து நடத்த வேண்டியதாகி விட்டது. சார்! தயவு செய்து குற்றவாளியைக் கண்டு பிடிக்க என்னை அனுமதியுங்கள். என் மனைவியைக் கொன்றவனை நானே கண்டுபிடிக்கிறேன். அந்தக் கொலையாளியைப் பிடித்து என் அகிலா அவனுக்கு என்ன தீங்கு செய்தாள் என்று ஒரு வார்த்தை கேட்க வேண்டும். என் லீவைக் கான்சல் செய்து விடுகிறேன் சார்'' என்றான் ராம்.

சில நிமிடங்கள் மௌனத்தில் கலந்தன. ''ஓகே!'' என்றார் கமிஷனர்.

சில நாட்கள் ஓடி மறைந்தன. சப்-இன்ஸ்பெக்டர் ராமும் செல்வமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அகிலா கொலையுண்ட ரயிலின், முதல் வகுப்பில் அவளுடன் பம்பாயிலிருந்து புனே வரை பயணம் செய்த குல்கர்னி தம்பதிகள், ஆந்திரா வரை வந்த கதிர் பாபு, அந்த முதல் வகுப்பில் டிக்கெட் பரிசோதனைக்காக ஏறிய பரிசோதகர்கள், முதலில் அவள் இறந்து கிடந்ததைப் பார்த்த போர்ட்டர் அனைவரையும் விசாரித்தாயிற்று. யாருக்கும் அவளைக் கொலை செய்ய வேண்டிய நோக்கம் இருந்ததாய்த் தெரியவில்லை. நகைக்காகவோ, பணத்துக்காகவோ இந்தச் சம்பவம் நடக்கவில்லை.

ஏனெனில் சூட்கேஸிலிருந்த பொருட்களோ, அகிலா அணிந்திருந்த நகைகளோ எதுவுமே களவு போகவில்லை'' என்று கூறி நிறுத்திய ராமிடம், ''எஸ் ராம்! உன்னால் தண்டனை அடைந்த கைதிகளில் யாரேனும் உன் மீது கோபம் கொண்டு பழி வாங்க இப்படி ஒரு திட்டத்தைக் கையாண்டிருக்கலாமோ?'' என்று கேட்டார் செல்வம்.

''நோ! என் கல்யாணம் பம்பாயில் நடந்தது. பம்பாயிலிருந்து நேரே காஷ்மீர் போய் விட்டோம். தவிரவும் அகிலாவைச் சென்னையில் வைத்துக் கொலை நடக்கவில்லையே?'' என்ற ராம், போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை எடுத்து வைத்துக் கொண்டு ஆழ்ந்து படிக்கலானான். அகிலா கொல்லப்பட்டதாக கணித்துக் குறிப்பிட்ட நேரத்தையும், அந்த நேரத்தில் எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந்த இடத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.

கடப்பா ரயில் நிலையத்திலிருந்து குண்டக்கல் ரயில் நிலையம் வருவதற்குள்தான் கொலை நடந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்த ராம் ''செல்வம், அகிலாவின் பொருட்களை யெல்லாம் ஒருமுறை நான் பார்க்க வேண்டும்!'' என்று கூறிச் செல்வத்தோடு அடுத்த அறைக்குச் சென்றான்.

எல்லாவற்றையும் பார்த்த ராமின் கண்கள் கலங்கின. கடைசியில் அகிலா அணிந்திருந்த புடவை அவன் மனத்தில் பழைய நிகழ்ச்சியைக் கிளறிவிட்டது.

அன்று, காஷ்மீரில் இருக்கும் கடைகளையெல்லாம் அலசி, ஒருவழியாய் வாங்கிய காஷ்மீர் பட்டுப் புடவையை அணிந்து கொண்டு அவள் அழகு பிம்பமாய் ஜொலித்ததை நினைத்துப் பார்த்தவன், அந்தப் புடவையையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானான். அதில் தெரிந்த புள்ளிகள் அவன் கவனத்தைக் கவர்ந்தன. புடவையின் நுனிப் பகுதியில் நெருக்கமாய்ப் புள்ளி புள்ளியாய்த் தெரிந்தது. கூர்ந்து பார்த்தால் மட்டுமே தெரியக் கூடிய புள்ளிகள், மங்கலாகக் காட்சியளித்தன.

திடீரென, 'செல்வம்' என்று கத்தின ராம், ''நான் இந்தப் புடவையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகிறேன். மற்றவைகளை ஒழுங்கு படுத்திக் கொள்'' என்று கூறி விட்டுத் திரும்பிப் பார்க்காது, விர் என வெளியேறி வெஸ்பா ஸ்கூட்டரில் விரைந்து பறந்தான்.

திகைப்புடன் செல்வம் ராம் போன திசையையே வெறித்துப் பார்த்தவாறு நின்றார். அதற்குப்பின் மூன்றும் நான்தான் ராமைக் கமிஷனர் அலுவலகத்தில் கண்டார் சப் இன்ஸ்பெக்டர் செல்வம். கமிஷனரிடம் கொலையாளியைக் கண்டுபிடித்து விட்டதாய்க் கூறிக் கொண்டிருந்தான் ராம்.

''சார்! அகிலாவின் புடவையில் சில புள்ளிகள் தெரிந்தன. அவற்றை மிகக் கூர்ந்து பார்த்தால் தான் புரியும். அதைத் தற்செயலாய்ப் பார்த்தேன். அந்தப் புடவையை அதிகபட்சம் இரண்டு, மூன்று முறைதான் அவள் அணிந்திருப்பாள். 'புதுமைக் குன்றாத அப் புடவையில் புள்ளி எப்படி வந்தது? எதனால் அதுபோல் ஆயிற்று?' என்று சிந்தனையில் இருந்த போது, என் வீட்டுச் சமையல்காரன், ''ஒன்றுமே சாப்பிடாமல் இருந்தால் எப்படி? உடம்பைக் கெடுத்துக் கொள்கிறீர்களே? இதைச் சாப்பிடுங்கள்'' என்று ஒரு கிளாசில் ஆரஞ்சு ஜூஸ் கொண்டு வந்து நீட்டினான். அதில் ஒரு துளி புடவையின் மீது விழுந்து விட்டது. அந்த ஈரம் பட்டதும் புள்ளியின் நிறம் மாறி வயலெட் வண்ணமாகியது. எதனால் இப்படி ஆயிற்று என்று யோசித்த எனக்குத் திடீரென்று ஞாபகம் வரவே, ஒரு காப்பிங் பென்சிலால் புடவையில் ஒரு புள்ளி வைத்து விட்டுத் தண்ணீரை இலேசாகத் தெளித்தேன். இரண்டும் ஒன்று போல் இருந்தது.

''மெல்ல மெல்ல விஷயம் எனக்குப் பிடிபட்டது. கடப்பா ஜங்க்ஷனில் வந்து நின்ற போது அங்கு டிக்கெட் பரிசோதகர் முதல் வகுப்பில் ஏறியிருக்கிறார். அப்போது உடன் வந்த கதிர் பாபுவும் இறங்கி விடவே அகிலா மட்டும் தனித்திருந்திருக்கிறாள். டிக்கெட்டை வாங்கிக் கையெழுத்திட்ட பின்பும் அங்கேயே அமர்ந்து பேசிக் கொண்டிருந்திருக்கிறார் பரிசோதகர். அகிலாவின் அழகில் மனத்தைப் பறிகொடுத்து நிதானத்தை இழந்த அவர் அவளைத் தம் விருப்பத்துக்கு வற்புறுத்தியிருக்கிறார். அகிலாவின் தனிமைவேறு அவரைத் தூண்டியிருக்கிறது. மிருக வெறியுடன் நெருங்கியிருக்கிறார். அகிலா அவரை மிரட்டி, அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுக்கும் நோக்கத்தில் எழுந்திருக்கவே, அவளைக் கீழே தள்ளி ஒரு கையால் வாயைப் பொத்தி அவளை அணைக்க முயற்சி செய்திருக்கிறார். அகிலா திமிறிக் கொண்டு சப்தமிட முயற்சி செய்யவே, அருகில் எதும் துணியில்லாததால், அவளது சேலைத் தலைப்பையே வாயில்வைத்து அடைத்திருக்கிறார். பட்டுப் புடவையாதலால் வழுக்கியிருக்கிறது. தாம் டிக்கெட் திருத்தும் காப்பிங் பென்சிலால் சேலையில் குத்தித் திணித்திருக்கிறார். புள்ளி புள்ளியாய்த் தெரிந்த அடையாளம் அந்தப் பென்சிலுடையதுதான்.

''தன் காரியம் முடிந்ததும்தான் அகிலா அதிர்ச்சியில் மயங்கி விட்டது புரிந்துள்ளது. அவள் மயக்கம் தெளிந்தால் விஷயம் வெளிப்பட்டு விடுமே என்று அஞ்சித் தம் சட்டையைக் கையில் சுற்றிக் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கிறார்.

''நான் கடப்பா ரயில் நிலைய அதிகாரியுடன் பேசக் கொடுத்து அந்த டிக்கெட் பரிசோதகரைப் பற்றி விசாரித்தேன். அவர் ஐம்பது வயதை எட்டிக் கொண்டிருந்தாலும் பெண்கள் விஷயத்தில் பலஹீனமானவர் என்று தெரிந்தது. அவரையே நேரிடையாக மிரட்டி உண்மையைக் கக்க வைத்து விட்டேன்.

''அவரை ஆந்திரப் போலீசார் பிடித்து உள்ளே தள்ளியுள்ளனர். அந்தப் புள்ளியில் பிறந்தது நான் இந்தப் புதிருக்குப் பதில். சார்! இதுவே என் கடைசி வழக்காய் இருக்கட்டும்!'' என்றவாறு தன் ராஜினாமாக் கடிதத்தைக் கமிஷனர் முன் நீட்டினான் ராம்.




ஆசிரியர்:- பாலு, ''என் அப்பா தேர்தலில் நிற்கிறார்'' என்பதை எதிர்காலத்தில் கூறு.

பாலு:- ''என் அப்பா தேர்தலில் நின்று தோற்றுப் போவார்.'' —ராம்ஜி



IMPRESSIONS



குட்மார்னிங் டாக்டர்!

மனம் தளர்ந்தது உடல் நலிந்தது!

"உடம்பெல்லாம் வலிக்கிறது. தலைவலி; தசைகளில் வலி. தூக்கமே கிடையாது. காலையில் படுக்கையிலிருந்து எழுந்தால் ஒரே சோர்வு. பசி எடுப்பதே இல்லை. வேலையிலும் மனத்தைச் செலுத்த முடியவில்லை. எனது ஞாபக சக்தியும் அறவே குன்றிவிட்டது. என் அலுவலகத்தில் பதினைந்து நாட்கள் விடுப்பு அளித்து, 'குணப்படுத்திக் கொண்டு வா' என்று கூறிவிட்டார்கள்'' என்று தன் நிலைமையை விண்டுரைத்தார் இளைஞர் மோகன். தலை வலிக்கும் பசி எடுக்கவும் தனித் தனியே மருந்து சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்; பயனில்லை. பாவம், அதிகம் போனால் அவருக்கு முப்பது வயதுதான் இருக்கும்.

இவ்விதம் பலவிதமான உடல் உபாதைகளைச் சொல்லிக் கொண்டு வரும் நோயாளிகள் பலரும் உண்மையில் மனத் தளர்ச்சி அல்லது மனச் சோர்வு (Mental Depression)க்கு இலக்கானவர்களே. மனச் சோர்வு அல்லது மனத் தளர்ச்சி மனச் சோர்வாகவே வெளிப்படுவதில்லை. அதன் விளைவான உடல் உபாதைகள் தாம் வெளிப்படையாகத் தெரியும்.

மோகனுக்கு ஏற்பட்டிருந்த சொந்த இழப்பு ஒன்று அவரது மன உளைச்சலுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. மன உளைச்சலின் விளைவாக மனத் தளர்ச்சி (Depression) ஏற்பட்டு, அதுவே உடலையும் பாதித்திருக்கிறது. இவற்றை அவருடன் நீண்ட நேரம் பலவாறாக அனுதாபத்துடன் பேசிக் கேள்விகள் கேட்டுத்தான் கண்டுகொள்ள முடிந்தது. உடல் நிலையை மட்டும் சோதித்தால் இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.

''ஆக அடிப்படைக் காரணமான மனத் தளர்ச்சிக்குச் சிகிச்சை செய்தால் அதன் விளைவாகத் தோன்றும் உடல் உபாதைகளும் நீங்கிவிடும். அப்படித்தானே டாக்டர்?''

''ஆமாம். மூளையில் உள்ள 'அமின்' (Amine) எனப்படும் பொருளின் அளவு குறைந்தால் மனத் தளர்ச்சி ஏற்படுகிறது. 'அமின்' அளவு கூடினாலும் நல்லதல்ல. அளவுக்கு மீறிய உணர்ச்சி வேகம் (Excitement) ஏற்படும். ஆகவே மூளையின் 'அமின்' அளவு வெகுவாகக் குறைந்து விடாமலும் கூடி விடாமலும் கவனித்துக் கொள்ள வேண்டும். இதற்கு இப்போது நிறைய மருந்துகள் உள்ளன. மருந்து மூலம் குணப்படுத்த முடியாத நிலையில், மின் அதிர்ச்சி வைத்தியம் (இ.சி.டி.) பயன்படும்.''

''வீட்டிலேயே சிகிச்சை செய்து கொண்டால் போதுமா? அல்லது மருத்துவ மனையில் சேர்ந்து சிகிச்சை பெறவேண்டுமா?''

''சாதாரண மனத் தளர்ச்சி என்றால் வீட்டிலேயே சிகிச்சை செய்துகொண்டால் போதும். சில நோயாளிகள் 'நான் ஏன் இனி உயிர் வாழவேண்டும்? இப்படி நடைப்பிணமாகி விட்டேனே? நான் தற்கொலை செய்துகொள்வதாக முடிவு செய்து விட்டேன்' என்று சொல்வதுண்டு. அப்படிப்பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்த்துச் சிகிச்சை அளிப்பது உசிதம். மனத் தளர்ச்சி நீங்கியதும் உடல் நலம் பழையபடி சீராகி விடும் என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டும். இது குணப்படுத்தக் கூடிய நோய். யாரும் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.''

டாக்டர் எம். சாரதா மேனன் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பீ.





மதுர நாயகி

பி.எம். சேதுர்

மூன் ஜன்மத்தில் வித்யாதவதியாக இருந்தவள் மறு ஜன்மத்தில் மலயத்வஜ பாண்டியனின் மனைவி, காஞ்சனமாலையாகப் பிறந்தாள். ஏற்கெனவே அவளுக்கு வரம் கொடுத்தபடி, உமை மூன்று வயதுப் பெண்ணாக வந்து அவளுடைய மடியில் அமர்ந்தாள். மூன்று தனங்களை உடைய அப்பெண் தடாதகை எனும் பெயருடன் கன்னியாக மதுரையை அரசாண்டாள். (பாண்டிய நாட்டுக்குக் கன்னி நாடு எனப் பெயர் வரக் காரணம் இதுதான்.)

வெற்றி முழக்கத்துடன் திக்விஜயம் செய்து வந்த தடாதகை கைலாய மலையை முற்றுகை யிட்டாள். நந்தி தேவரும் பூத கணங்களும் போரில் தோற்ற பின் சிவபெருமான் யுத்தம் செய்ய வந்தார்.

அவரைக் கண்டதும் உமையின் அவதாரமான தடாதகையின் மூன்றாவது தனம் மறைந்தது.

—புராணக் கதை

9

சுந்தரேசன் மூச்சு விட்டாலே அது பெருமூச்சைப் போல அசுருதியுடன் வரும். அவன் பெருமூச்சையே உதிர்த்தால்? ஓர் அசுர ஒலியுடன் அவனையே பயமுறுத்தியது. அவனுடைய பெருமூச்சுக்குக் காரணம் அந்தப் பெல்ஜியத்துக் கிழவி இணையற்ற மனத் தாராளத்துடன் கொடுத்த வேர்க்கடலை அளவுள்ள வைர மோதிரம்தான். கடந்த மூன்று தினங்களாகப் பூதம் புதையலைக் காப்பது போல், நாகம் மாணிக்கத்தைக் காப்பது போல, (இரண்டும் இரண்டையும் காத்ததை இதுவரை யாரும் பார்த்ததில்லை.) வைர மோதிரத்தை வேஷ்டியிலே சுற்றி மடியிலே புதைத்து வைத்திருந்தான். இதன் காரணமாக அவன் வேஷ்டியை மாற்றவும் பயந்தான்.

மதுரையில் உள்ள வைர நகை வியாபாரிகளில் யாரையும் நம்ப அவன் தயாரில்லை. வைரத்துக்கு மதிப்பீடு செய்யச் சொன்னால் பத்துக்கு ஒன்றாகக் கூறுவார்கள் என்று நினைத்தான். அவனுடைய இந்த எண்ணத்துக்கு அனுபவம் காரணமில்லை. வைரத்தின் எடையைக் காரட்டில்தான் சொல்லுவார்கள் என்ற விஷயமே ஒரு வாரத்துக்கு முன்தான் அவனுக்குத் தெரியும்.

இப்போது என்ன செய்வது? மதுரையை விட்டால் அவனுக்கு வேறு கதி கிடையாது. திருச்சி, தஞ்சாவூர் என்று வேறு பெரிய ஊர்களுக்குச் சென்று விசாரிக்கலாமா என்று யோசித்தான். ஒருவேளை வைரத்தின் அளவையும் அவனுடைய முகத்தையும் மாறி மாறிப் பார்த்து, திருச்சி, தஞ்சை வியாபாரி போலீஸைக் கூப்பிட்டு விட்டால்? இது திருட்டுச் சொத்து இல்லை என்று அவனுக்கும் பெல்ஜியக்காரிக்கும் மட்டும்தான் தெரியும். சாட்சி சொல்ல யார் இருக்கிறார்கள்?

திடீரென்று சோமசுந்தரரை இத்தனை நாளாக வழிபட்டு வராத குற்றம் நெஞ்சில் மோதியது. லவலேசமாவது பக்தியுடன் அவன் ஆலவாய் அழகனைக் கும்பிட்டிருந்தால் அவரே பெல்ஜியக்காரியின் உருவத்தில் வந்து போலீஸ் கான்ஸ்டபிளிடம் சாட்சி சொல்லுவார். இனி இதைப் பற்றி வருந்திப் புண்ணியம் இல்லை. பழைய சொக்கநாதரை இன்னும் தீவிரமாகத் தரிசித்து முறையிட வேண்டியதுதான்.

ஒரு பயத்துடன் வேஷ்டி முடிச்சை அவிழ்த்தான். மெதுவாக. விரல் நடுக்கத்துடன் மோதிரத்தை எடுத்தான். அவனுடைய சுண்டு விரலுக்குக் கூட அது போதவில்லை. ஒரு தடவை வைரத்தை உற்றுப் பார்த்தான். அழுக்கு வேஷ்டியில் புதைந்திருந்ததாலோ அல்லது சூரிய வெளிச்சம் இல்லாததாலோ கல் மங்கினாற் போலிருந்தது. சற்றே தோன்றிய ஏமாற்றத்துடன் அதை வேஷ்டியால் துடைத்தான். ஏமாற்றம் மறையாமற் போகவே, வாசலுக்கு ஓடி வந்தான்.

அங்கே காலைச் சூரியனின் இளங்கதிரில் நின்ற லாவண்யா வைரம் போல பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

"குட் மார்னிங் சுந்தரேசன்!"

லாவண்யா தனக்கே உரித்தான புன்முறுவலுடன் பார்த்தாள்.

சுந்தரேசனுக்குக் கை ஓடவில்லை. காரணம், கையில் மோதிரம் இருந்ததுதான். காலும் ஓடவில்லை. காரணம், அதிசயமாக லாவண்யா அவனைப் பார்க்க வந்திருக்கிறாள்.

"வாங்க மிஸ். லாவண்யா!"

"சுந்தரேசன், ஓர் அவசரத்துடன் உங்களைப் பார்க்க வந்திருக்கேன்... இந்தத் திண்ணைக் குறட்டில் உட்கார்ந்து பேசலாமா?" என்றாள் லாவண்யா.

உள்ளே ஹாலில் சோபா இருக்கிறது. ட்ராயிங் ரூம் சௌகரியமாக இருக்கிறது

என்றெல்லாம் சொல்லிப் பூப்போன்ற லாவண்யாவை உள்ளே அழைத்துச் செல்வதாக ஒரு விநாடி, ஒரே ஒரு விநாடி அவன் கண் முன் ஒரு காட்சி தோன்றியது. ஆனால், அடுத்த விநாடியே, ''ஓகே'' என்றான். அவன் இருக்கும் வீட்டில் லாவண்யாவை எங்கே உட்கார வைக்கிறது, எப்படி உட்கார வைக்கிறது? ஒரு நாற்காலி கூட இல்லையே!

நான் வந்த காரியத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கு முன், லாவண்யா, ''ஆமாம், கையிலே என்ன மோதிரமா?'' என்று கேட்டாள்.

இப்போது அவள் வைர மோதிரத்தைப் பற்றி விசாரித்ததை ஒரு பெருமையாக நினைத்துக்கொண்டான். அதே சமயத்தில் அவன் இவ்வளவு பெரிய மோதிரத்தை வைத்துக் கொண்டிருப்பது ஒரு தினசரி நிகழ்ச்சி என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும் என்றும் தோன்றியது. இந்த ஆசை தூக்கிவிட்ட அலட்சியத்துடன், ''ஆமாம்'' என்றான். அந்த அலட்சியம் கைக்கும் தாவிவிடவே, அது மோதிரத்தைத் தானாகவே அவள் முன் நீட்டியது.

லாவண்யா அதைக் கையில் வாங்கிப் பார்த்ததுமே திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

அவள் அபிப்பிராயம் ஏதும் சொல்லவில்லையே என்ற தாபம் அவனுள் பிறக்கவே, அவனே விசாரிக்க வார்த்தைகளைத் தேடினான். ஆனால் அதற்குள் லாவண்யா, ''மிஸ்டர் சுந்தரேசன், இன்னிக்கு மத்தியானம் ஒரு மணியிலிருந்து ஃப்ரீயாக இருக்கிறீர்களா?''

''இன்னிக்குப் பூரா ஃப்ரீதான். வைரம் எப்படி இருக்கு?''

''அப்போ தயை செய்து கரெக்டா ஒண்ணே கால் மணிக்கு மேற்கு கோபுர வாசலுக்கு எதிரே காத்திருக்கிறீர்களா?''

''நாகப்பட்டினம் மிட்டாய்க் கடைக்கு முன்னாலே நின்றால் போதுமா?''

''போதும்.''

''அப்போ அங்கே நிக்கறேன்... வைரம் எப்படி?''

''மத்தியப் பிரதேசத்திலிருந்து ஒரு பார்ட்டி வருகிறது. நாப்பது பேர்!''

''மத்தியப் பிரதேசம்னா என்ன பாஷை?''

''இந்தி. ஆனா அவங்க பேசற இந்தி மற்ற இந்திக்காரர்களுக்கே புரியறது கஷ்டம்.''

''ஏன் அப்படி?''

''எல்லாரும் மலைவாசிகள். பஸ்தர்னு ஓர் இடம் இருக்கு. அங்கேருந்து வரார்கள்.''

''இந்தின்னா என் ஃப்ரெண்டு பாஷ்யத்தைக் கூப்பிட்டுக் கொள்கிறேன்.''

''நீங்க யாரை வேணுமானாலும் கூப்பிட்டுக் கொள்ளுங்கள். இன்னிக்கு கோயில், மால், தெப்பக்குளம், நாளைக்குக் கார்த்தாலே அழகர் கோயில். மத்தியானம் ராமேசுரம் போறார்கள்.''

''ஏன் இதை எனக்குத் தருகிறீர்கள்? உங்க வரும்படியைத் தியாகம் செய்வானேன்?''

''இம்மாதிரி பார்ட்டிகளோடு பழகி எனக்குப் பழக்கம் இல்லே. ஆனா எனக்கு அழைப்பு வந்தது. அது வந்த இடம் பெரிய இடம்.



அதான் உங்களைச் பொரிக்க செய்கிறேன். முப்பது ரூபாய் கிடைக்கும்.''

''அப்படியா?'' வைரத்தை விட விலை உயர்ந்ததாகப் பட்டது இப்போது வந்திருக்கும் வேலை.

''வைரம் எப்படி?''

''யார் கொடுத்தா? நாலு நாள் முன்னாலே 'ஒரு பெல்ஜியக்காரிக்குக் கைட்டாப் போனீர்களே, அவள் கொடுத்தாளா?''

''உங்களுக்கு எப்படித் தெரியும், மிஸ். லாவண்யா?''

''மேனாட்டுக்காரர்களுக்கு இந்த மாதிரி ஒயிட் மெட்டல்லே பட்டை தீட்டின கண்ணாடிக் கல்லைக் கட்டி மோதிரமாப் போட்டுக் கறதிலே ஒரு தனி மோகம் உண்டு... நம்ம ஊர் குறத்திகள் இல்லையா, அது மாதிரி...''

சுந்தரேசனுடைய சுவாசப் பை காற்றெல்லாம் வெளியேற, அவன் உடல் தள்ளாட, தலை சாயும் போல இருந்தது. லாவண்யா ஒரு தூணாக இருந்திருந்தால் அவளைப் பிடித்துக்கொண்டு அவள் மேல் சாய்ந்திருப்பான். நல்ல வேளை, லாவண்யா புண்ணியம் செய்திருந்தாள்.

சுந்தரேசனுடைய முக மாற்றத்தையே கவனிக்காத லாவண்யா, ''அப்போ, நான் வரேன், மிஸ்டர் சுந்தரேசன்! வி மீட் அட் க்வாட்டர் பாஸ்ட் ஒன்'' என்று சொல்லி விட்டு மெதுவாக நடக்கலானாள்.

சுவாசப் பையில் இன்னும் புதுக் காற்று புகுந்து நிரப்பாததால் சுந்தரேசன் நீண்ட பெருமூச்சை விடவில்லை. இன்னைக் குறட்டில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டான். அந்தப் பாழாய்ப்போன மேனாட்டுப் பயணி கண் முன் தோன்றினான். பொய்ப் பல்லால் சிரித்த அவன் எப்படி அவனை ஏமாற்றி விட்டான்? ஒரு வேர்க்கடலையின் மதிப்புக் கூட இல்லாத கண்ணாடிக் கல்லை அவனுக்குப் பரிசாகக் கொடுத்து ரயிலேறி விட்டானே!

இப்போது மட்டும் அவன் உடலும் சதையுமாக அவன் எதிரே வந்தால், க்யூ மொட்டையை விட்டு அவனைக் கிச்சு வதம் செய்ய ஏற்பாடு செய்திருப்பான். ஏன், அவனுக்கு நேர்ந்த அநீதியையும் அவமானத்தையும் நஷ்டத்தையும் மாபெரும் மதுரை வாசிகள் அறிந்தால், அவனைக் கிச்சு வதம் செய்ய ஒரு பெரிய க்யூவே உருவாகியிருக்கும்! அதில் க்யூ மொட்டை முன் நிற்க, சுந்தரேசன் பக்கவாட்டில் நின்று உற்சாகப்படுத்துவான்.

கடைசி முறையாக மோதிரத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஓர் ஆசை ஒரு தீராத வெறியாக எழுந்தது. பார்த்தான். சூரிய வெளிச்சத்தில் அது பல வர்ணங்களைக் கக்கிக் கொண்டு சிரித்தது.

திடீரென்று ஒரு சந்தேகம்.

ஒருவேளை லாவண்யாவின் கணக்கு தப்புக் கணக்காக இருந்தால்? ஒரு சமையற்காரனுடைய பெண்ணுக்கு வைரத்தைப் பற்றி என்ன தெரியும்? அவள் வீட்டிலே வைரத்தைப் பார்த்ததில்லை! அவளுடைய பேச்சைக் கேட்டு, மோதிரத்தை அவன் தெருவில் தூக்கி எறிந்து, அதை யாராவது ஒரு குப்பை வண்டிக்காரன் எடுத்து, ஐயாயிரம் ஆறாயிரம் என்று சம்பாதித்து விட்டால்!

திடீரென்று க்யூ மொட்டையின் நினைவு மீண்டும் தோன்றியது. அவனுடைய தகப்பனார் ஒரு காலத்தில் வைர நோட்டத்தில் நிபுணர் என்று அவனுக்குத் தெரியும். இந்த மோதிரக் கல்லைப் பார்த்து நோட்டம் சொல்லும் வரையிலாவது அவர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கலாம். அவனுடைய போதாத காலம், க்யூ மொட்டையின் அப்பா போய்ச் சேர்ந்து விட்டார். ஆனால் அவருடைய இந்த அறிவு ஒருவேளை பிள்ளைக்கும் பாரம்பரியமாக இருக்குமோ? இதுவரையில் இப்படி ஓர் அறிவு தனக்கு இருப்பதாக கியூ மொட்டை பிரஸ்தாபித்தது இல்லை. அவனுக்கு அறிவே கிடையாது என்பது சுந்தரேசனுடைய தீர்மானமான கருத்து என்றாலும், எதற்கும் அவனைச் சந்தித்து வைரமா, கண்ணாடியா என்று தெரிந்து கொண்டு விடு

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*





இளமைப் பருவம் —பூவாய்
மலரும் நாட்கள்—மலர்ந்து
சிரித்து உங்கள் மனதை அள்ளி
வளரும் பருவம்...இப் பருவத்தில்
அவனுக்குக் கட்டாயம் தேவை—
இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன்
அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்
...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய
வளர்ச்சியாக மாறும். நலம் தரும்
வைட்டமின்கள் இரும்புச் சத்து. இவற்-
றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக
மிக அத்தியாவசியமான அமினோ
அமிலம். லைசின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.

டிராப்ஸ்:
2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப்:
14 வயது வரையில்



இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும் உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

Lederle தயாரிப்பு* அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடுமார்க்

Sista's INC-828 I/76 Tam

வது. அதன் பிறகு, பெல்ஜியக்காரிக்கு எப்படிப்பட்ட அர்ச்சனையைச் செய்வது என்று தீர்மானிக்கலாம் என்று எண்ணினுன்.

லாவண்யா சுந்தரேசன் வீட்டிலிருந்து புறப்பட்டு வக்கீல் புதுத் தெருவை நோக்கி நடந்தாள். பன்னிரண்டரை மணிக்கு பஸ்தர் மலேவாசிகளைப் பஸ் நிலேயத்தில், தாரிணியுடன் சந்திக்க வேண்டும். அதுவரையில் வேலேயில்லே. வீட்டுக்கே திரும்பிச் செல்ல மனம் விரும்பியது. ஆனல் அம்மாவின் போக்கு விருப்பத்துக்கு அணேயாக நின்றது. பண விஷயம் இருவருக்கு மிடையே ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தி விட்டது. லாவண்யாவுக்கு அப்பா மீது பாசமோ இரக்கமோ இல்லே என்று அம்மா எரிந்து விழுகிருள். ஆனல், லாவண்யாவுக்குத் தெரியும், அன்பும், பாசமும், இரக்கமும் வேறு, பிரயோசனமில்லாத உதவி வேறு என்று. பெரிய மனிதர்களுக்குக் கூப்பிட்ட குரலுக்கு வர வேண்டிய கான்சர் வியாதி, அப்பாவுக்கு வந்திருக்கிறது. அதுவும் நுரையீரலில் வந்திருக்கிறது. நன்ருகப் பரவியும் இருக்கிறது. நுரையீரலில் கான்சர் வந்து முற்றிய பின் ஒருவர் சிகிச்சை பெற்றுத் தேறிப் பிழைத்து விடுவது என்பது ரொம்ப ரொம்ப அபூர்வம்.

தன் தோழி ஒருத்தியின் ஞாபகம் வந்தது லாவண்யாவுக்கு. பரீட்சை ஹாலில் அந்தப் பெண், ''ம., அம்மா முந்தாநாள் ராத்திரி செத்துப் போயிட்டா!'' என்ருள்.

''அப்படியுமா பரீட்சை எழுதறே இன்னிக்கு!'' என்று அன்றைய சங்கரி கேட்டாள்.

''அம்மா பிழைப்பான்னு யாரும் சொல்லலேயே... போற கேஸ்னு எல்லாருக்கும் தெரியுமே.''

''பாவம்.''

''பாவம்தான். என்ன செய்யறது? அம்மா கொஞ்சமா அவஸ்தைப்பட்டாள்? போனதிலே அவளுக்கும் விடுதலே. எங்களுக்கும் ஒரு ரிலீஃப்.''

''என்னடி, இப்படிச் சொல்றே?'' ஒரு திகைப்புடன் சங்கரி கேட்டாள்.

''ம. என் அப்பாவே டாக்டர்... கான்சரால் வர உபாதையைத் தடுத்து நிறுத்தலாம், வலியைக் குறைக்கலாம். ஆனு கான்சரை ஒரே அடியா அழிக்க முடியாது... இப்ப எல்லாம் குணமாயிட்ட மாதிரி தோணும். திடீர்னு ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் மறுபடியும், 'ஸார், வந்துட்டேன்' என்று குரல் கொடுக்கும். அம்மா விஷயத்திலே 'மேடம்'னு குரல் கொடுத்திருக்கு.''

இப்போது வக்கீல் புதுத் தெரு வழியே போகும்போது இந்தப் பழைய சம்பவம் கண் முன் தோன்றியது. அவள் — லலிதா — இப்போது ஓர் ஐ. ஏ. எஸ்.ஸை மணந்து கொண்டு கோரக்பூரில் இருக்கிருள்.

மீண்டும் அப்பா மேல் நினேவு திரும்பியது. லலிதாவின் தாயாருக்கு வெளியே ஆபரேஷன். அப்பாவுக்கு உள்ளே! அதுவும் முக்கியமான உறுப்பு, சுவாசப்பை.

லலிதாவின் தாயாருக்கு நேர்ந்த முடிவு தான் தன் அப்பாவுக்கும் என்று லாவண்யா நம்பினுள். அவளேப் பெற்றவர் இறந்து போய்

நண்ணீர் விட்டோ வளர்த்தோம்!



1787ம் ஆண்டு பிலடெல்பியாவில் கூடிய பிரதிநிதிகள் அமெரிக்காவின் அரசியல் சாஸனத்தில் கையெழுத்திட்டதும் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் கூறியது: ''மக்களுக்குக் கிடைத்துள்ளது ஒரு குடியரசு - அதனை அவர்களால் காப்பாற்றிக் கொள்ள முடியுமானுல்.'' - பாணன்

விடுவாரே என்ற துக்கம் தொண்டையில் ஒரு பாரமாகத் தோன்றியது. ஆனல் அதே சமயத்தில், யாரும் சாகவரதரில்லே; ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் எல்லாரும் போக வேண்டியவர்கள்தான் என்ற வேதாந்தமும் மனத்தில் பட்டது. பெற்றவர்கள், கூடப் பிறந்தவர்கள், நெருங்கிய சுற்றங்கள், நண்பர்கள் போகும்போது அவர்கள் இறந்து போய்விட்டார்களே என்ற துக்கம், அன்பு-பாசம் என்ற உணர்ச்சிகளின் அலையான எதிரொலிதானே? இன்னும் சொல்லப் போனல் ஓர் இழப்பு மற்ற உடைமைகளே எப்படி பாதிக்கிறது என்றுதானே மனிதன் எண்ண ஆரம்பிக்கிருன். அப்பன் போனல் வருவாய் போகிறது. அம்மா போனல் சமையலுக்குக் கஷ்டம். கேவலம், மனித வர்க்கத்தில் ஒரு மரணம் உயிருடன் இருப்பவர்களுக்குச் சௌகரியங்களே அளிக்கிறது: இல்லாமற்போனல் அசௌகரியங்களே ஏற்படுத்துகிறது.

தர்க்க ரீதியாக அலசிப் பார்க்கும்போது, பலராமன் எனும் நபர் மரணம் அடைந்தால் மனேவி பூவையும் பொட்டையும் இழப்பாள். அசௌகரியம். ஓட்டல் முதலாளி குடும்பத்துக்கு ஏதாவதும் ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து உதவி செய்வார். மனேவிக்குச் சௌகரியம்-ஓட்டல்காரருக்கு அசௌகரியம். வேலே ஏதும் இல்லாமல் அலேந்து கொண்டிருக்கும் பிள்ளே, 'அப்பா போய்விட்டார்: இனிமேல் பிழைத்துத்தான் ஆக வேண்டும் என்ற தற்காப்பு உணர்வோடு வேலேயைப் பிடிக்கத் தீவிரமாவான். இது ஒரு சௌகரியம்.

லாவண்யாவைப் பொறுத்த வரையில் அவளுக்கு எல்லாம் ஒன்றுதான். சின்னஞ்சிறு வயதிலிருந்தே அப்பாவுக்கும் அவளுக்கும் இடையே நெருக்கமான பழக்கம் இருந்ததில்லே. ஓட்டல் வேலேக்கு அதிகாலேயில் சென்றல் இரவு பத்து மணிக்கு மேலேதான் திரும்பி வருவார். திரு வேலேகளிலும்

லாவண்யா தூங்கிக் கொண்டிருப்பாள். ஏதாவது ஓய்வு நாட்களில் அப்பா வீட்டில் இருந்தாலும் அதிகப் பேச்சுக்கு இடமில்லை. அவர் பாட்டுக்குக் குளிப்பார். சாப்பிடுவார். தூங்குவார்.

அவளுடைய வாழ்வில் முழுக்க முழுக்க அம்மாதான் அவளுக்குத் தாயாக, குருவாக, நண்பனாக, கண்டிக்கும் அதிகாரியாக இருந்திருக்கிறாள். அப்பாவுக்கு வந்திருக்கும் கான்சர் அம்மாவைப் பீடித்திருந்தால் ஒருவேளை அவளுடைய மனம் அவள் எதிர்காலத்தையே லட்சியம் செய்யாமல் பாங்கியில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடுக்கத் துடித்திருக்குமோ, என்னமோ?

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பிறந்திருக்கிற பெண்ணின் மனம் ஏன் இப்படி இருவரையும் வேறுபடுத்தி அலசிப் பார்க்கிறது? இதன் பதில் புரிந்தும் விளங்காத புதிராகத் தோன்றியது.

திடீரென்று ஒரு குரல், அவளைத் தட்டி எழுப்ப லாவண்யா ஓர் அச்சத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். ஹரிணி.

''என்ன லாவண்யா, என்னைத் தெரிகிறதா... பி.ஏ.யிலே நான் ஒரு வருஷம் ஸீனியர்.''

''தெரியும். ஆனா நாம் மீட் பண்ண வேண்டிய அவசியமோ, சந்தர்ப்பமோ ஒன்றும் இல்லை.'' சிரிப்புடன் சொல்ல லாவண்யா ஆசைப்பட்டாள். ஆனால் இத்தனை நேரம் நடந்த மனப் போராட்டத்தில் ஒளிந்திருந்த சிரிப்பு தலைதூக்கவில்லை.

''யூ ஆர் கரெக்ட்'' என்ற ஹரிணி, ''எங்கே போறே?'' என்று கேட்டாள்.

''திநேகிதி ஒருத்தி இருக்கிறாள். அவளைப் பார்க்க.''

''கெய்டு வேலை அலுக்கலையா?''

''பணம் சம்பாதிச்சது போதும்ங்கற எண்ணம் தோணின உடனே வேலை அலுத்து விடும்.''

''நன்னாப் பேசறே.... பார்க்க நன்னாவும் இருக்கே... அதுதான் ரமணி...'' ஹரிணி இழுத்தாள்.

''ரமணிக்கு என்ன?'' லாவண்யா சற்றே கோபமாகக் கேட்டாள்.

''அவருக்கு ஒன்றுமில்லை. அவர் எங்க அப்பா கிட்டத்தான் ஜூனியரா இருக்கார்.''

''ஐ டோண்ட் கேர்... என்னைப் புகழ்ந்து விட்டு, ரமணியை இழுத்தா ஏதோ இணைச்சுப் பேசறதாகத்தானே அர்த்தம்? ஏன் அப்படிப் பேசினே?''

''ஏன், ரமணியையே கேளேன்.''

''அதுக்கு உன் ஸஜஷன் தேவையில்லை. ஏன் அனாவசியமா ஒருத்தர் பேரைச் சொல்லி வம்பு பேசணும்?''

''ஸாரி, லாவண்யா... நான் ஒண்ணு சொல்ல வந்தேன். ஆனா அது அநாகரிகம்னு ஆரம்பிச்சவுடன் தோணித்து. உடனே என்னையே அடக்கிண்டேன்.''

''எதையோ தூண்டிவிட்டு நீ அடக்கிக்கலாம். ஆனா அது என்னை எப்படிப் பாதிக்கும்கிறதை நீ யோசிக்கவில்லை.''

''அதான் ஸாரி சொல்லியாச்சே..''

''இனிமே, ட்ரை டு லேர்ன் மேனர்ஸ்!''

ஹரிணி புன்முறுவலுடன், ''சாயங்காலம் அஞ்சு மணிக்கு வீட்டில் இருப்பியா?'' என்று கேட்டாள்.

''எதற்கு?'' – திகைப்பும் ஆச்சரியமும் கலந்த உணர்ச்சியோடு லாவண்யா கேட்டாள்.

''நீதான் மேனர்ஸ் லேர்ன் பண்ணிக்கணும் னியே...டியூஷன் கத்துக்க வரேன்.''

லாவண்யாவின் கண்ணில் தீ பறந்தது.

ஆனால் தீ எரிந்து ஹரிணியைச் சாம்பலாக்குவதற்குள், ஹரிணி சிரித்துக்கொண்டே போய்விட்டாள். (தொடரும்)



செய்தி மணிகள்!

○ இந்திய மக்கள் தொகையில் 75 சதவீதம் கிராமங்களில் வசித்து வருகிறார்கள். இந்தக் கிராமப்புற மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இதுவரை 40 பிராந்தியக் கிராமப்புற பாங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 20 பாங்குகள் மும்முரமாக அமைக்கப்பட்டு வருகின்றன.'' என்கிறார் மத்திய வருவாய் - பாங்குத் துறை அமைச்சர் ஸ்ரீ பிரணப் முகர்ஜி.

○ இந்தியாவில் தயாராகும் ஸ்கூட்டர்களுக்கு வெளி நாடுகளில் ஏகக் கிராக்கி. 1975-76ல் ரூபாய் ஒரு கோடியே 65 லட்சம் மதிப்புக்கு நாம் 8730 ஸ்கூட்டர்களை ஏற்றுமதி செய்திருக்கிறோம். இவற்றில் 4,350 ஸ்கூட்டர்களை இந்தோனேஷியாவும், 3,270 ஸ்கூட்டர்களைச் சிங்கப்பூரும் இறக்குமதி செய்துள்ளன.

○ 'க்ருஸ்டேஷியன் மொலுசெல்' - அப்படியென்றால் என்ன என்கிறீர்களா? இது மீன் வகைகளில் ஒரு வகை இறால் மீனாகும். வெளி நாட்டுச் சந்தைகளில் இவ்வகை மீன்களுக்கு ஏகக் கிராக்கி. அந்த மீன் ஏற்றுமதி மூலம் 1975-76ல் நமக்குக் கிடைத்துள்ள அந்நியச் செலாவணியின் மதிப்பு ரூபாய் 119 கோடியே 57 லட்சத்து 40 ஆயிரம்!

காட்சி 19

[திருத்தணியில் ஓர் உல்லாச மாளிகை. அதன் பகைப் புலனில் திருத்தணி மலைக் கோவில் தெரிகிறது. பிரசாத் நீலகண்டன், காளமேகம் மூவரும் மிதப்பில் சிரித்துப் பேசிக் கொண் டிருக்கிறார்கள். வானம் மப்பும் மந்தார மூமாக இருக்கிறது. அந்தி சந்தி பூசைக்கு அடையாளமா கக் கோவில் மணி ஒலிக்கிறது.]

பிரசாத்: ஏன், நீலகண்டன்! நம்மைக் காத்த நம் தெய்வத் துக்குப் பாலாபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்துட்டியா?

நீலகண்டன்: மறப்பேனா? நாளைக் காலையிலே 'ஜாம் ஜாம்'னு அவன் பாலிலே குளிக்கப் போறான்!

காளமேகம்: இப்போ நாம நீரிலே மூழுகப் போறோம்.

(கையில் பாட்டிலை எடுத்து ஆட்டுகிறான்.)

பிரசாத்: அவன் பார்த்துப்பான்னு அவங்க பேசிக்கிட்டாங் களே! அவன் யாரைப் பார்த்துக்கிட்டான், பார்த்தியா?

நீல: கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!

(படார் என்ற இடியோசையோடு கண்ணைப் பறிக்கும் மின் னல் பளிச்சிடுகிறது.)

காள: இவன் இங்கே 'படார்'ங்கிறான், அங்கே 'டபார்'னு இடி இடிக்கிறது! ஆமாம் மழை வந்துட்டா நம்ம காரியம் கைகூடாமல் போய்விடுமே!

நீல: யார் சொன்னது? அடாது மழைபெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும். கவலைப்படாதே! அந்தக் கிளாசை இப்படி நகர்த்து!

பிரசாத்: நீ சொல்றே, சரி! ஆனா கதாநாயகி வரணுமே! அவ ஏமாத்திட்டா?

காள: இளமுருகு இல்லாதது நமக்கு ஒரு கை. முறிஞ்சாப் போலத்தான்!

அவன் பார்த்துப்பான்



நாடக ஆசிரியர்

கோமல் சுவாமிநாதன்



நீல: இருந்தால் நம் சுதந்திரம் ஒடுஞ்சிடுமே!

பிரசாத்(பளிச்சென்று ஒரு மின்னல் வெட்டவே): காளமேகம்! கண்ணு போச்சா, விளக்குப் போச்சா? ஒரே கும்மிருட்டாயிடுச்சே!

நீல: மழை வலுக்கிறாப் போலிருக்கிறதே! இப்படி விளக்கும் போயிட்டா இது பேயறைந்த பங்களாதான்!

காள: இருட்டிலே பேய்-கீய்ங்கிற பேச்செல்லாம் பேசாதே அப்பா! எனக்குப் பயமாயிருக்கு!

பிர: நான் இருக்கப் பயம் ஏண்டா?-ஆமாம் அது என்னடா ஓசை?

நீல: பூனையாயிருக்கும்டா? பயமுறுத்தாதேடா!

(இலேசாக மின்னல் ஒளி உள்ளே பாய்கிறது. சிவராமன் சட்டென்று பின்னால் பதுங்கி மறைந்து கொள்கிறான்.)

காள: யாரோ ஆள் வந்த நிழலாட்டம் தெரியலே?

பிர: அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்னு தெரியாமலா சொன்னாங்க?

நீல: ஐயனாரப்பா! நீதாண்டாப்பா காப்பாத்தணும்!

(மின்சார விளக்கு ஒரு கணம் எரிந்து அணைகிறது.)

காள: ஐயோ! அது யாரப்பா அரிவாளும் கையுமா!

பிர: டேய், பயங்கொள்ளி! ஏழுமலை நாயுடு உன் கண்ணை விட்டு இன்னும் அகலவே இல்லை போலிருக்கிறதே!

காள: அவரேதான் அப்பா!

பிர: அவர் இங்கே எதற்கடா வரப்போறார்?

நீல: இந்தக் காலத்து மாடர்ன் பங்களாவே மட்டம்டா! இரும்பு ஃபிரேம் ஜன்னல் தான். ஆனால் குறுக்குக் கம்பி போடறதில்லே. நினைச்சவன் நினைச்சப்போ ஏறிக் குதிச்சு உள்ளே வந்துவிட முடிகிறது!

காள: பிரசாத்! ஜன்னல் கதவையாவது சாத்திவிடுவோமேடா!

நீல: கதாநாயகி வந்தால் தெரிய வேண்டாமாடா?

பிர: இந்த மழையிலும் காற்றிலும் அவள் எப்படிடா வருவா? — ஜன்னல் எந்தப் பக்கம்டா இருக்கு? நான் சாத்திப்பிடறேண்டா!

(துழாவிக் கொண்டே சுவரோரம் போகிறான். யாருடைய கையோ தட்டுப்படவே உதறிக் கொட்டி வீறிட்டு அகலுகிறான்.)

காள: உன் தலையிலே இடி விழ! எதற்காகவடா இப்படி வீறிட்டு மத்தவங்களையும் பயமுறுத்தறே?

(வானமே இடிந்து விழுகிறாப் போல ஓர் இடிச் சத்தம் கேட்கிறது.)

பிர: என் தலையிலே ஏன் இடி விழணும்? உன் தலையிலேதான் விழட்டுமே!

(பளிச்சிடும் மின்னலில் மூவருக்கும் கையில் ரிவால்வருடன் சிவராமன் தெரிகிறான்.)

பிர: சிவராமனா? இங்கே, எங்கே?

சிவ: உங்க தலையிலே இடி விழும்கிற நம்பிக்கை எனக்கில்லே. அவன் பார்த்துப்பான்கிற நம்பிக்கை சர்மாவுக்கு வேணுமானால் இருக்கு; எனக்கு இல்லே. அதனாலே நியாயத்தை நானே என் கையிலே எடுத்துக்கிறதாத் தீர்மானிச்சிண்டு வந்திருக்கேன்!

பிர: என்ன பண்ணப் போறே?

சிவ: ராமன் ஏழு மரங்களை ஒரே அம்பாலே துளைச்சாப்போலே, உங்கள் மூணு பேரையும் ஒரே ரவையினாலே துளைக்கத் தருணம் பார்த்துக்கிட்டிருக்கேன்!

பிரசாத் (கெக்கலிகொட்டிநகைத்து): ஆண்டவனுக்கு எங்க மேலே அபாரப் பிரியம். அவன் எங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டான். அதனாலே இடியையும் மழையையும் அனுப்பி வைச்சதோடு மட்டும் நிறுத்திக்கல்லே. மின்சாரத்தையுமே 'கட்' பண்ணிப்பிட்டான்!





சிவ: கையோடு ஒரு டார்ச் லைட் கொண்டு வராதது எவ்வளவு தப்பாப் போச்சு!

ஏழு: சிவராமப்பா! ஒண்ணும் தப்பாப் போகலே! ஆண்டவன் அவ்வளவு ஏமாந்தவன் இல்லே. 'இப்படியெல்லாம் நடக்குமடா ஏழுமலை! நீ அரிவாளும் கையுமாகப் போ! இருட்டிலே குருடனுட்டம் வீசினாலும் இந்தப் பயங்களை வெங்காயமாச் சீவிடலாம்'னு உனக்குத் துணையா என்னை அனுப்பிச்சு வச்சிருக்காரு!

காள: அட கடவுளே!

ஆனந்த்: அக்கிரமம் பண்ணுகிறபோது அந்தக் கடவுள் நினைவு வரலே! ஆபத்திலே மாட்டிக்கிறபோது வருதா? குருட்டுப் பூனை விட்டத்திலே தாவின கதையா ஜன்னல் வழியாத் தப்ப இவங்க நினைச்சாங்கன்னு நீ உன் கைவரிசையைக் காட்டடா என்று அந்த ஆண்டவன் 'இந்த ஆனந்தனையும் அனுப்பி வச்சிருக்கிறான்! இன்னிக்கு உங்க மூணுபேருக்கும் இங்கே சமாதிதான்!

நீல: நாங்க என்ன பாவம் பண்ணினோம், எதற்காக எங்களுக்குச் சமாதி?

ஆனந்த்: அதைச் சொல்ல நாக் கூசுது!

காள: அதோ! இந்த மழை இருட்டிலே யார் டார்ச் அடிச்சுட்டு வராங்க?

நீல: அஞ்சாறு பேரு வராப்பலே இருக்கே! போலீஸா யிருக்குமோ?

பிர: போலீசா இருந்தா நல்லதாப் போச்சு! பயப்படாதே! இந்த அக்கிரமக்காரர்களைக் கையும் மெய்யுமாப் பிடிச்சு அவங்க கையிலே கொடுத்துடுவோம்!

(இதே சமயம் சர்மா, நித்யா, கல்யாணி, ரங்கநாயகி முதலானோர் மழையில் நனைந்தவர்களாக உள்ளே நுழைகிறார்கள். அவர்கள் பாய்ச்சிய டார்ச் ஒளியில் இரு ஜன்னல்கள் தெரிகின்றன)





சிவ: சர்மாஜி! காரியத்தைக் கெடுத்துட்டீங்களே! தப்பி ஓடிடுவானுகளே! அவன் பார்த்துப்பான்னு கையை கட்டிக்கிட்டு உட்கார்ந்திருந்தா நியாயம் கிடைக்காது! இந்தத் துப்பாக்கி ரவைக்கு அவங்களைப் பலியாக்காமல் நான் விடப் போறதில்லே.

(சர்மா அவன் கைகளை இறுகப் பற்றிக் கொள்கிறார். அறையில் விளக்குகள் மீண்டும் எரியத் தொடங்குகின்றன.)

சர்மா: சிவராமா! அவன் பார்வையிலிருந்து அவங்க ஒருநாளும் தப்ப முடியாது. நான் சொல்வதை நம்பு! ஏழுமலை (கையைப் பற்றியிருந்த ரங்கநாயகி யிடம்): என்ணம்மா, குழந்தைப் பிள்ளையாட்டம் கையைப் பிடிக்கிறியே! இந்த அக்கிரமத்தை எத்தனை நாள்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது?

ரங்க: இந்த மாதிரி அக்கிரமம் நடக்கக் கூடாதுன்னுதான் அன்னைக்கே ஆண்டவன் உங்களை என் கையிலே பிடிச்சுக் கொடுத்திருக்கான்!

ஆனந்த்: கல்யாணி! நீ என் கையைப் பிடிக்கிற காலம் வர்றப்போ பிடிக்கலாம். இப்போ விடு! அவங்களை உண்டு இல்லேன்னு பார்த்துட்டு வருகிறேன். (திமிறுகிறான்.)

பிரசாத்: நீலகண்டன்! கம்பியில்லாத ஜன்னல் எதுக்காக வச்சிருக்காங்கன்னு அலுத்துக்கிட்டியே! இப்போ தெரிஞ்சுக்கோ, எதுக்காக வச்சிருக்காங்கன்னு!

(ஒரே பாய்ச்சலாக அதன் வழியே பாய்ந்து வெளியே குதிக்கிறான். நீலமேகமும் காளமேகமும் கூடவே அவனைத் தொடர்கிறார்கள். காது செவிடுபடும் படியான இடி ஒன்று இடிக்கிறது.)

நீல: (வெளியிலிருந்து குரல்)ஐயோ, அம்மா!

காள: கண்ணு போச்சே! உன் தலையிலே இடி விழன்னு சொன்னுனே, பாவி!

(பிரசாத், காளமேகம், நீலகண்டன் மூவரும் இரும்பு ஜன்னலை மின்னல் தாக்கியதால் மின்சாரம் பாய உடல் கருகி உள்ளே வருகிறார்கள்; தள்ளாடி விழுகிறார்கள்.)



சர்மா: இப்படி விழுந்து என்னடா பிரயோசனம்? பண்ணின பாவத்துக்கு அந்தப் பெண் காலடியிலே விழுந்து மன்னிப்புக் கேளடா!

(பிரசாத் தடுமாறி எழுந்து நடந்து கல்யாணியின் கால்களில் விழுகிறான். பிரசாதின் அசைவற்ற உடலைத் தொட்டுப் பார்த்து உயிர் பிரிந்து விட்டதை அறிந்த சிவராமன் ரிவால்வரைக் கீழே போடுகிறான். பொறி கலங்கினாற்போல் நின்ற சர்மா கனிவோடு அவனைப் பார்க்கிறார்!)

சிவராமன் (கண்களில் நீர் சோர): சர்மாஜி! நீங்க சொன்னாப்போலே அவன் பார்த்துட்டான்!

(சிவராமன் சர்மாவின் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறான்.)

முற்றிற்று



ஸ்ரீ ராம சாம்ராஜ்ய பட்டாபிஷேகம்

பிரபல பிரவசன கர்த்தா ஸ்ரீ கலப்பிரம்மத்தைச் செயலாளராகக் கொண்டு, 20-3-77-ல் தொடங்கி 29-3-77 ஸ்ரீராமநவமி அன்று ஸ்ரீராம சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் நிறைவேற இருக்கிறது. வால்மீகி, கம்பர், துளசி ராமாயணங்களோடு நான்கு வேத பாராயணங்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல வித்வான்கள் பங்கெடுத்துக் கொள்ளும் பிரவசனங்களும் நடைபெற இருக்கின்றன. நாட்டின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த விழாவுக்கு மூன்று லட்சத்துக்கும் மேலாகச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி மிகுந்தவர் பொருளை தரவும், மற்றோர் தங்கள் சக்திக்கு ஏற்பத் தரவும். அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கலப்பிரும்மம், பொருளாளர், 13, புரசைவாக்கம்,, சென்னை-600028.



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
சாந்தி
கிரௌன்
புவனேஸ்வரி
மற்றும் தென்னகமெங்கும்
சுஜாதா
நடிகர்திலகம்
சிவாஜி கணேசன்
சுரேஷின்
தீபம்
K.விஜயன்
இளையராஜா
புலமைப்பித்தன்
A.L.நாராயணன்
G.OR.நாதன்
ARIES

அமரரான ஆழ்வார்

பனியன்கள் தயாரிக்கும் ராம்சன் நிறுவனத்தின் உரிமையாளர் கோவிந்தன், பார்த்தசாரதிப் பெருமாளின் பரம பக்தர். கடந்த பல ஆண்டுகளாகவே கோவிலுக்கு என்று ஒரு யானை இல்லை என்பதைத் தெரிந்து கொண்டவர், தம் கைங்கரியமாக, ஒரு வயதைத் தாண்டியிருந்த யானைக் குட்டியை உதகமண்டல மலைப் பகுதியிலிருந்து வரவழைத்துக் கோவிலுக்கு அளித்தார். இது நடந்தது 1961-ம் ஆண்டு. அந்த நாளைய தமிழக அமைச்சராக இருந்த திரு பக்தவத்சலம் இந்த யானை அன்பளிப்பைக் கோவிலின் சார்பில் ஏற்றுக் கொண்டார். அதுவரை இந்த யானைக்குப் பெயர் ஏதும் சூட்டப்படவில்லை. ஆனால் இந்தக் குட்டி யானையின் பிறந்த நாள் கோவிந்தனுக்குத் தெரியும்.

அதைச் சொன்னதும் கோவில் அர்ச்சகர்கள் யானைக்கு ஜாதகமே கணித்து விட்டனர். சதய நட்சத்திரம் என்று தெரிந்தது. பரம பக்திமானான பேயாழ்வார் அவதரித்த திரு நட்சத்திரம். ஆகவே, யானைக் குட்டிக்கு ஆழ்வார் என்ற பெயரைச் சூட்டினார்கள். வார்களாம். இதை ஒரு நல்ல ராசியாகவே எம். ஜி. ஆர். ரசிகர்கள் நினைத்தார்களாம்.

ஆழ்வாரை இந்தப் பணிகளுக்கு அழைத்துப் போகக் கட்டணம் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த வகையில் ஆலயத்துக்கு ஆழ்வார் வரும்படியைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஆழ்வாரைத் தன் சொந்த மகன் போல் கவனித்து வந்த மாவுத்தர் நாராயணனுக்கு ஐம்பது வயதாகிறது. அவர் பரம்பரையே கோவில் யானைகளைப் பராமரிக்கும் தொழிலில் ஈடுபட்டதுதான். நாராயணன், மதுரை மீனாட்சியம்மன் கோவில், சங்கரநாராயணர் கோவில், திருச்செந்தூர் போன்ற இடங்களில் கடந்த நாற்பது வருடங்களாக யானைகளுடன் பழகி வருபவர்.

''ஆழ்வாருக்குச் சிறு பிராயத்திலிருந்தே கொஞ்சம் வாயு உபத்திரவம் உண்டு. பின் இடது காலில் அவ்வப்போது வேப்பெண்ணையைத் தடவி, சூடாக்கிய செங்கலால் ஒத்தடம் கொடுப்பேன். சமீபகாலமாக வயிற்று வலியும் அவ்வப்போது வந்து தொந்தரவு கொடுப்

சீக்கிரமே அது தன் பகவத் சேவையைத் தொடங்கியது.

''தினசரி காலையில் விசுவரூப தரிசனத்துக்கு முன், மடப்பள்ளி சிப்பந்தி புஷ்கரணியிலிருந்து அபிஷேகத்துக்கான தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு வருவார். ஆழ்வார் உடன் செல்லும். உற்சவ தினங்களில் மாட வீதிகளில் உற்சவர் முன் கம்பீரமாக வழி காட்டிச் செல்லும்'' என்கிறார், கோவிலைச் சேர்ந்த வெங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்.

ஏழு கிலோ அரிசி, மூன்று கிலோ கேழ்வரகு அரைக்கிலோ கொள் இவைகளைச் சேர்த்து இரண்டு பகுதிகளாகப் பிரித்து இதற்கு இரண்டு வேளை ஆகாரம் தினசரி கொடுப்பார்களாம். இடையே பத்துப் புல் லுக் கட்டுக்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் ஆழ்வார் அவசரம் அவசரமாகத் தென்னை மட்டைகளை ருசித்துச் சாப்பிட்ட போது ஒரு மட்டை ஆழ்வாரின் கண்ணைப் பதம் பார்த்து விட்டது. அதற்காக இரண்டு மாத காலம் கண் வைத்தியமும் நடந்தது.

யானைக் குட்டி ஆழ்வார், ஓரளவு தன் ஆகார வசதிகளுக்காகப் பகுதி நேர அலுவல் கூடப் பார்த்தது என்று சொல்லலாம். ஆம்! ஐயப்ப பூஜை காலங்களில் ஊர்வலங்களில் பங்கேற்றுக் கொள்ளும். திருமணங்களிலும் ஊர்வலத்துக்குக் களையூட்டும். நான்கைந்து திரைப்படங்களிலும் நடிக்க இதற்கு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

நகரத்தில் எம். ஜி. ஆர். நடித்து வெளியாகும் திரைப்படங்கள் காண்பிக்கப்படும் முதல் நாளன்று, எம். ஜி. ஆருக்கு மாலை போட ஆழ்வாரை அழைத்துப் போய்விடு



பது உண்டு. ஆனால் ஆழ்வார் ரொம்ப சாது! சிறுவர் சிறுமியர்களைக் கண்டால் குஷி! எப்பவாவது முரண்டு செய்ய விரும்பினால், என்னிடம்தான் கொஞ்சம் வம்பு செய்யும். ஓர் அதட்டல் போட்டால் சாதுவாகிவிடும்.

''பன்னிரண்டாம் தேதி சனிக்கிழமை; ஆழ்வார் சரியாக ஆகாரம் சாப்பிடவில்லை. அதற்காகக் காலையிலேயே வேப்பேரியிலிருக்கும் மிருக வைத்தியசாலைக்குக் கொண்டு போய்க் காண்பித்து மருந்து வாங்கிக் கொடுத்து விட்டு ஒன்பதரை மணி அளவில் அங்கிருந்து திருப்பி அழைத்து வந்தேன். சிம்சன் கம்பெனி பக்கம் வந்தவுடன் ஆழ்வார் கொஞ்சம் தகராறு செய்ய ஆரம்பித்தது. மதம் கண்டிருப்பதற்கான அறிகுறிகள் அதன் நெற்றியில் காணப்பட்டன. இப்படி நான் பார்ப்பது இதுதான் முதல் தடவை. இது ஒருவித பருவகால அறிகுறி. நான் உஷாரானேன். அண்ணாசாலை, வாலாஜா ரோட் பக்கமாக அதைத் தொடர்ந்து அழைத்து வருவது அபாயம் என்பதை உணர்ந்து, அப்படியே ராஜாஜி மண்டபத்தின் அருகிலுள்ள தோட்டப் பகுதிக்குள் அழைத்துச் சென்று விட்டேன். அதன் கோபம் அடங்கிக் கோவிலுக்குத் திரும்பும் போது பிற்பகல் மணி மூன்று. அதற்கப்புறமும் அதன் உடல் நிலை சரியில்லை. படுத்துக் கொண்டு விட்டது. கோவில் நிர்வாக அதிகாரி பொன்னப்ப பிள்ளை அவர்களுக்கு ஆழ்வாரின் மீது ஈடுபாடு அதிகம். உடனே டாக்டர்களை வரவழைத்தார். இரண்டு நாட்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் பலனில்லாமல் போயிற்று. எனக்குக் குழந்தைகள் இல்லாத நிலையில் ஆழ்வார் என் மகனாகவே இருந்தது.''

இதைச் சொன்ன போது மாவுத்தர் நாராயணன் கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

நிர்வாக அதிகாரி பொன்னப்பபிள்ளை எல்லா மரியாதைகளுடன் ஆழ்வாரின் இறுதி ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தார். ஒரு வயதுக் குட்டியாகச் சென்னைக்குக் கொண்டு வந்து சேர்த்த எஸ். ஆர். வி. எஸ். நிறுவனமே இப்போதும் ஆழ்வாரின் உடலை மோட்டார் டிரக்கில் ஏற்ற 'கிரேன்' வசதியளித்தது. பக்தர்களில் ஒருவர் டிரக் கொடுத்து உதவினார். ஆழ்வாரின் அந்திம ஊர்வலம் திருவல்லிக்கேணி வாசிகளின் மனத்தை உலுக்கி விட்டது. ராஜ மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

-பட்டினத்தார்



புத்தகப் பண்டாரம்


மெகாலே பிரபு ஒரு சிறுமிக்கு எழுதிய கடிதத்தில் கூறுகிறார்:

''இதுவரை வாழ்ந்த அரசர்கள் அனைவரிலும் பெரிய சக்கரவர்த்தியாக என்னை யாரேனும் ஆக்கி, அரண்மனை, தோட்டம், விருந்துபசாரம், பணியாட்கள் எல்லாம் கொடுத்துப் படிக்க மட்டும் கூடாது என்று நிபந்தனை விதிப்பார்களே யானால் நான் அரசனாக மாட்டேன். புத்தகங்களிடம் ஆசை வைக்காத அரசனாகத் திகழ்வதை விட, நிறையப் புத்தகங்களைப் படிக்கும் ஏழையாக விளங்கவே வாய்ப்பு பெற்று விரும்புவேன்.''

இளைக்க ஆசையா?

இதோ சில யோசனைகள்:

- அடிக்கடி சாப்பிடுங்கள், ஆனால் ஒவ்வொரு முறையும் மிகக் குறைவாக.
- சர்க்கரை, கொழுப்புச் சத்து உப்பு, குறையுங்கள்.
- இவற்றை உணவில் குறையுங்கள். இவற்றை அதிகம் பால், பழம், காய்கறி சேர்க்கலாம்.
- சாப்பிடும் முன்போ சாப்பிட்ட பிறகோ தண்ணீர் அருந்துங்கள்; இடையில் அல்ல.
- ஒரு நாளைக்கு நாலு 'கப்' திரவ பதார்த்தத்துக்கு மேல் அருந்தவே கூடாது.
- காலை உணவு நன்றாகச் சாப்பிடலாம். இரவு உணவு அதிகம் கூடாது. உறங்குவதற்கு இரண்டு மணி நேரம் முன்பு இரவுச் சாப்பாட்டை முடித்து விட வேண்டும்.
- படிப்பதற்கு முன் ஒரு டம்ளர் மோர் அல்லது ஒரு பழம் உண்ணலாம். பாதக மில்லை.
- தினம் அரை மணி நேரமாவது விடுவிடென்று நடக்க வேண்டும்.



விமானத்தில் பாம்பு

விமானத்தில் ஒரே கலாட்டா! சிறுவன் சத்தம் கேட்டு விழித்தெழுந்தான். அடுத்த கணம் ''என் பாம்புகள் எங்கே?'' என்று அலறினான்! கலாட்டாவுக்குக் காரணமே அவைதானே! கலவரம் அதிகமாகிவிட்டது, பயணிகளிடையே!

பாண்டியாவிலிருந்து ஃபிராங்க்ஃபர்ட் நோக்கி லுஃப்தான்ஸா விமானம் பறந்து கொண்டிருக்கும்போது நடந்தது இது.

சிறுவன் ஆறு பாம்புகளை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு எடுத்து வந்திருக்கிறான். அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது பாம்புகள் தப்பித்துக் கொண்டு விமானத்தினுள் உலாவி வந்திருக்கின்றன. பயணிகளின் பீதிக்குக் கேட்க வேண்டுமா?

இரண்டு பாம்புகளை விமான உபசரிணையாளர் கொன்று விட்டார். இதற்குள் பையன் அவை ஆபத்தில்லாதவை என்று உத்தரவாதம் அளிக்கவே மற்ற நான்கையும் உயிருடன் பிடித்துப் பையனிடமே திருப்பித் தந்தார்கள்!

-ஜெர்மன் இண்டர்நேஷனல்



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 14

சாணக்கியர் தொடங்குகிருர்

"அவருக்காக, எந்தச் சிறைச்சாலையையும் நான் ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறியபடியே திறந்திருந்த சிறைச்சாலையின் உள்ளே நுழைந்தாள் சலீமா.

காலங்கள் பலவாய்க் கைதிகள் பலரைக் கண்டது அந்தச் சிறைக் கூடம். அது குற்றவாளிகளுக்காக மட்டுமா கட்டப்பட்டிருக்கிறது? நிரபராதிகளுக்கும் சேர்த்துத்தானே கட்டப்பட்டிருக்கிறது! பகவான் பரந்தாமன் அவதரித்த புண்ணிய ஸ்தலமே அதுதானே!

மகமதிய மார்க்கத்தில் கூட எத்தனை நிரபராதிகள் சிறை புகுந்திருக்கிருர்கள்!

சலீமாவுக்காகத் திறந்த சிறைக் கதவு, ஒரு காதல் காவியத்தின் தலைவாசற்கதவு.

ஒரு மன்னனின் காதலி அல்லவா அவள்? அந்தச் சிறைச்சாலை அதற்கான வசதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

சீனத்துப் பட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறிய மாளிகை போலவே அது இருந்தது.

அசைந்த திரைச்சீலையைப் புன்னகையோடு பார்த்தாள் சலீமா.

ஆனந்தத் தென்றல் அவற்றின்மீது பட்டு அவை பரதநாட்டியம் ஆடிக்கொண்டிருந்தன.

ஒவ்வொரு திரைச் சீலையிலும் தன் காதல் நாயகனின் கனிந்த முகத்தையே அவள் கண்டாள்.

பாரசீகத்திலோ, அராபியாவிலோ அவள் சிறை வைக்கப்பட்டிருந்தால் இந்தப் பரவசம் அவளுக்கு இருக்காது.

கேரள தேசத்தில், மன்னன் தன்னை விரும்பிய குற்றத்துக்காக, தான் சிறை வைக்கப்பட்டிருப்பது ஒரு சுக அனுபவமாகவே இருந்தது.

அகமதுவும், மகமதுவும், பாத்திமாவும் யூசுப்பும் அவளைப் பார்க்க வந்தபோது, அவர்கள் தடுக்கப்படவில்லை.

அவர்களைப் பின்தொடர்ந்து வந்த கூட்டம் மட்டும் வாசலிலேயே நிறுத்தப்பட்டு விட்டது.

அவர்கள் சலீமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்கள்; அவள் அதிலே சலனம் அடையவில்லை.

''இது காலம் எனக்கிட்ட கட்டளை!'' என்ருள்.

சாதாரணமாகப் பெற்றவர்கள் சொல்லக்கூடிய புத்திமதிகளையே அவர்களும் கூறினுர்கள்.

''இவை வழக்கமான புத்திமதிகளே. கல்லுக்குள் இருந்து ஈரத்தைப் பிரித்தாலும் பிரிக்கலாம். என் கண்ணிலும் நெஞ்சிலும் இருந்து இனி அவரைப் பிரிக்க முடியாது'' என்ருள் சலீமா.

''விளைவுகளை எண்ணிப் பார்த்தாயா?'' என்று கேட்டார் அகமது.

''எந்த ஒலிக்கும் எதிரொலி இருப்பது எனக்குத் தெரியும். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாதவளே ஒரு நல்ல காதலியாக இருக்க முடியும். உடலும் உள்ளமும் ஒருமுகப்பட்டு விட்ட பிறகு, கடலே எங்களுக்குச் சிறிய ஓடை போலத்தான் தோன்றிற்று. இதனுல் உங்களுக்கும் ஆபத்து நேருமாயின் என்னைப் பெற்றெடுத்த துயரத்துக்காக அவற்றை நீங்கள் சகித்துக் கொண்டு தான் ஆக வேண்டும்'' என்ருள் சலீமா.

மரணத்தின் தலைவாசலில் நின்று கொண்டு, ''போய் வருகிறேன்'' என்று உற்சாகமாகக் கையசைப்பவளைப் போல் அவள் காணப்பட்டாள்.

வெகு நேர உரையாடலுக்குப் பின் அவள் விருப்பம்போல் விட்டு விட்டுச்

செல்வதைத் தவிர வேறு வழி அவர்களுக்குத் தோன்றவில்லை. அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

கன்னிமாடத்துக்குள் புகுந்து விட்ட இளங்காற்றை அதற்குள்ளேயே வைத்துக் கொள்ளக் கதவடைப்பவளைப் போல, உறவினரைப் பற்றிய சிந்தனைக் கதவைச் சாத்திக் கொண்டு, காதல் மனக் கதவைத் திறந்து வைத்தாள் சலீமா.

கடல் — கரை — கல்லறை — மணி மண்டபம் — அந்த இரவு — இன்பத்தின் பரிணாம வளர்ச்சி, சூழ்நிலைகளை மறக்கடித்தது.

மதிய உணவு, வைத்தது வைத்த படி இருந்தது. அதோடு இரவு உணவும் வந்து சேர்ந்தது.

சற்று நேரத்தில், 'அம்மா' என்றொரு குரல் அவளது சிந்தனையைக் கலைத்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். அங்கே தரங்கிணி நின்றாள்.

தரங்கிணியை அவள் அரண்மனையில் ஒருமுறை பார்த்திருக்கிறாள். பிற விவரங்களை அவள் அறிய மாட்டாள்.

இவள் ஏன் இங்கே வந்தாள்? மன்னவர் ஏதாவது சேதி சொல்லி அனுப்பியிருப்பாரோ?

தரங்கிணி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

கையில் இருந்த கங்கணத்தைக் காட்டி, ''மன்னவரின் உடன்பிறவாத சகோதரி'' என்று தன்னை நம்ப வைத்தாள்.

''நல்லது. தாங்கள் இங்கு வந்த காரணம்....?'' என்று கேட்டாள் சலீமா.

''மன்னவர்க்கு ஒரு மனையாள் உண்டு என்பதைத் தீங்கள் அறியீரோ!''

''அறிவேன்.''

''மற்றொரு நாயகி இஸ்ரவேலுக்குச் சென்றுள்ளாள் என்பதை அறிய மாட்டீரோ....?''

''அறிவேன்.''

''எனின், இது காதல் என்றெண்ண எங்ஙனம் இயைந்தீர்கள்.....?''

''இது காலத்தையும் அந்த நாயகனையும் கேட்க வேண்டிய கேள்வி.''

''மன்னவர் குலத்தையும், மக்களவையையும் மனத்தாலும் எண்ணிவீர்கள் இல்லையே....''

''பிற சிந்தனைகளுக்கு இடந்தரக் கூடியது காதலாக இருக்காதே அம்மா!''

''பெண்ணெனப்படுவது இவ்வாறு பிடிவாதம் பிடிப்பதன்று. சமய நோக்கிலாவது இதனை நீங்கள் தடுத்திருக்க வேண்டும்.''

''இப்போது நீங்கள் வந்திருக்கும் தூது, காதலைக் கைவிடச் சொல்வதற்காகவா?''

''ஆம்; அவ்வண்ணமே.''

''ஒரு துளி நஞ்சு கொண்டு வந்திருக்கிறீர்களோ?''

''இருந்த நஞ்சு அனைத்தையுமே மன்னவர் குலத்துக்கு நீங்கள் கொடுத்து விட்டீர்களே....!''

''தூது செல்வது சேர்த்து வைப்பதற்காகவே என்று நான் படித்திருக்கிறேன். பிரித்து வைப்பதும் உண்டோ....?''

''இலக்கியங்கள் அது பற்றியும் கூறுகின்றன.''

''நீங்கள் அதில் வல்லவரோ....?''

''இது முதன் முயற்சி. இறைவனருளால் இதுவே கடைசியாதல் வேண்டும்.''

''அம்மா! கல்லறைகளை நான் பார்த்துப் பழகியிருக்கிறேன். ஆனால் எனக்கென்று ஒரு கல்லறை அமைவதை நான் பார்த்ததில்லை. அப்படி ஒன்று



சேர நாட்டில் அமையுமானல், அதுவே நான் பெற்ற பேருகும்.''

''இது, உணர்ச்சியின் கொதிப்பில் வரும் வெறும் உருவகம்.''

''என் அறிவு மழுங்கி விடவில்லை என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்தாக வேண்டும்.''

''உங்கள் குடும்பத்தின் நலனுக்கே இதை நான் உரைக்கிறேன்.''

''அப்படி ஒன்று இருப்பதை நான் மறந்து சில நாட்களாகி விட்டன.''

''நான் தோற்று விட்டேனு?''

''அது நான் வெற்றி பெற்ருல் மட்டுமே!''

— இப்போது விவாதிப்பதில் இருந்து, தரங்கிணி எச்சரிக்கை விட ஆரம்பித்தாள்.

சலீமா புன்னகையோடு அதனைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது ....

அரண்மனையின் நிலா முற்றத்தில் அமைதியின்றி உலாவிக் கொண்டிருந்தார் சேரமான்.

காதலி சிறைப்பட்டதை விட நம்பூதிரியும், மானிச்சனும் வலுக்கரம் எடுத்ததே அவருக்கு ஆத்திரமாக இருந்தது.

தாவணி சகோதரிகளில் அங்கிருந்த மூவரும் ஒன்ருக வந்தார்கள்.

''என்ன, உபதேசமா? நானே ஆயிரம் பேருக்கு உபதேசிப்பேன். தம்பிரான் சுவாமி செய்யாத உபதேசத்தையா நீங்கள் செய்து விடப் போகிறீர்கள்? சொல்லுங்கள்!'' என்று சத்தமிட்டார் சேரமான்.

''நில்லுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே அங்கு வந்தாள் பத்மாவதி.

காலம் காலமாக அடிமை போலவே இருந்த அவள், அண்மைக் காலங்களில் துணிந்தவளாகவே காணப்பட்டாள்.

நாயகன் மனப்போக்கு முற்றிலும் தெளிவாகத் தெரிந்தபிறகு புதுப்புது வழிகளில் அணை கட்டுவதில் பிரயோசனமில்லை என்பது அவள் சித்தாந்தம்.

இப்போது அவள் வந்ததும் அங்கீகார ஏட்டில் கையெழுத்திடவே.

''உங்கள் விருப்பம்போல் நடக்க நான் சம்மதிக்கிறேன். அதிகாரம் தம்பிரான் சுவாமிகள் கையில் இருக்கிறது என்ற ஒன்றே என் அச்சம். அதைத் தவிர நீங்கள் எடுக்கும் முடிவை நானும் ஏற்கிறேன்!'' என்ருள், பத்மாவதி.

''அதைச் சொல்லத்தான் நாங்களும் வந்தோம்!'' என்ருர்கள் தாவணி சகோதரிகள்.

''சரி. எல்லாம் எனக்குத் தெரியும். செல்லுங்கள்'' என்ருர் சேரமான்.



அவர்கள். மௌனிகளாக விடை பெற்றனர்கள்.

வெகு நேரம் சிந்தித்த சேரமான் ஒரு சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு வெளியேற முயன்றார்.

ஆனால் பாவம், அவரும் இப்போது ஒரு கைதிதான் என்பதை அறிய மாட்டார்.

''தம்பிரான் சுவாமிகள் எங்களுக்கு ஆணையிடாமல் தாங்கள் வெளியேற முடியாது'' என்றான் ஒரு காவலாளி.

சேரமானுக்கு ஆத்திரமும் வந்தது; சிரிப்பும் வந்தது.

''தம்பிரான் சுவாமியும் நான் வைத்த சேவகர் தானே!'' என்றார் சேரமான்.

''ஆயின் நாங்கள் அவர் வைத்த காவலாளிகள்'' என்றான் காவலாளி.

சேரமான் ஆத்திரமுற்று அவன் இடுப் பில் இருந்த வாளையே எடுத்து அவனை வெட்டி வீழ்த்தினார். அதைப் பார்த்த பிறகும் மற்ற காவலர்களுக்கென்ன பைத்தியமா அவரை வழிமறிக்க?

சேரமான் புரவி வேக வேகமாகப் பறந்தது சிறைச்சாலையை நோக்கி.

சிறைச்சாலையிலும் இதே போன்ற ஒரு நிலைதான்.

''தம்பிரான் சுவாமிகள் ஆணையின்றி உள்ளே நுழைய முடியாது'' என்ற பழைய பாட்டு.

''மரியாதையைக் கெடுத்துக் கொள் ளாதீர்கள்'' என்றார் சேரமான்.

''மன்னிக்க வேண்டும். நாங்கள் இரண்டு புரவிகளில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. எங்கள் நிலையைக் கொஞ்சம் சிந்தியுங்கள்!'' என்று கெஞ்சி னார்கள், காவலர்கள்.

''மன்னவன் ஆணை'' என்று உறுமி னார் சேரமான்.

காவல் ஈட்டிகள் வழி விட்டன.

பரபரப்போடு சிறைச்சாலைக்குள்ளே நுழைந்தார் சேரமான்.

சலீமா சிறை வைக்கப்பட்டிருந்த மாளிகையைப் படபடவென்று திறந் தார்.

''சலீமா! சலீமா!'' என்று கதறினார்.

வேடிக்கை காட்டுகிறாளோ என்று ஒவ்வொரு திரைச் சீலையையும் விலக்கிப் பார்த்தார்.

அங்கே சலீமாவைக் காணவில்லை.

''சலீமா!'' என்று ஓங்கிக் கதறினார் சேரமான்.

அங்கே நின்ற காவலாளிகள் ஒவ் வொருவரையும் கன்னத்தில் அறைந்து கேட்டார்.


மௌனமே பதிலாக வந்தது.

உடனே அவர் நினைவு நம்பூதிரிகள் மேலேயே சென்றது.

பாய்ந்து குதிரையில் ஏறினார். பர பரப்போடு நம்பூதிரி சபை நோக்கிப் பறந்தார்.

அங்கே நாராயண நம்பூதிரி ஏடும் எழுத்தாணியுமாக அமர்ந்து ஏதோ எழு திக் கொண்டிருந்தார். (தொடரும்)

இயற்கை வளங்கொழிக்கும் கேரளத்துக் கிராமம் ஒன்றிற்குப் போய்ச் சில காலம் தங்கி, அங்கு வாழும் எளிய மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு ஆகியவை களைக் கண்டு மகிழ்ந்தால் எப்படி மன நிறைவு ஏற் படுமோ அத்தகையதோர் நிறைவினை அளிக்கிறது




'பல்லவி' என்ற மலையாளப்படம். சினிமாப் பார்க் கிறோம் என்ற எண்ணமே ஏற்படவில்லை. தென்னை மரங்களையும், சோலைகளையும் உப்பங்கழிகளையும் வைத் துக் கொண்டே பல்லவியைப் பாராட்டும் வகையில் தயாரித்து விட்டார்கள் அநுராகா ஆர்ட்ஸ் நிறு வனத்தார்.

ஓர் இந்து வாலிபனும் முஸ்லீம் வாலிபனும் நேசமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்கிறார்கள். தன் நண்பனின் மரணத்துக்குப் பிறகு அவன் மனைவியைச் சகோதரியாக நேசிக்கும் முஸ்லீம் வாலிபன் அவளுக்காக ஊராரிடமும் உற்றாரிடமும் எப்படியெல்லாம் போராடிப் புடமிட்ட தங்கமாக ஜொலிக்கிறான் என்பதே கதை.

ரஹீமாக வரும் சோமன் — அதிகம் பேசாமல் — கம்பீரமாக நடந்தே கண்களால் பார்த்தே நடித் திருக்கிறார். இளம் விதவை லீலாவாக வரும் ஜெய பாரதியும் ரஹீமின் முறைப் பெண்ணான ருகியாவாக வரும் ராஜகோகிலாவும் சிறப்பாக நடித்துக் காட்சிக் கும் விருந்தளிக்கிறார்கள்.

சொப்பனம் போலச் சொற்ப நாட்களே காதல் மணாளனுடன் வாழ்ந்த லீலா அடிக்கடி அவனோடு வாழ்ந்த இன்ப நினைவில் தன்னையே மறந்து விடு வது — தன் கற்பை வில்லன் சூறையாடும் அள வுக்குத் தன் நிலை மறப்பது—கலைத்தில் ஏற்க முடி யாத அதீதக் கற்பனை என்றாலும் கதைக்கே அதுதான் 'க்ளைமாக்ஸ்.' இரண்டு இனிமையான பாடல்கள். நல்ல ஒளிப்பதிவு இவையும் பல்லவிக் குப் பலம் சேர்க்கின்றன. — கௌசிகன்

பெரும்பாலான குழந்தைகள் போதுமான அளவு பால் குடிப்பதில்லை




அதனால்தான் அவர்களுக்கு கால்ஷியம்-ஸாண்டோஸ்® வில்லைகள் தேவை

இந்தியாவில் பெரும்பாலான குழந்தைகளுக்கு கால்ஷியம் பற்றுக்குறை உள்ளது.

உங்கள் குழந்தைகளுக்கோ? அவர்களுடைய பற்களுக்கும் எலும்புகளுக்கும் போதுமான அளவு கால்ஷிய ஊட்டம் கிடைக்கிறதா என்று நீங்கள் சுலபமாகச் சரி பார்க்கலாம். ஒவ்வொரு குழந்தையும் தினம் 3 பெரிய டம்ளர்கள் பால் குடிக்கிறதா? இல்லையென்றால், அவர்களுக்கு கால்ஷியம்-ஸாண்டோஸ் வில்லைகள் தேவை!

கால்ஷியம்-ஸாண்டோஸ் பற்கள் வலுவாகவும், எலும்புகள் உறுதியாகவும் வளர்ச்சி பெற உதவுகின்றது. வைட்டமின் C, D மற்றும் B12 சத்துக்களின் வளம் கொண்ட ராஸ்ப்பெர்ரி சுவை கூடிய கால்ஷியம்-ஸாண்டோஸ் வில்லைகள் ருசி மிக்கவை-குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமானவை!

கால்ஷியம்-ஸாண்டோஸ்—ஸ்விட்ஸர்லாந்தில் ஸாண்டோஸ் உருவாக்கியுள்ள, உலகிலேயே தலை சிறந்த கால்ஷியம்!



உங்கள் குழந்தைக்குக் குறைந்த பட்சம், தினசரி 4 வில்லைகள் கால்ஷியம்-ஸாண்டோஸ் தேவை. 2 வில்லைகள் ஒவ்வொரு சாப்பாட்டிற்கு முன்பும்.



கால்ஷியம்-ஸாண்டோஸ்®

வலுவுள்ள பற்களுக்கும், உறுதியான எலும்புகளுக்கும்

SANDOZ

daCunha/CS/19 N TAM

வாசற்பக்கம் நிழலாடியது. சப்பாத்தியை விண்டு வாயில் போடப் போன ராமநாதன் ''யார்?'' என்றான். காப்பி கலந்து எடுத்து வந்த விமலா சமையல் அறை வாசற்படியிலேயே சற்று நிதானித்தாள்.

தோய்த்து வெளுத்த வேட்டியும், அரைக் கைச் சட்டையும் அணிந்த அந்த வாலிபன் மெல்லத் தலை நீட்டினான்.

''யாருடா, சீனுதானே? உள்ளே வாயேன். மூணாவது மனுஷன் மாதிரி வாசலிலேயே நிக்கறியே!'' அன்பு இழையோடிய குரலில் அதட்டினான் ராமநாதன்.

மைத்துனன்தான் என்று தெளிவடைந்ததும் விமலா காப்பியைக் கணவன் எதிரில் வைத்தாள். உபசாரத்துக்காக, ''வா, சீனு! ஊரிலே அப்பா, அம்மா சௌக்கியமா? அடுத்த வாரம் மார்கழித் திருநாள் வரது. தெரியுமில்லையா? நிர்மலாவையும் அழைச்சுண்டு வரச் சொல்லு. திருநாள் முடிஞ்சு

நாதனுக்கு. மூன்றரை மைல் நடந்து வந்திருக்கிறான் உடன் பிறந்தவன். ஒரே ரத்தத்தில் உதித்தவன். சீனுவின் சோர்ந்த கண்களையும் புழுதியில் வெளுத்த கால்களையும் எண்ணெய் வழியும் முகத்தையும் உற்று நோக்கிய ராமநாதனின் இதயம் கண்ணீர் வடித்தது.

விமலா தான் கேட்டாள்: ''நல்ல காரியம் பண்ணினே போ. பஸ்ஸிலே வரதுக்கென்ன?''

''வரலாம்தான் மன்னி. வர ஐம்பது போக ஐம்பது பைசா. மொத்தம் ஒரு ரூபாய் ஆயிடறதே. குடும்பம் இப்ப இருக்கிற நிலையிலே கட்டுமா?'' என்றான் சீனு.

இந்த நிலைக்குக் காரணம் நீதானே என்று தன்னைக் குற்றம் சாட்டுவது போல் உணர்ந்தான் ராமநாதன். நெஞ்சில் தோன்றிய உறுத்தலைச் சமாளித்துக் கொண்டு, ''சரி,



ஊருக்குப் போகலாம்'' என்றான். சீனு பதில் பேசாமல் தலையை மட்டும் ஆட்டினான். அதோடு தன் கடன் தீர்ந்தது என்று மைத்துனனுக்கு டிபன் எடுத்து வர உள்ளே போய் விட்டாள் விமலா.

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே அழுத்தமான மௌனம் நிலவியது. காரியம் இல்லாமல் தம்பி தன்னை நாடி வரமாட்டானே என்று ராமநாதனின் சிந்தனை ஓடியது. வந்த காரியத்தை அண்ணன் முடித்துக் கொடுப்பானா என்று சீனுவின் மனம் கவலையில் ஆழ்ந்தது.

டிபனும் காப்பியும் எடுத்து வந்து சீனுவின் எதிரில் வைத்தாள் விமலா. ''இப்போ பஸ் ஏது சீனு? இந்த நேரத்துக்குத் திருநல்லூர் வழியா எந்தப் பஸ்ஸூம் வராதே!'' என்றாள்.

''நடந்துதான் வந்தேன் மன்னி'' என்றான் சீனு மெல்லிய குரலில். பகீரென்றது ராம

சரி. அப்படி என்ன தலைபோகிற காரியம் காரைக்கால்லே?'' என்று பாசத்தை மறைத்துக்கொண்டு கேட்டான்.

''வேலை விஷயமாத்தான்....'' சீனுவின் குரல் பாதாளத்திலிருந்து ஒலித்தது.

''வேலை விஷயமா? பொறியியல் துறையில் எதுவும் காலி இருக்கிறதா? என் காதில் விழலியே!'' என்றான் ராமநாதன்.

''பொறியியல்தான் வேணுமிங்கிறதில்லே! கிளார்க், டைப்பிஸ்ட் எது கிடைத்தாலும் சரி.''

''பி. ஈ. முதல் வகுப்பில் தேறினவன் பேசற பேச்சா இது?'' ராமநாதனின் குரல் கம்மியது.

சீனு தலையைக் குனிந்து கொண்டான். ''வேறே வழியில்லே அண்ணா. பாஸ் பண்ணி ஏழெட்டு மாசம் ஆறது. எத்தனையோ அப்ளி

கேஷன் போட்டுட்டேன். அப்பாவுக்குக் கண் பார்வை சரியில்லே. முன்னே மாதிரி கணக்கு எழுத முடியல்லே. நிர்மலா வேறே கல்யாணத்துக்கு நிற்கிறு. மொத்தத்திலே... ரொம்பச் சிரமமா யிருக்கு.''

ராமநாதன் சிரமத்துடன் நெளிந்தான். ஓரக் கண்ணால் விமலாவைப் பார்த்தான். தனக்குச் சம்பந்தமே இல்லாத விஷயம்போல் அவள் ஏதோ புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தாள்.

''சரி. வந்த விஷயத்தைச் சொல்லு.'' எவ்வளவுசீக்கிரம் சீனு அந்த இடத்தை விட்டு நகருகிறானோ அவ்வளவு நல்லது என்று தோன்றியது ராமநாதனுக்கு.

''ஒண்ணுமில்லே அண்ணா. பே அண்ட் அக்கௌண்ட் ஆபீஸிலே ஒரு கிளார்க் போஸ்ட் காலியா யிருக்கிறதாத் தெரிஞ்சது. அப்ளிகேஷனும் போட்டுட்டேன். நாளைக்கு இண்டர்வியூ....''



இடரெனக் கடுமையாக மாறியது ராமநாதனின் முகம். ''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

சீனுவுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. வந்த காரியம் ஆனாற் போலத்தான் என்று எண்ணினான்.

''நான்தான் ஊரிலே பெரிய வக்கிலா இருக்கேனே, எனக்கு பே அண்ட் அக்கௌண்ட் ஆபீசர் ரங்காச்சாரியை நன்னாத் தெரியும். அவர்கிட்டே உன்னைத் தேர்ந்தெடுக்கச் சொல்லிச் சொல்லிச் சிபாரிசு செய்யணும். அதுதானே?''

சீனு வாயே திறக்கவில்லை. துக்கம் முட்டிக்கொண்டு வந்தது.

''இதோ பார், சீனு. என்னாலே எதுவும் முடியாது. இன்னொரு தடவை சிபாரிசு என்கிற பேரிலே என்கிட்டே வந்து நிற்காதே'' என்றான் கண்டிப்பாக.

சீனுவின் உடல் அவமானத்தால் குறுகியது. ''அப்ப... நான் வரட்டுமா?'' என்று எழுந்து நின்றான். ராமநாதன் எங்கோ பார்த்துக்கொண்டு ''உம்...'' என்று முனகினான்.

''பாவம், வரப்போதான் நடந்து வந்தே. போகும்போதாவது பஸ்ஸிலே போ சீனு'' என்றாள் விமலா.

''எதுக்கு வீண் செலவு? மூன்றரை மைல் நடந்து வந்தவனுக்குத் திரும்ப மூன்றரை மைல் நடந்து போறது பெரிய சிரமமா?'' என்றான் ராமநாதன் எகத்தாளமாக.

சீனு பொங்கிய கண்ணீரை அடக்கிக்கொண்டு விடுவிடுவென்று படியிறங்கி நடந்தான்.

மறுநாள் பகல் பன்னிரண்டு மணி வெய்யிலில் திருநல்லார் சாலையில் பள்ளி வாசலைத் தாண்டி வேகமாக நடந்து கொண்டிருந்தான் சீனு. படபடவென ஸ்கூட்டர் ஒன்று அவனை உரசினாற்போல் வந்து நின்றது. ''சீனு!'' என்று அன்புடன் அழைத்தபடி இறங்கினான் ராமநாதன். ''இண்டர்வியூவுக்கு நீ வரலையாமே! ஏண்டா? ரங்காச்சாரிகிட்டே சொல்லி வைச்சிருந்தேனே. இப்பத்தான் போன் பண்ணினார். இண்டர்வியூவுக்கே வரலேன்னு!'' என்றான்.

சீனு பதில் பேசாமல் நின்றான்.

''நேற்று அப்படி முகத்திலே அடிச்சமாதிரி பேசினேன்னு என்மேலே கோபமா இருக்கும் உனக்கு. சீனு! உன் மன்னியோட தம்பி அரைகுறையாகப் படிப்பை நிறுத்திட்டு ஊரைச் சுத்திண்டிருக்கான். அவனுக்கு இந்த ஊரிலே வேலை பண்ணி வைக்கணும்னு உன் மன்னி சொல்லியிருக்கா. அவனுக்கு நான் சிபாரிசு பண்ணி இந்த ஊர்லே வேலை வாங்கிக் கொடுத்தா, அப்புறம் நான் கௌரவமா வாழ்க்கை நடத்த முடியாது. இப்போ உனக்காக நான் சிபாரிசு செய்யறேன்னு வெச்சுக்கோ, இதுவே பலமான காரணமா அமைஞ்சிடும் அவளுக்கு. தன் தம்பியை வரவழைச்சு வெச்சு அவனுக்கும் வேலை வாங்கித் தாணும்னு வற்புறுத்தத் தொடங்கிடுவா. என்னாலே மறுக்கவும் முடியாது. அதனாலே..''

பேச்சை நிறுத்திய ராமநாதனைப் பார்க்கத் தலை தூக்கியபோது சீனுவுக்குப் பரிதாபமாக இருந்தது. ''அண்ணா! உன் அதிர்ஷ்டம் உனக்குச் சிரமம் வைக்கக் கூடாது என்று எனக்கு வேலை வாங்கித் தந்து விட்டது. பாண்டிச்சேரி மீன் துறையில் உதவிப் பொறியாளர் வேலைக்கு உத்தரவு வந்துவிட்டது!'' என்றான்.

''அப்படியா?'' என்று தெரியாதது போல் ராமநாதன் வினவினான். என்றாலும் தன் முயற்சி பலித்த செய்தியைக் கேட்டபொழுது நெஞ்சில் இளநீராக இனித்தது.



சிங்கப்பூர் சினிமா இன்டர் நேஷனல் கார்ப்பரேஷன், மானேஜிங் டைரக்டரும், ரீஜினல் சூப்பர்வைஸருமான ஸ்ரீ K. S. வைத்தியநாதன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி **கே. வி. விசாலாக்ஷிக்**கும், சுசீந்திரம் ஸ்ரீ S.M. மீனாட்சிசுந்தரம் அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **எம். கிருஷ்ணசுவாமி**க்கும் சமீபத்தில் பம்பாயில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்



சென்னை, சர். எம்.ஸி.டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி முந்நாள் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எஸ். கே. ராமச்சந்திரன் அவர்கள் குமாரத்தி சௌ. **R. லலிதா**வுக்கும், சென்னை ஸ்ரீ ஆர். சுப்ரமணிய அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி **R. S. ராமச்சந்திர**னுக்கும், 24-1-77 அன்று சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது

வாழ்க மணமக்கள்

வட்டமேஜை: பெண்ணுரிமை பேச்சோடு சரியா?

□ பாரதப் பெண் குலத்துக்கு இன்றுள்ள முக்கியமான உரிமைகள்: வோட்டுப் போடும் உரிமை, விவாக ரத்து உரிமை, கருச் சிதைவு செய்துகொள்ளும் உரிமை; குழந்தை பெறு திருக்க அறுவைச் சிகிச்சைக்கு உட்படும் உரிமை, கல்வி கற்று வேலை யில்லாமல் திண்டாடும் உரிமை.

வரதட்சிணைக் கொடுமை பற்றிப் பிரமாத மாகப் பேசுகிறார்கள். பெண்கள் பொருளாதார ரீதியில் ஆண்களை நம்பி வாழ வேண்டியிருக்கும் நிலை நீடிக்கும் வரை ஏதேனும் ஒரு விதத்தில் வரதட்சிணைக் கொடுமையும் நீடிக்கவே செய்யும்.

நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தில் மனைவியின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஏராளமான வாலிபர்களும் யுவதிகளும் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் தங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய சொத்து பறிபோவதைக் கண்டு வெறுப்பும் கோபமும் தாபமும் அடைந்துள்ளனர்.

வடக்கே ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட விவாக ரத்து வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளனவாம் — மனைவிகளுக்குரிய நகர்ப்புற நிலத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்தில். புனிதமான விவாக பந்தத்தைக்கூட அழிக்கும் விதமாகவா ஒரு சட்டம் இயற்றுவது?

புது ஆட்சி உருவாகிப் பிரச்னைகளை அது நிதானமாக ஆலோசிக்க அவகாசம் பெறும் வரை இச்சட்டம் ஒத்திப்போடப்பட வேண்டும்.

சென்னை—34
10—2—77 டி. கே. ஜனனி

□ 'அரக்கோணம் ராஜாஜி சிலை திறப்பு விழாவில்' என்ற தொகுப்பில் இந்தியாவிலேயே முதன் முதலாக ராஜாஜி அவர்களின் முழு உருவச் சிலையை ஆளுனர் திறந்து வைத்தார் என்று இருப்பது தவறு. கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கு முன்பே மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ராஜாஜி அவர்களின் முழு உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டு விட்டது.

தூத்துக்குடி
29—1—77 மா. வயி. இர. தங்கப்பாண்டியன்

□ திரு ஜெகஜீவன்ராமின் ராஜினாமா விவகாரம் "சந்தர்ப்பவாத"மென மக்கள் குழம்பி வரும் நிலையில் திரு கிருபளானி அவர்கள் தலையங்கம் விளக்கம் கூறும் வகையில் அமைந்துள்ளது.

அறந்தாங்கி,
10—2—77 வி. எஸ். அனந்தராமன்

□ மாதர் பகுதியில் தொட்டிலில் உறங்கும் குழந்தைகள் தொட்டிலை ஈரமாக்கிவிட்டால் தாய்மார்களின் கவனத்தை உடனே ஈர்ப்பதற்காக ஓர் எலெக்ட்ரானிக் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியிருந்தது.

பல வருடங்களுக்கு முன்பாகவே நமது நாட்டிலேயே இது போன்ற எலெக்ட்ரானிக் சாதனம் தயாரிக்கப்பட்டு Radio Supply Stores என்ற நிறுவனத்தினரால் ரூ. 28க்கு விற்கப்பட்டு வந்தது.

திருநெல்வேலி
4—2—77 கோதண்டராஜன்

□ தங்கள் நாட்டின் பெயரைக் கெடுக்கக் கூடிய எவரையும் வெளி நாடுகளுக்குச் செல்ல ரஷ்ய அரசு அனுமதியளிக்காது. எந்த ரஷ்யப் பயணியும் மதுர நாயகியிடம் அவ்வாறு முறைகேடாக நடக்க மாட்டான். மீறி நடந்ததாக அறிந்தால் அவன் எதிர்காலமே ருஷ்யாவில் பாதிக்கப்படும்! ரஷ்ய நாட்டு மக்களிடம் இல்லாத ஒழுக்கக் குறைவைக் கற்பித்துச் சொல்வது நியாயமா? பொதுவுடைமை எதிர்ப்பு இப்படி உருவெடுக்க வேண்டாம்.


குத்தாலம்
4—2—77 பா. இராமன்

□ "மதுர நாயகி" கதை மிக அழகாகவும் இயற்கையாகவும், நளினமாகவும் வளர்ந்து மதுரமான சுவையைத் தருகிறது. மதுரைமா நகரைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கும் இந்த அசாதாரணக் கதையை, கற்பனை என்றே எண்ண முடியவில்லை!

மதுரை
4—2—77 ஜி. பி. மாலதி

□ சென்ற இதழில் "பாண்டிச் சேரிதான் இன்னமும் தண்ணியிலே மூழ்குகிறது" என்று ஓர் அன்பர் வருத்தப்பட்டுக் கொண்டார். பாவம் — அவர் எங்கள் ஊருக்கு வந்ததே இல்லை போலும். எங்கள் பாண்டிச் சேரித் தெருக்களில் விழுந்து கிடப்பவர்களைத் தட்டி எழுப்பிக் கேட்டுப் பார்த்தால் விவரம் தெரியும். பெரும்பாலும் அவர்கள் வெளியூர்க்காரராகவே இருப்பார்கள். அதனால் பாண்டிச்சேரிக்காரர்கள் குடிக்க மாட்டார்கள் என்று பொருளல்ல. குடிப்பார்கள் — அளவோடு.

பாண்டிச்சேரி—3
10—2—77 சகுந்தலா அமலன்



நடனக் கலை மீது காதல் மட்டுமின்றி நடனக் கணிகையரையே காமுற்று விட்டான் பாண்டியன் என்று பாண்டிமாதேவி உணர்ந்து விட்டாள். அதனால், 'தலை நோகிறது' என்று மன்னனிடம் பொய்யாக ஒரு காரணத்தைக் கூறிவிட்டு, நடனம் முடிவதற்கு முன்பே திடீரென்று அவையிலிருந்து வெளியேறி விட்டாள்.

பாண்டியன், அரசியாரின் மன நிலையை அறிந்து கொண்டான். அரசவையைக் கலைத்து விட்டு, அரசியாரின் ஊடலைத் தீர்க்கும் உள்ளத்துடன் அந்தப்புரத்திற்குப் பணிப் பெண்கள் சூழ விரைந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்திலே, பொற்கொல்லன் அந்தப்புரத்தின் நுழைவாயிலில் மன்னனைக் கண்டு, அவன் காலடியில் விழுந்து, பலவாறு துதிபாடி அவனைப் புகழ்ந்து விட்டுக் கீழ் வருமாறு கூறினான்:



சிலம்புச் செல்வம் ம.பொ.சி

''கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்
துன்னிய மந்திரம் துணையெனக் கொண்டு,
வாயிலாளரை மயக்கு துயில் உறுத்து
கோயில் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்து, என்
சில்லைச் சிறுகுடில் அகத்து இருந்தோன்''

''அரசே! கன்னக்கோல் இல்லாமலும், கவைக்கோலின்றியும் அரண்மனையிலுள்ளோர் அனைவரையும் உறங்க வைக்கும் மந்திரம் ஒன்றையே துணைகொண்டு வாயிற்காப்போரையெல்லாம் மயக்கித் துயிலும்படி செய்து, அரண்மனைச் சிலம்பினைக் கவர்ந்து சென்ற கள்வன் பிடிபட்டு விட்டான்! அவன் எளியேனுடைய சிறிய குடிசையிலே இருக்கின்றான்.''

'அரசியின் ஊடலைத் தீர்க்க வேண்டுமே' என்ற கவலையுடன் சென்று கொண்டிருந்த மன்னன் சிறிதும் சிந்தியாதவனாகி, காவலர் இருவரைக் கூவியழைத்து,

''...ஈங்கு என்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்,
கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு!''

''என் தேவியின் காற்சிலம்பு பொற்கொல்லனிடம் பிடிபட்ட கள்வனின் கையகத்தே இருந்ததென்றால், அவனைக் கொன்று விட்டு, அச்சிலம்பினை இங்கே கொண்டு வருக!'' என்று ஆணை பிறப்பித்தான்.

கள்வனைச் சிறையில் வைக்குமாறு ஆணையிட்டு, மறுநாள் அரசவைக்கு அவனைக் கொண்டுவரச் செய்து, அவையிலுள்ள அமைச்சர்களுடன் ஆலோசித்து, அவனுடைய வாக்குமூலத்தையும் கேட்டு அதன் பின் தீர்ப்பளிக்க வேண்டியது அரசனுடைய கடமை.

ஆனால், அரசியின் ஊடலால் மனக் குழப்பமடைந்திருந்த பாண்டிய வேந்தன், அந்தக் கடமைகளைக் கைவிட்டான்.

''என் தேவியின் காற்சிலம்பு கள்வனுடைய கையில் இருந்ததென்றால், அவனைக் கொன்று, அச் சிலம்பு கொணர்க'' என்பது காவலர்களுக்கு மன்னன் பிறப்பித்த ஆணை.

இதன்படி, சிலம்பு அரசியினுடையதுதானா? சிலம்பைக் கையில் வைத்திருப்பவன்தான் அதைத் திருடினானா? — என்பனவற்றையெல்லாம் அறிந்து கொள்ளும் பொறுப்பைக் கொலைஞரிடமே விட்டுவிட்டான் பாண்டிய வேந்தன். இதற்கு இளங்கோ,

'' வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான்''

என்று சமாதானம் கூறுகின்றார்.

அரசன் கோவலனுக்கு மரண தண்டனை விதித்தது கண்டு, பொய்த் தொழில் கொல்லன் பூரிப்படைந்தான். கொலைஞர்களை அழைத்துக் கொண்டு கோவலனை அணுகினான். அணுகியவன்,

'' வலம்படு தானை மன்னவன் ஏவ,
சிலம்பு காணிய வந்தோர், இவர்''

''மன்னன் ஏவ, நின் கையில் உள்ள சிலம்பினைக் காண இவர்கள் வந்திருக்கிறார்கள் '' என்று கோவலனிடம் உண்மையை அரைகுறையாகச் சொன்னான். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

உங்கள் சிரமத்தின் பலன் தான் என்ன?



இத்தனை சிரமப்பட்டு நீங்கள் என்ன பயன் பெறுகிறீர்கள்? உங்கள் விலை மதிப்பற்ற நேரம் விரயமாகிறது. உங்களுக்கு சிரமமாவது குறைகிறதா? அதுவும் இல்லை. பணச் செலவாவது குறைகிறதா? ஹூஹூம். பின் எதற்காக இத்தனை கஷ்டங்கள்? உடன் சுவேகாவின் துணை கொள்ளுங்கள். நேரமும் வீணாகாது. சிரமமும் எதுமில்லை. தவிர, உங்களுக்குக் கிடைப்பது ஒரு மிகவும் சிக்கனமான உல்லாச சவாரி!

சுவேகா—ஒரே லிட்டரில் அறுபது கிலோமீட்டர்கள்! பஸ்ஸை விட சிக்கனமானது.

யோசித்துப்பாருங்கள். உங்கள் சுவேகா மோபெட் ஒரே லிட்டர் பெட்ரோலில் உங்களை அறுபது கிலோமீட்டர்கள் கொண்டு செல்கிறது. கிடைக்கும் சவாரியோ உல்லாசமானது! நீங்கள் இனி நிரம்பி வழியும் பஸ்ஸில் நெருக்கடியில் இடிபட்டு மூச்சுத் திணறி அவதியுற அவசியமில்லை. வாடகை வண்டிகளுக்கும் சக்திக்கு மீறிய வாடகை அழக் கொடுக்க வேண்டியதில்லை.

அது மட்டுமா? உங்கள் சுவேகா தனது சிறந்த 'பிக்-அப்', உறுதியான ஃப்ரேம் வடிவமைப்பு மற்றும் 'செயின்-ட்ரைவ்' ஆகியவற்றின் துணை கொண்டு உங்களுக்கு சீரான வேகத்துடன் கூடிய சிறந்த ஓட்டத்தை அளிக்கிறது. 'ஹார்ட்க்ரோம்ட்' அலுமினியம் சிலிண்டர்கள் கொண்ட ஒரே மோபெட் சுவேகா மட்டுமே. ஆச்சரியமென்ன பின், உங்கள் சுவேகா அயராது உழைப்பதில்!

ஊம், தயங்காதீர்கள். விரைவிலேயே உங்கள் வாழ்வில் சுவேகாவின் சுகம் மலரட்டும். அது மிகவும் சிக்கனமானது! பராமரிப்பிலும் கூட...

பயணச் செலவை மிச்சப்படுத்த இதோ ஒரு உல்லாசமான வழி



Suvega

சுவேகா-இந்தியாவில் மிகவும் அதிகம் விற்பனையாகும் மோபெட்

மோபெட்ஸ் இந்தியா லிமிடெட்
திருப்பதி, ஆந்திர பிரதேசம்

SAA MIL 2379